கல்கி

KALKI 7.2.93 ரூ. 3.00



சேதி கேட்டோ!


பதவி படுத்தும் பாடு!

அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் இப்ராஹிம் சுலைமான் சேட்டுக்கும் கேரள முஸ்லிம் லீக் கட்சியின் தலைமைக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அயோத்தி பிரச்னையில் நரசிம்மராவ் நடந்து கொண்ட முறையை அகில இந்திய முஸ்லிம் லீக் தலைமை ஆரம்பத்தில் கண்டித்துப் பேசியது. ஆனால் கேரள முஸ்லிம் லீக் தலைமையோ பிரதமரைப் பெரிதாகக் கண்டித்துப் பேசவில்லை. இதற்குக் காரணம், கேரளாவில் முஸ்லிம் லீக் கட்சி காங்கிரஸ் கூட்டணியில் இருப்பதோடு, முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள் என்பதுதான்.

இந்த நிலையில் பாணக்காடு சிகாப் தலைமையில் ஒரு கேரள முஸ்லிம் லீக் கோஷ்டி புது டெல்லி சென்று, இப்ராஹிம் சுலைமான் சேட்டைச் சந்திக்காமல் கலவரப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தது. கூடவே பிரதமர் நரசிம்மராவையும் சந்தித்துப் பேசிவிட்டுக் கேரளா திரும்பியது. இந்தச் சம்பவம் இப்ராஹிம் சுலைமான் சேட்டுக்கு ஆத்திரத்தை மூட்டியுள்ளதாகத் தெரிகிறது. அதன் எதிரொலியாக இப்ராஹிம் சுலைமான் சேட் சமீபத்தில் கேரளா வந்து கலவரப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். அகில இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவராக இருந்தும் அவரது கேரள வருகை பற்றிய தகவல் கேரள முஸ்லிம் லீக் தலைமைக்குத் தெரியப்படுத்தப் படவில்லை. சேட், கேரளா வந்துள்ள செய்தியை அவரது ஆதரவாளரான ஒரு எம்.எல்.ஏ.தான் பத்திரிகைகளுக்குக் கொடுத்துள்ளார். இது பற்றி பத்திரிகை நிருபர்கள் கேரள முஸ்லிம் லீக் தலைமையிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, ''அப்படியா? இப்ராஹிம் சுலைமான் சேட் கேரளா வந்துள்ளாரா? எங்களுக்குத் தெரியாதே!'' என்று கூறிவிட்டார்கள்.

இது ஒருபுறம் இருக்க, சிறுபான்மை வினா பற்றி ஏ.கே. அந்தோணி கூறிய ஒரு கருத்துக்குக் கண்டனம் தெரிவிக்கக் கேரள முஸ்லிம் லீக்கின் பொதுச் செயலாளர் கொரம்பயில் அகமது ஹாஜி முடிவு செய்திருந்தார். அதற்குள் ஏ.கே. அந்தோணி மந்திரியில் அமைச்சராகி விடவே, எதற்கு வீண் மோதல் எனக் கருதிக் கண்டனம் தெரிவிக்கும் எண்ணத்தையே கை விட்டு விட்டார்!


'ஆரியக்கூத்தாடினாலும் தாண்டவக் கோனே, காரியத்தில் கண் வையடா தாண்டவக்கோனே' என்று இதைத்தான் பாடினார்கள் போலும்!



■ ஏ.கே. அந்தோணி : ''எதற்கு வீண் மோதல்!''

சபரிமலையில் இந்த வருடம் காணிக்கையாக 13.5 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. இதில் 75 லட்சம், ரூபாய் நாணயங்கள். இந்த நாணயங்களைச் சாக்கு மூட்டைகளில் கட்டினார்கள். மொத்தம் 4,000 மூட்டைகள் இருந்தன. இவற்றைக் கழுதைகளில் ஏற்றிச் சபரி மலையில் இருந்து பம்பாவுக்குக் கொண்டு போனார்கள். இந்தக் கழுதைகளை, ''ஹை, ஹை, ஹை'' என்று போலீசார் ஓட்டிச் சென்றதுடன் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாவலாகவும் வந் தனர். பம்பா வந்ததும் இந்த மூட்டைகளை லாரிகளில் ஏற்றி போலீஸ் காவலுடன் தனலட்சுமி பேங்கில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். ''போயும் போயும் எங்களுக்குக் கழுதைகளைப் பாதுகாப்பாக ஓட்டி வரும் வேலையாகி விட்டதே!'' என ஒரு போலீஸ்காரர் வேடிக்கையாகக் கூறினார்.

– எஸ்.எஸ். மணி.



✱ வெளிநாடுகளில் நடனமாடும் நீரூற்றுக்கள்...

நால் ஆடும் நீரூற்றுக்களைப் பார்க்கும் போது ஏதோ இந்திர ஜால வித்தை போல் வியப்பூட்டுகிறது.


''எந்த காஸெட்டைக் கொண்டு வந்து போட்டாலும் அந்த இசைக்குத் தகுந்தபடி இந்த நீரூற்றுக்கள் நடனமாடுமா?''

நடனமாடும் நீரூற்று!

இசைக்குத் தகுந்தபடி மனிதர்களால் மட்டும்தான் நடனமாட முடியுமா? ''நீரூற்றுக்களாலும் நடனமாட முடியும்!'' என்பார்கள் சிங்கப்பூரிலுள்ள செந்தோஷா தீவுக்குச் சென்று வந்தவர்கள்.

நானும் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். ஏன் அதைப் போல் சென்னையிலும் செய்யக் கூடாது? என்று யோசித்தேன். அதன் விளைவுதான் இந்த நடனமாடும் நீரூற்று!'' என்று தாம் வடிவமைத்திருக்கும் நீரூற்றைக் காண்பித்தார் லாரன்ஸ் வின்சென்ட்.

கம்ப்யூட்டரோடு இணைக்கப்பட்டு அதன் கட்டுப்பாட்டில் இயங்குகிறது நீரூற்று. இசை நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்ட காஸெட்டைப் பாட விட்டதும் அந்த இசையின் ஏற்ற இறக்கங்களுக்குத் தகுந்தபடி பீறிட்டெழும் நீரூற்றுக்கள் மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைந்து அசைந்து ஆடுகின்றன. வண்ண வண்ண விளக்குகளை நீரூற்றுக்களுடன் இணைத்திருப்ப



✱ லாரன்ஸ் வின்சென்ட்

''ஆடும். கர்நாடக இசைக்குத் தகுந்தபடி கூட ஆடும். ஆனால், முன்னதாக அந்தக் காஸெட்டிலுள்ள இசைக்குத் தக்கபடி ஆட முதலில் அந்த இசையைக் கம்ப்யூட்டரில் புரோகிராம் செய்ய வேண்டும். அப்படிச் செய்து விட்டால் அந்த இசை கம்ப்யூட்டர் மெமரியில் பதிந்துவிடும். பிறகு அந்தக் காஸெட்டின் கோட் நெம்பரைக் கொடுத்து விட்டால் போதும், கம்ப்யூட்டர் நீரூற்றுக்களை அதற்குத் தகுந்தபடி ஆடச் செய்து விடும்!''

''நீங்கள் வடிவமைத்துள்ள இந்த நடன நீரூற்றைப் பொது மக்களின் காட்சிக்கு வைத்திருக்கிறீர்களா?''

''இன்னும் இல்லை. காரணம், இன்னும் முழுமையாக இதை நான் செய்து முடிக்கவில்லை. சிங்கப்பூரிலுள்ளது சுமார் மூன்று கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து அமைக்கப்பட்டது. நான் அமைத்துள்ளதோ சுமார் ஏழு லட்சம் ரூபாயில் வடிவமைக்கப்பட்டது. இதற்கு இன்னும் நிறைய அலங்காரம் செய்ய வேண்டியது



✱ நடனமாடும் நீரூற்று...

பாக்கியிருக்கிறது. அப்போதுதான் சிங்கப்பூரைப் போல பல்லாயிரக்கணக்கான மக்களைக் கவர முடியும்!''

''இப்படியோர் எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?''

''நான் ஏற்கெனவே நீரூற்றுக்களை வடிவமைக்கும் பணியைத்தான் செய்து கொண்டிருக்கிறேன். எம்.ஜி.ஆர். சமாதியில் கூட நான்தான் செய்தேன். மைசூரிலுள்ள பிருந்தாவன் தோட்டத்திலும் செய்திருக்கிறேன். பெரிய பெரிய ஹோட்டல்களிலும் செய்திருக்கிறேன்! ஆனால் அவையெல்லாம் வெவ்வேறு அழகான வடிவங்களை அசையாமல் காட்டக்கூடிய நீரூற்றுக்கள்தான். சிங்கப்பூரில் பார்த்த நடனமாடும் நீரூற்றுத்தான் என்னை இந்த முயற்சியில் ஈடுபடத் தூண்டியது!''

''நீங்கள் வடிவமைத்துத் தரும் நீரூற்றுக்களும் சரி, இந்த நடனமாடும் நீரூற்றும் சரி பொது இடங்களில் மக்கள் பார்த்து ரசிக்கக்கூடியதாக மட்டும்தானே இருக்கின்றன. அவர்கள் தங்கள் வீட்டு வரவேற்பறைகளிலும் வைத்து அலங்கரிக்கக்கூடிய அளவில் செய்ய முடியுமா?''

''நடனமாடும் நீரூற்றுத்தான் லட்சக்கணக்கில் செலவு செய்ய வேண்டிய விஷயமே தவிர, மற்றவை மத்தியதர வகுப்பினரும் உபயோகப்படுத்தும் விதத்தில்தான் இருக்கின்றன. இதோ, என் அலுவலக வரவேற்பறையிலுள்ள இதைப் பாருங்கள்!'' என்று அதை இயக்கிக் காண்பித்தார்.

சின்ன அளவில் ஒரு நீரூற்று. சுவிட்சைப் போட்டதும் ஒரு முட்டைக் கோஸின் அளவுக்குப் பந்து போல் தண்ணீர் விரிந்து விழுகிறது.

''இதற்கு ஏழாயிரம் ரூபாய்தான் செலவு. பூச்சாடி மாதிரி இருக்கும் இதை நம் வசதிக்குத் தகுந்தபடி இடம் மாற்றியும் வைத்துக் கொள்ளலாம். அருகில் சென்று காது கொடுத்துக் கேட்டாலும் அதற்குள் இயங்கும் மோட்டார் சப்தமே கேட்காது. காரணம், இது வெளிநாட்டு மோட்டார். இது மாதிரி ஏழாயிரம் ரூபாயிலிருந்து பதினேழாயிரம் ரூபாய் வரை நீரூற்றின் அளவுக்குத் தகுந்தபடி செலவு செய்து வீடுகளிலும் வைத்துக் கொள்ளலாம்!'' என்கிறார் எலக்ட்ரிகல் எஞ்ஜினியரான லாரன்ஸ் வின்சென்ட்.


நடனமாடும் நீரூற்று என்பதை முதன் முதலில் - 1930-ல் - வடிவமைத்தவர் ஜெர்மனியைச் சேர்ந்த ஓட்டோ பெரிஸ்தவிக் (Otto Przystwik) என்பவர். என்றாலும் அவரது கண்டுபிடிப்பு உலக அளவிலான கவனத்தைக் கவர்ந்தது, 1952-ல் மேற்கு பெர்லினில் நடந்த தொழில்துறைப் பொருட்காட்சியில் தான். அதன் பிறகு பல்வேறு நாடுகளிலும் இந்த நடனமாடும் நீரூற்று பிரபலமாகத் தொடங்கியது. சிங்கப்பூரிலும் அமைக்கப் பட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர ஆரம் பித்தது.

ஆயினும் இந்தியாவில் இதுவரை அப்படியோர் முயற்சியே நடைபெறவில்லை. சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் வாய்ப்புள்ள நமது சுற்றுலாத் துறையினர் கூட அது பற்றிச் சிந்திக்கவேயில்லை என்கிற சூழ்நிலையில் தான், தனியொரு மனிதரான லாரன்ஸ் வின்சென்ட் இந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டிருக்கிறார்.


இவர் வடிவமைத்திருக்கும் இந்த நடனமாடும் நீரூற்று, இந்த ஆண்டே சென்னையில் நடக்கும் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்க வேண்டும். ''அரசு என்னை அழைத்தும் கூட பல்வேறு காரணங்களால் என்னால் வைக்க முடியவில்லை. எனினும் அடுத்த ஆண்டு நிச்சயம் நீரூற்றின் நடனத்தைப் பொது மக்கள் கண்டு களிக்கலாம்!'' என்று கூறுகிறார் லாரன்ஸ் வின்சென்ட்.


– பிரின்ஸ்

அட்டை வண்ணப்படம் : யோகா



★ இதுபோன்ற நீரூற்றுக்களை வீடுகளிலும் வைக்கலாம்...






விமர்சனம்

அரசுக் தொட்டில் என்ன ஆவது?

●● தாய்க்குலம் ஆகவிருக்கும் மனைவியர் குலத்தின் கவனத்திற்கு. நீங்கள் ஆண் அல்லது பெண் குழந்தையை விரும்பியிருக்கலாம். ஆனால், ரிஸல்ட் சமயங்களில் எதிர்மறையாக இருந்து விடக்கூடும். அதன் பொருட்டு, லேசான ஏமாற்றமாவது இல்லாமல் இருக்காது. ஆனால், இனி அந்தப் பிரச்னை உங்களுக்கு இல்லை. நீங்கள் விரும்பும் குழந்தை, உங்களுக்குப் பிறக்கும்! ஸ்கேனிங்கில் பெண் என்று தெரிந்தால் - நீங்கள் ஆண் குழந்தையை விரும்புவீர்களானால் - (அல்லது Vice versa.) அந்தச் சிசுவை 'பால் மாறாட்டம்' பண்ணி விடுகிறார்கள். ரொம்ப சுலபம். ஒரு மணி நேர சமாசாரம். வியக்க வைக்கும் விஞ்ஞான வளர்ச்சி! இங்கல்ல - லண்டன் ஜெனரல் கிளினிக்கில். போன வெள்ளி மாலை பி.பி.ஸி. ஒளிபரப்பில், மேற்படி சாகசத்தை, டாக்டர்கள் விளக்கப் பார்த்ததில் பிரமிப்பு+மலைப்பு+சிலிர்ப்பு. அது சரி, அது இங்கு வந்து விட்டால் அரசுத் தொட்டில் என்ன ஆவது?

●● 'உயர்ந்தவர்கள்' - இது போன வார நாடகம். நடிகர்கள் யாவரும் பக்கம் பக்கமாய் வசனம் பேசினார்கள். பிழியப் பிழிய அழுதார்கள். (மேக்கப் கலையாமல்) ஓர் உன்னதமான செண்ட்டிமெண்ட் 'காவியம்' உருவாக்குகிற முயற்சியில், தயாரிப்பாளர் வெற்றி பெற்றிருப்பதாகத்தான் சொல்ல வேண்டும்; ஏதோ துக்க வீட்டுக்குப் போய் வந்த உணர்வு ஏற்படுவது தவிர்க்கக் கூடியதாக இல்லை.

●● இப்போதெல்லாம் டீ.வியில் தினம் ஒரு சினிமா, தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு. அத்தனையையும் பார்க்க வேண்டும் என்பதில்லை. ஆனால் பார்த்தே ஆக வேண்டியவைகளைப் பார்க்காமல் இருந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்! 20/1 புதன் இரவு 'சலாம் பாம்பே'. இந்தியத் திரைப்பட சாதனைகளின் மைல்கல் என்பேன். காரணம் மூன்று. 1. குண்டூசி மேல் டான்ஸ் ஆடுகிற, சிக்கல் வாய்ந்த 'தீம்'. 2. துணிச்சல் மிகுந்த காட்சிகள், வசனங்கள். 3. மிக வேகமான காட்சி அமைப்புகளைக் கொண்ட முதல் ஆர்ட் ஃபிலிம். மிக மிகத் தேர்ந்த கலைஞருக்கு (இந்தப்படம் - மீரா நாயர்) மட்டுமே இவையெல்லாம் சாத்தியம். அப்புறம் தமிழ் சப்-டைட்டில். முக்கியமான சீன்களில் ஜகா வாங்கினதையும், தேவையில்லாத கெட்ட வார்த்தைப் பிரயோகங்களை கர்மசிரத்தையாய் மொழி பெயர்த்ததையும் தவிர, பெரிசாகக் குறை ஏதுமில்லை.



✱ சர்மா : எதிர் பார்த்த உபதேசம்

●● வியாழன் இரவு 'சிந்திக்க ஒரு நொடி'. திருக்குறள் குவிஸ். குவிஸ் மாஸ்டர் வ.வே.சு. பயங்கர வளவளா. நிகழ்ச்சி நேரம் அரைமணியில் பேர்பாதி அவரது பேருரை. எட்டாங்கிளாஸில் படித்த குறள்களை மட்டும் வைத்துக் கொண்டு, ஒப்பேற்ற முயன்று படு தோல்வி கண்ட ஆண்களும், பெண்களும்.

●● 26 - ஆம் தேதி குடியரசு தினத்தை முன்னிட்டு, 25 - இரவு 'என் இனிய இயந்திரா' கட். பதிலாக, இருக்கிற கொஞ்ச நஞ்ச தேச பக்தியையும், சுத்தமாக சபீனா போட்டு 'கிளீன்' பண்ணி விடுகிற தேச பக்திப் பாடல்கள். தொடர்வதாக சங்கர் தயாள் சர்மாவின், ஹிந்தி மற்றும் ஆங்கில உரை - இம்மி பிசகாமல் எதிர் பார்த்த உபதேசம். ஒரே ஆறுதல், இந்த வருஷம் பத்ம பூஷண், பத்ம ஸ்ரீ சடங்கு இல்லாததே!

●● மியூஸிக் டீ.வியின் தற்போதைய ராட்சஸ பிராபல்யத்துக்கு அதன் நிகழ்ச்சிகளை விடவும், அவற்றை 'அனௌன்ஸ்' பண்ணுகிறவர்கள் முக்கிய காரணம்! குறிப்பாக 'நோனி'. அப்படி ஒன்றும் அதிரூப அழகு சுந்தரி இல்லை என்றாலும், 'அனிமேஷன்' அற்புதங்களின் பின்னணியில் இவர் பேசுகையில் பண்ணுகிற பார்வைக் குறும்புகள், தேன் தடவிய தொனி, ஒரு இடத்தில் நிற்காமல் அப்படியும், இப்படியுமாய் நெளிகிற நளினம் யாருக்கும் பிடிக்கும். கூடிய சீக்கிரம் மயிலாப்பூர் முண்டகக் கண்ணி அம்மன் தெரு பக்கம் அகில இந்திய 'நோனி' ரசிகர் மன்றம் ஆரம்பிக்கப்பட இருப்பதாக அதிகாரபூர்வத் தகவல்கள்!

– கிச்சா

பட விளையாட்டு-2

பரிசு ரூ. 250

இந்த வாரம் ஒட்டுப் படத்தில் இடம்பெற்றுள்ள நான்கு பிரபலங்களின் பெயர்களை வரிசைப்படி எழுத முடிகிறதா பாருங்கள்...



1	2
3	4

1. ....

2. ....

3. ....

4. ....

உங்கள் பெயருடன் விலாசமும் எழுதி, இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்ப வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ரூ 250 பரிசு. ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும். பத்துப் பேருக்கு மேல் சரியான விடை எழுத நேர்ந்தால் குலுக்கலில் பத்து வாசகர்கள் மட்டும் பரிசு பெறுவார்கள்.

உறைமீது 'பட விளையாட்டு - 2' எனக் குறிப்பிட்டு உங்கள் விடைகளை அனுப்ப கடைசி தேதி : 17.2.93

உங்கள் பெயர் : ....

விலாசம் : ....

....

....

ஜாதி மல்லி

'கெட்டும் பட்டணம் சேர்' என்பது போல் வெவ்வேறு காரணங்களுக்காக உதகை வந்து சேரும் குஷ்பு, முகேஷ், வினித், யுவராணி. சில காலம் இந்த நால்வரும் ஒரே கூரையின் கீழ் வசிப்பதற்கு மறைமுகக் காரணமாக விளங்கும் மோசடி தம்பதி மதன்பாப், விசித்ரா.

இந்த ஆறு பேரையும் சதுரங்கக் காய்களாகப் பயன்படுத்தி நகர்த்திச் சென்று உருவாக்கியுள்ள நிகழ்ச்சிக் கோவையில் பாலசந்தர் சொல்ல வரும் செய்தி : 'மதவெறியும் இனக்கலவரங்களும் தேவைதானா? பெற்ற சுதந்திரம் இதற்குத்தானா?'

தேசிய ஒருமைப்பாட்டு நோக்கம் அவர் படைத்துள்ள பாத்திரங்களிலும் பளீர். மலையாளம் பேசுகிறவர், தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர், தமிழர், பஞ்சாபி - தமிழ் கலப்பினத்தவர், இந்து, முஸ்லிம் என ஒரு மினி இந்தியா.

வசனங்களில் இந்திய மொழிகள் சிலவும் ஆங்கிலமும் பரவலாக இடம்பெற்றிருந்தாலும், அந்தக் கலவையைப் புரிந்து கொள்வதில் குழப்பம் இல்லை. டௌன் டு எர்த் வசனங்கள்.

கஜல் பாடலும் கர்நாடக இசையும் ஒன்று சேர்ந்து ஜுகல் பந்தியாக ஆவதற்கு விழைகின்றன. குஷ்புவும் முகேஷும் மனம் நெருங்கி வரும் தருணத்தில், குஷ்புவின் மேல் மையல் கொண்டிருக்கும் ராஜேஷ்குமார் அவரை ஏமாற்றிக் கடத்திச் சென்று அரண்மனை போன்ற பங்களாவில் சிறை வைப்பதும் அதைத் தெரிந்து கொள்ளும் முகேஷ் அங்கே போய் ராஜேஷ்குமாருடன் டிஷ்ஷும் டிஷ்ஷுமில் ஈடுபட்டு வென்று குஷ்புவைக் காப்பாற்றுவதும் பொருந்தாத சம்பிரதாய தமிழ் சினிமா கிளைமாக்ஸ். கே.பி.க்கு இது தேவையில்லை.

பாடல்கள் எல்லாமே இனிமை. என்றாலும், எண்ணிக்கையில் மிகுந்து, குறைவான இடைவெளிகளில் இடம்பெறுவதன் பலனாகத்தான் திகட்டுகிறதோ?

முடிவுப் பகுதியில் வினித், யுவராணி ஜோடி மதவெறி கொண்ட கலவரக்காரர்களால் சூழப்பட, கைகளில் வழியும் ரத்தத்தைச் சுவரில் பதித்து, ''நாங்கள் காதலர்கள். எங்களில் ஒருவர் இந்து. மற்றவர் முஸ்லிம். இதோ எங்கள் ரத்தம். இதைக் கொண்டு எங்களில் யார் இந்து, யார் முஸ்லிம் எனக் கண்டறிந்து யாரை வேண்டுமோ கொல்லுங்கள்'' என அவர்களிடம் சவால் விடும் கட்டம் பளிச்... பகுத் அச்சா... பாக உந்தி... வளர நன்னாயி.

– சி. ஆர். கே.




மூட்டு வலிக்கு ஒரு விஞ்ஞானத் தீர்வு!

கீல் மூட்டு, பந்துக் கிண்ண மூட்டு பற்றியெல்லாம் பள்ளிக்கூடத்தில் படித்திருப்பீர்கள். இந்த மூட்டுகளால்தான் நாம் நம் உடலுறுப்புகளை மேலுங்கீழும், பக்கவாட்டிலும் ஆட்டியசைக்க முடிகிறது. இந்த மூட்டுகளின் இயக்கத்தைத் தசைநார்கள் எளிதாக்கி, நெறிப்படுத்துகின்றன. இந்தத் தசைநார்கள் சீர்கெட்டால் மூட்டுகளின் இயக்கம் தடைப்படுகிறது. மூட்டெலும்புகள் ஒன்றோடொன்று உரசிக் கொள்வதால் மூட்டுவீக்கமும் வலியும் நேர்கின்றன. இந்த நோய்தான் arthritis எனப்படும்.

நோய் கடுமையாகி விட்டால் பாதிக்கப்பட்டவர் தம் உடலுறுப்புகளை இயக்க முடியாது. இந்தப் பிரச்னைக்குத் தீர்வு சீர்கெட்ட மூட்டுகளை எடுத்து விட்டுச் செயற்கை மூட்டுகள் பொருத்திக் கொள்வதாகும்.

முதன் முதலில் உலோகங்களாலான செயற்கை மூட்டு பொருத்தப்பட்டது. ஆனால் இந்த செயற்கை மூட்டு உரசுவதால் உண்டாகும் உலோக நுண்துகள்கள் உடல் சுரப்பிகளிலிருந்து சுரக்கும் திரவங்களுடன் கலந்து ரசாயன மாறுதல்கள் அடைவதால் நச்சுப் பொருள் உண்டாகும் அபாயம் உள்ளது.

ஆகவே, இது மாதிரியான பின்விளைவுகளை உண்டாக்காத, உடலுக்கு முற்றும் பொருந்தக்கூடிய உலோகமல்லாத மூலப் பொருளைத் தேடிக் கொண்டிருந்தனர் விஞ்ஞானிகள். 'அலுமினா' என்ற மண் வகை (alumina) இதற்கு உகந்தது என்றும் கண்டுபிடித்தார்கள். இதன் ரசாயனப் பெயர் அலுமினியம் ஆக்சைடு. அலுமினாவால் செய்யப்படும் மூட்டுகள் 'செராமிக்' மூட்டுகள் என்றழைக்கப்படும். மண் வகைகளால் பாண்டங்கள், கருவிகள் செய்யும் கலையே செராமிக்ஸ்.




✱ உடலில் பொருத்தப்பட்டுள்ள செயற்கை மூட்டின் எக்ஸ்ரே படம்

ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் இந்த செயற்கை மூட்டுகள் தயாரிக்கப்பட்டாலும், தயாரிக்கப்படும் முறை மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருப்பதால் இவற்றை அதிகச் செலவில் இறக்குமதி செய்ய நேரிடுகிறது. அதனால் மருத்துவச் செலவும் சாதாரண மக்களால் நினைத்துப் பார்க்க முடியாததாகவும் இருக்கிறது.

எனவே, கல்கத்தாவிலுள்ள மத்திய கண்ணாடி மற்றும் செராமிக் ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த இரு விஞ்ஞானிகளான தேவப்பிரதபாகவும் சந்தீப் சாட்டர்ஜியும் செராமிக் செயற்கை மூட்டு தயாரிக்கும் முறையை மிகவும் பிரயத்தனம் செய்து கண்டுபிடித்துள்ளனர். அவர்களது முயற்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் அதே நிலையத்தைச் சேர்ந்த எம்.கே. பாசுவும், ஆர். தாகம்.

நம் உடலிலுள்ள மூட்டுகளில் இடுப்புடன் அடித் தொடையை இணைக்கும் மூட்டு முக்கியமானது. இந்த மூட்டு கால்களை இயக்கச் செய்வதோடு அதே சமயத்தில் உடல் பளுவையும் மனிதன் தூக்கும்



* செயற்கை மூட்டு - அலுமினாவாலான பந்தும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் இணைப்பும்

கமையின் பளுவையும் தாங்கிக் கொள்கிறது. இந்த மூட்டு சில சமயம் உடல் பளுவைப் போல் ஐம்பது மடங்கு பளுவைத் தாங்க நேரலாம். ஆகவே இந்த மூட்டு எவ்வளவு உறுதியாக இருக்க வேண்டும் என்பதை விளக்கத் தேவையில்லை.

இந்த மூட்டு 'பந்துக் கிண்ண' வகையைச் சேர்ந்தது. அதாவது பந்து போல் உருண்டையான இந்த மூட்டின் மேற்பகுதி இடுப்பெலும்பின் குழிவான பகுதியோடு பொருந்தியிருக்கும்.

பாகவும் சாட்டர்ஜியும் தயாரித்துள்ள மூட்டின் உருண்டையான மேற்பகுதி அலுமினாவால் ஆனது. இது உறுதியாக இருப்பதால் அதிகப் பளுவைத் தாங்கிக் கொள்ளும். இது மிகவும் வழுவழுப்பாக இருப்பதால் எலும்புடன் உராயும் போது தேய்வதில்லை. குறைந்தது இருபதாண்டுகள் இது நல்ல முறையில் செயல்படும்.

மூட்டின் கீழ்ப்பகுதி ஸ்டெயின்லெஸ் ஸ்டீலால் ஆன இணைப்பு. இந்த இணைப்பு அடித் தொடையெலும்பின் குழல் (hollow) பகுதியில் செருகப்பட்டு விடுவதால் இது அதிகம் அசைவதில்லை. உராய்வால் நச்சுப் பொருள் உண்டாகும் ஆபத்தும் இல்லை. (இந்த மூட்டின் படத்தையும் இது உடலில் பொருத்தப்பட்டபின் எடுக்கப்பட்ட எக்ஸ்-ரே படத்தையும்தான் அருகில் காண்கிறீர்கள்) இந்த மூட்டு சிறிது கனமாயிருக்கும். இதன் விலை சுமார் 1000 ரூபாய்.

இதுவரை இந்தச் செயற்கை மூட்டு கல்கத்தா மருத்துவ ஆய்வு மையத்தில் இருபது பேருக்கும், தில்லி மௌலானா ஆஸாத் மருத்துவமனையில் மூவருக்கும் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளது. இதன் செயல்பாடு திருப்திகரமாயிருப்பதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள்.


இப்போது பாகவும் சாட்டர்ஜியும் இந்த மூட்டில் இன்னும் சில முன்னேற்றங்கள் கண்டுள்ளனர். திருத்தப்பட்ட மூட்டின் பந்துப் பகுதி முன்பு உபயோகப்படுத்தப்பட்ட செயற்கை மூட்டின் பந்துப் பகுதியில் கால் பங்குதான் இருக்கும். ஆகவே, அதன் கனமும் குறைவு. ஆனால் இடுப்பெலும்பின் குழிவு இந்தப் பந்தை விடப் பெரியதாக இருப்பதால் இந்தப் பந்தின் மேல் ஒரு 'அதிகத் திண்மையுள்ள போலியுரத்தீன் கோப்பையை (High Density Polyurethene Cup) இணைத்து அதை இடுப்பெலும்புக் குழியில் பொருத்த வேண்டும். இந்த வகை மூட்டில் தேய்மானமே இல்லை. ஆகையால் குறைந்த வயதினர் இதைப் பொருத்திக் கொண்டால் அவர்கள் தங்கள் ஆயுட்காலம் முழுவதுமே கவலையின்றி இருக்கலாம்.

இதன் விலை சற்று அதிகம் - சுமார் 3,000 ரூபாய்.

மற்ற நாடுகளில் தயாரிக்கப்படும் செயற்கை மூட்டுகளை விட நம் நாட்டுத் தயாரிப்புகள் ஒரு வகையில் சிறந்தவை. மற்ற நாட்டு மூட்டுகளில் பந்துப் பகுதியை உலோக இணைப்புடன் பொருத்த சிமெண்ட் போன்ற கலவையொன்றைப் பயன்படுத்துகிறார்கள். இந்தக் கலவை உடைந்து போனால் மூட்டிணைப்பு தளர்ந்து போகும் ஆபத்து உண்டு. ஆனால் நம் நாட்டுத் தயாரிப்பில் பந்துப் பகுதியிலும் இணைப்பிலும் மரைகள் (Screw) அமைத்து இரண்டையும் பொருத்தி விடுவதால் இதில் மூட்டிணைப்பு தளர்ந்து போகும் ஆபத்து இல்லை.

நமது விஞ்ஞானிகளின் இந்த அரிய சாதனை பற்றி நாம் பெருமைப்படலாம்!

– எஸ். கிருஷ்ணமூர்த்தி


தமிழக ஆளுநர்
தேர்தல் கமிஷனுக்கு அனுப்பறதா வேண்டாமா?... யோசிப்போம்... யோசிச்சுகிட்டே இருப்போம்... இன்னும் கொஞ்சம் யோசிப்போம்... .....
ஜெ. மீது சு.சாமி புகார்கள்...
ஜெ.
நான் ரொம்ப அதிருப்தி அடைஞ்சிருக்கேன்... தெலுங்கு கங்கா திட்டம் என்ன ஆச்சு?... தண்ணீர் குடுக்கப் போறீங்களா இல்லையா?... என் பேரு அங்கே ரிப்பேர் ஆயிட்டிருக்கு... இதுயதான் நான் சமாளிக்கணும்!...
ஆந்திர முதல்வர்
பஞ்சாப் முதல்வர்
ஆஹா... தேர்தல்களை நடத்தி முடிச்சுட்டேன்!... ஜனங்க அமைதியைத்தான் விரும்புறாங்கன்னு தெரியுது... பயங்கரவாதம் காணாம போயிடுச்சி...
பஞ்சாயத்துத் தேர்தல்கள்



கல்கி



1993
பிப்ரவரி 7
மலர் : 51
இதழ் : 28
ஆங்கீரச
தை 25

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

குடியரசுதின குண்டுகள்!

குடியரசு தினத்தைத் தமிழகத்தில் மூன்று இடங்களில் குண்டு வெடித்துக் கொண்டாடியிருக்கிறார்கள். அதிலும் காந்தி சிலை ஒரு குண்டினால் தகர்க்கப்பட்டதானது குண்டு வைத்தவர்களின் செய்தியைத் தெளிவாகவே உணர்த்துகிறது. விடுதலைப் புலிகள் ஒருபுறம் - அவர்களின் ஆதரவாளர்கள் மறுபுறம் - பெருகி வரும் கொலை, கொள்ளைகள் இன்னொரு பக்கம் - தலைவர்களுக்குத் தரப்பட வேண்டிய பாதுகாப்பு மற்றொரு பக்கம் என்று அலைக்கழிக்கப்படும் தமிழக போலீஸின் பணி கஷ்டமானதுதான் என்றாலும் சமீப காலம் வரை இருந்து வந்த நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ள அத் துறை பெருமுயற்சி செய்ய வேண்டும்.

குடியரசு தினத்தையொட்டி அரசியல் குண்டுகளும் வெடித்துள்ளன. விசுவ ஹிந்து பரிஷத் போன்ற அமைப்புகள் தடை செய்யப்பட்டதும் அவை வேறு பெயர்களில் இயங்கத் தொடங்கி விட்டன என்பது ஒரு சாமர்த்திய குண்டுதான்! பெயரில் என்ன இருக்கிறது? செயல்தானே முக்கியம்! மறுபடி "கரசேவை" என்றும் "கோயில் கட்டாமல் விட மாட்டோம்" என்றும் ஆரம்பித்திருக்கிறார்கள். முன்யோசனை இன்றி இந்த இயக்கங்களைத் தடை செய்தது எவ்வளவு அர்த்தமற்றது என்பதை இப்போதேனும் அர்ஜுன் சிங் வகையறா புரிந்து கொண்டால் நல்லது. தேவைப்படுவது மனமாற்றம். அதற்கு வழிகாண முடியவில்லை என்றால் சாணக்கியம்தான் கைகொடுக்கும். நமது அரசியல் சாசனத்துக்கு ஏற்ப, மதச் சார்புள்ள இயக்கங்கள் தேர்தலுக்கு நிற்க முடியாது என்றும், இவற்றின் ஆதரவு பெற்று எந்த அரசியல் கட்சியும் ஆட்சிக்கு வர முடியாது என்றும், அப்படி மத அடிப்படையில் பிரசாரம் நடத்து பெறப்படும் வெற்றி செல்லுபடியாகாது என்றும், நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றித் தேர்தல் சீர்திருத்தம் செய்து விட்டால் போதும். ஆரோக்கியமான மாற்றம் உண்டாகும். இப்போது நடப்பனவெல்லாம் வோட்டுப் பிடிக்கும் நோக்கில்தானேயன்றி ராம பக்தியால் அல்ல. மதச் சார்பின்மை அடிப்படையில் சீரிய பொருளாதாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் மக்கள் முன்வைத்து கட்சிகள் போராடி தேர்தலில் வெற்றி பெறட்டும். ஜாதி-மத அடிப்படைகளில் அல்ல.

குடியரசு தினத்தையொட்டி வெடித்த இன்னொரு குண்டு, ஜனதா தளத்திலிருந்து பிரிந்து வரத் தீர்மானித்த அஜீத் சிங் கோஷ்டி, நாடாளுமன்றத் தலைவரிடம் தந்த பட்டியலில் இரண்டு பொய்க் கையெழுத்துக்கள் உள்ளன என்பதுதான். அஜீத்சிங்குக்குத் தெரியாமல் நடந்தது என்றாலும் ஏற்க முடியாது. அவர் தெரிந்து செயல்பட்டிருக்க வேண்டும். தெரிந்தே நடந்தது என்றால் அதைவிட வேறு பெரிய தலைகுனிவு இருக்க முடியாது. நம் நாட்டு அரசியல் எவ்வளவு கீழ்த்தரமாகப் போய் விட்டது என்பதற்கு இது ஓர் அடையாளம். பதவி ஆசை என்பதற்கு வானமே எல்லை என்றாகி விட்டது!

தமிழகத்தில் வெடித்த மற்றொரு குண்டு, மயிலை கபாலீசுவரர் கோயில் குளத்தில் தெப்போற்சவத்துக்காகக் குடிதண்ணீர் நிரப்பப்படுவதுதான். நல்ல ஆஸ்திக உள்ளங்கள் கூட, இப்படி குடிநீர் வீணடிக்கப்படுவதில் நொந்து போயிருக்கின்றன. அதுவும் குடிநீருக்காகச் சென்னை நகர மக்கள் பரிதவிக்கும் நிலையில் இது அதர்மமாகவே பலராலும் கருதப்படுகிறது. தெப்போற்சவம் நடக்கத்தான் வேண்டும் என்றால் தெப்பத்தை வழக்கத்தை விடச் சிறிதாக்கி, குளத்தின் ஒரு பகுதியை மட்டும் சிறு குளமாக்கி, அங்கு சம்பிரதாயமாக - ஆனால் மனநிறைவுடன் நடத்தியிருக்கலாம். யோசித்தால் ஒன்றல்ல பல வழிகள் தோன்றும். ஆனால் முன்யோசனை இன்றிச் செயல்படுவது இங்கு வாடிக்கையாகி விட்டது.

சத்தியமங்கலம் காட்டுப் பகுதியிலும் குண்டு வெடித்திருக்கிறது. சந்தனக் கடத்தல் வீரப்பன் தப்பி விட்டாலும் அவன் சகா ஒருவன் குண்டு தாக்கி இறந்தான். "வீரப்பனையும் வெற்றி கொள்ளும் நாள் வெகு தூரத்தில் இல்லை" என்று சூளுரைத்திருக்கிறார் எஸ். பி. கோபாலகிருஷ்ணன். ஆபத்தான காரியத்தில் ஈடுபட்டுள்ள நமது போலீஸ் தோழர்கள்பால் நமது இதயம் செல்கிறது; வாழ்த்துகிறது.

வடக்கு வாசல் :

●● குடியரசு நாளன்று தைரியத்திற்கும், வீரதீரச் செயலுக்கும் பரிசு பெற்ற ஹரீஷ் சந்திராவும், மற்ற பதினாறு குழந்தைகளைப் போல ஒரு கள்ளமிலாச் சிறுவன்தான்; ஆனால் ஒரே வித்தியாசம், இந்த குடிசைவாழ் ஏழைச் சிறுவனுக்கு இரு கைகளும் கிடையாது! ஆனாலும் ஓடும் யமுனையில் துணிந்து குதித்து,



* ஹரீஷ் சந்திரா

சாகசம் புரிந்த சிறுவன்!

தண்ணீரில் மூழ்கவிருந்த ஆனந்த் என்ற மற்றொரு சிறுவனைத் தன் இரு கால்களால் இழுத்துக் காப்பாற்றியவன். நீரில் மிதக்கும் ஒரு தேங்காயைப் பிடிக்க இறங்கிய பப்பு, ஆனந்த், விஜயேந்தர் என்ற மூன்று சிறுவர்களில் எப்படியோ பப்பு கரையேறி விட நீச்சல் தெரியாத ஆனந்தும், விஜயேந்தரும் உதவி வேண்டிக் கூச்சலிட்டனர். மற்றவர்கள் கம்மாயிருக்க, இந்த கையில்லாதவன் தன் உயிரைப் பற்றிக் கருதாமல் துணிந்து ஆற்றில் குதித்து முயன்றதில் ஒரு சிறுவனையாவது காப்பாற்ற முடிந்தது. ''காலண்ட்ரி அவார்ட்'' பெற்ற இந்தச் சிறுவனின் செயல், குரோதத்தாலும், மதவெறியாலும் சண்டையிட்டுக் கொள்ளும் பெரியவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும்!

●● திரைப்பட விழாவில் இந்திய பனோரமா பகுதியில் காட்டப்பட்ட படங்களில் மிக அதிகமாக 'டிமாண்டில்' இருந்த படம் ''மாயா மேம்சாப்''. பத்திரிகையாளர்களுக்கான விசேஷக் காட்சியில் பத்திரிகையாளர் அல்லாதவர்கள் அதிகம் புகுந்து விட, நிருபர்கள் காட்டிய எதிர்ப்பினால் இதே காட்சி ஐந்து முறை திரையிடப்பட வேண்டியிருந்தது! வெளியில் தியேட்டர் களிலும் இதற்கு அலைமோதும் கூட்டம். தமது மனைவி திருமதி தீபா சாஹியை ஹீரோயினாக இயக்கிய கேதன் மேத்தா, அவரைப் பிறந்த மேனியாகக் காட்டப் போகத்தான் இப்படியொரு நெரிசல்! ''ஏன் உங்கள் மனைவியையே இப்படி காட்டினீர்கள்?'' என்று கேட்டதற்கு, ''மற்றவர்களின் மனைவியையோ அன்றி சகோதரியையோ இப்படி காட்டுவதை விட இது மேல் அல்லவா!'' என்றார்.

●● வி.ஐ.பி.க்கள், வி.வி.ஐ.பிக்கள் நிறைந்த தில்லியில் சாதாரண மனிதர்கள் கூட வி.ஐ.பி.யாக 'ஸ்பெஷல் கேட்' வழியாக க்யூவில் நிற்காமல் நுழையப் பார்க்கும் போது, அழைப்பையும் மறுத்து,

* டெண்ட்களில் பள்ளிகள்...



அமைதியாக கியூவில் நின்று சிரிஃபோர்ட் ஆடிட்டோரியத்தில் ஒருவித பந்தாவும் இன்றி நுழைந்த கமல், இதனால் கூடுதல் ரசிகர்களைப் பெற்று விட்டார்!

●● IFFI '93 துவக்கப்பட்ட போது இருந்த இரு மந்திரிகளும் இன்று அந்த இலாகாவில் இல்லை! அரசியல் சதுரங்கத்தில் ஒரு காய் இடம் மாறியது; ஒன்று பலியானது. பங்கேற்ற சில வெளி நாட்டுத் திரையுலகப் புள்ளிகளை இவ் விழா பற்றிக் கேட்ட போது, இது தலை நகரில் நடப்பதை விட, பம்பாய், சென்னை, திருவனந்தபுரம் போன்ற இடங்களில் நடந்திருந்தால் சிறப்பாக இருக்கும் என்று கூறினர். இங்கு விழா நடத்துபவருக்கு உள்ள ஒரேயொரு சிரமம் : வேலை செய்பவர்களை விட உத்தர விடுபவர்கள்தான் அதிகம்! விழாவிற்கு வரும் படங்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றால், இதை அதிகாரிகள் நடத்தாமல், திரைப்பட நிபுணர்கள் நடத்த வேண்டும் என்பதே பலரது அபிப்பிராயம்.

●● இந்தியத் தலைநகரில் 32 இடைநிலை, உயர்நிலைப் பள்ளிகள் முழுக்க, முழுக்க டெண்ட்களில் நடத்தப்படுகின்றன! 1947-இல் நடந்த பாகிஸ்தான் பிரிவினையின் போது இப்படிப்பட்ட கூடாரங்களில் பள்ளிகள் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. ஆனால் இன்றும் புதுப் பள்ளிகள் தொடங்கும் போது, டெண்ட்களில் ஆரம்பிக்கும் நிலை தொடர்கிறது. ஒரு வகுப்பறை கட்டவே நான்கு லட்சம் தேவைப்படுகிறது. ஆனால், ஒரு டெண்டிற்கான ஆண்டுச் செலவு இரண்டாயிரம் ரூபாய்தான். நகரின் பரப்பு பெருகப் பெருக, புது பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டப்படாமல், கல்வி இலாகாவினால் இவை முதலில் டெண்ட்களிலேயே ஆரம்பிக்கப்படுகின்றன. தில்லியின் லெஃப்டினன்ட் கவர்னர் இத்தகைய பள்ளிகளுக்குத் தடைவிதித்து, இவை அனைத்தும் மார்ச் '94க்குள் நிரந்தரக் கட்டடங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என ஆணையிட்டிருக்கிறார். ஆனால் தில்லிக்கென்று ஓர் அமைச்சரவை ஏற்பட்டு விட்ட பிறகு என்ன நடக்குமோ தெரியவில்லை.

– ராஜீவி நரசிம்மன்

நீங்கள் கேட்டவை - தராசு

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
எம். இராஜேந்திரன்,
22, ஓமக்குளத் தெரு,
லால்குடி - 621 601.

ஆட்சியைப் பிடிக்கக் கலைஞர் என்ன செய்ய வேண்டும்?

● மு. மதிவாணன், அரூர்.

? "நான் யாரிடமும் எதற்காகவும் கையேந்தி நின்றது கிடையாது" என்கிறாரே நாவலர்?

! "அறிவைத் துருப்பிடிக்க விடும் நாடு நம் நாடு" என்று கூறியவரும் இவரேதான், மறக்காதீர்கள்! இந்த தைரியத்தில் அவர் எதையும் பேசலாம்!

● ப. ரவிகுமார், திருத்துறைப்பூண்டி.

? தினேஷ் சிங், பிரணாப் முகர்ஜி போன்ற மக்கள் ஆதரவு அற்ற தலைவர்கள் அமைச்சர்கள் ஆவதால் என்ன பயன்?

! மக்கள் ஆதரவு பெற்றவர்கள் எல்லாரும் அறிஞர்களாக இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. நல்ல அறிவாளிகள் மக்கள் ஆதரவு பெறத் தெரியாதவர்களாகவும் இருக்கக் கூடும். எனவே மக்கள் ஆதரவு உடையவர்கள் தவிர அறிவாளிகள் என்று கருதப்படுகிறவர்களையும் அமைச்சரவையில் சேர்ப்பதில் தவறில்லை. மக்கள் ஆதரவு தவிர, 'தமக்கு ஆதரவு' என்பதும் பிரதமரின் நோக்கமாக இருந்திருக்கலாம்!

● எம். கே. பாஷா, உத்தமபாளையம்.

? ராஜீவ் சிலை திறப்பு விழாவில் குறிப்பிடத்தக்க அம்சம்...?

! மூப்பனார் - வாழப்பாடி இரண்டு கோஷ்டிகளும் பங்கேற்றது ஒன்றே குறிப்பிடத்தக்க அம்சம்.

● கே. ஆர். தேவேந்திரன், கோணவட்டம்.

? கலைஞர் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க என்ன செய்ய வேண்டும்?

! அவர் ஒன்றும் செய்ய வேண்டாம்; ஜெயலலிதாவே தேவையான எல்லாம் செய்து விடுவார் போலிருக்கிறது!

● நெல்லை வி. சிவா, மதுரை.

? "மந்திரி சபையிலிருந்து நீக்கப்படு முன்னர் அது பற்றி உரியவருக்கு முன்பே தகவல் தராமல் மரபை மீறி விட்டார் பிரதமர்" என்று மத்திய மந்திரி பொடேதார் கூறியிருப்பது சரியா?

! ராஜினாமா கடிதம் கொடுக்கிறபோதே 'வேலை போய் விட்டது; திரும்பக் கிடைப்பது பிரதமர் இஷ்டம்' என்பதும் உறுதியாகி விட்டது. அப்புறம் நோட்டீஸ் என்ன; முன் தகவல் என்ன!

● லல்லி பாலகிருஷ்ணன், மதுரை.

? தி.மு.க.வை வீழ்த்தப் பத்திரிகைகள் திட்டம் தீட்டுவதாகக் கருணாநிதி கூறியுள்ளாரே?

! தூக்கி நிறுத்தத்தான் ஸ்டாலினின் புதிய பத்திரிகை இருக்கிறதே!

● ஈ. டி. விஜயகுமார், ஈரோடு.

? ஷ்பருக் மரைக்காயர் பதவி இழந்தது பற்றி?

! சாராயம் கடத்தல்; அவர் வாகனம்; அது இது என்று கசமுசா எழுந்த போதே ராஜினாமா செய்திருக்க வேண்டும்.

● எம். ராஜேந்திரன், லால்குடி. ❑


? மாவட்ட கலெக்டர் பதவிக்குக் கட்சி ஆட்களை நியமிக்கும் காலம் வருமா?

! வராது. காரணம் ரொம்ப சிம்பிள். கலெக்டர் பதவி என்றால் பொறுப்புகள் அதிகம். அத்தனை தலைவலிகளைத் தாங்க எந்த அரசியல்வாதியும் தயாரில்லை. அதே சமயம் இன்று ஆட்சியை விட ஆளும் கட்சிக்கு அதிகாரம் அதிகமாக இருப்பதை அரசியல்வாதிகள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். எனவே தங்கள் தேவைகளை அதிகார வர்க்கம் மூலம் சாதித்துக் கொள்வார்களே தவிர, தாங்களே தலையைக் கொடுத்து அவதிப்பட மாட்டார்கள். இப்போது ஏதாவது சரியாக நடக்கவில்லை

* மக்கள் ஆதரவு?



* கையேந்தாதவர்!



யானால் அதிகாரவர்க்கம் மீது பழி போட்டு, அரசியல்வாதி தப்ப முடிகிறது. அவர்களே பொறுப்பேற்றால் யார் மீது பழி சுமத்துவ தாம்!

● சிவராம சுப்பிரமணியன், தூத்துக்குடி.

? அறுவை ஆசாமிகளிடமிருந்து தப்பிக்க வழி என்ன?

! முள்ளை முள்ளால் எடுக்க வேண்டியதுதான்!

● சீனிவாசன், பின்னத்தூர்.

? அயோத்தியில் மசூதி இடித்ததற்கு ஏகமாக எதிர்ப்புத் தெரிவிக்கும் நீங்கள் இங்கே "பார்ப்பான் ஒழிக" என்று முஸ்லிம்கள் ஊர்வலம் நடத்த முடிவது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

! அப்படி நடந்து கொள்ளும் முஸ்லிம்கள் நிச்சயம் கண்டனத்துக்கு உரியவர்களே. ஆனால் எந்த ஒரு தவறும் இன்னொரு தவறை நியாயப்படுத்தி விடாது. அதற்கு நாம் ஆதரவு தரவும் கூடாது. இதை எத்தனை தடவைதான் சொல்வது!

● எச். சுப்பிரமணியன், மதுரை.

? "மற்ற மாநிலத்தவரெல்லாம் தமிழ் நாட்டில் வசதியோடு வாழ்ந்து கொண்டிருக்கத் தமிழன் மட்டும் போகுமிடமெல்லாம் உதைபடுகிறானே" என்று கதறும் தமிழ்நாடு அரசியல்வாதிகளுக்கு உங்கள் பதில்?

! கதறுவதுடன் நில்லாது; அடையாள எதிர்ப்புத் தெரிவிப்பதுடன் திருப்தி அடையாது, பம்பாய்க்கே போகலாம். பால்தாக்கரேயையே சந்தித்துப் பேசலாம். நல்லெண்ண விதைகளை அவர் உள்ளத்தில் தூவலாம். நம் தலைவர்கள் எல்லாருமே நெகடிவ்வாக சிந்திக்கிறார்கள். பாஸிடிவ் சிந்தனையே நாட்டை உயர்த்தும்.

● சி. மகேஷ், மதுரை.

? கடவுள் பக்தி என்பது எந்த அளவில் இருக்க வேண்டும்?

! அடுத்தவனைத் துன்புறுத்தாத அளவில்.

● ஏ. சுகுமார், காட்டுக்காஹூர்.

? 'ரஷ்யாவை விட இந்தியாவின் பொருளாதார நிலை எவ்வளவோ மேல்' என்று சொல்கிறார்களே?

* இன்னமும் சொல்வார்!



* சிலைத் திறப்பு





* ஆட்சியைப் பிடிக்க...



* பதவி இழப்பு

! நம்பாதீர்கள்! அடுக்குமுறை பொருளாதாரம் நிடுமென்று நீக்கப்பட்டதில் ஒரு புயல் வீசி சேதப்படுத்தியிருக்கிறது. ஆனால் ருஷ்யா சீக்கிரமே இதைச் சமாளித்து வெற்றிகளைக் குவிக்கும். அதற்கு அமெரிக்காவும் ஐரோப்பாவும் கணிசமாக உதவும். ருஷ்யாவில் ஜனத்தொகை குறைவு. இயற்கை வளங்கள் ஏராளம். மக்கள் உழைப்புக்கு அஞ்சாதவர்கள். 'அண்டை நாட்டை விட நாம் எவ்வளவோ தேவலை' என்று அற்ப திருப்திபட்டுக் கொண்டு மெத்தனம் காட்டும் நாம்தான் முன்னேறத் திணறுவோம்; ருஷ்யா அல்ல!

● கே. பட்டு, கும்பகோணம்.

? நேரு ஸ்டேடியம் திறப்பு விழாவுக்குச் சென்றீர்களா?

! திறப்பு விழா தடபுடல்தான்; மறுநாள் முதல்தான் அழுது வடிகிறது, ஆளில்லாமல்.

● ஆர். கார்த்திகேயன்,
நாட்டரசன்கோட்டை.

? "பம்பாய் கலவரத்தில் தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்த தமிழர்கள் மீண்டும் பம்பாய் செல்ல வேண்டும்" என்று பிரதமர் கூறுகிறாரே?

! சட்டம் - ஒழுங்கு குலையக்கூடும் என்று கூறி பி.ஜே.பி. அரசுகளை டிஸ்மிஸ் செய்தவர், சட்ட ஒழுங்கு குலைந்து பம்பாய் பற்றி எரிந்த பிறகும் காங்கிரஸ் ஆட்சி என்பதால் நீடிக்கச் செய்பவர், இதுவும் சொல்வார், இன்னமும் சொல்வார்!

● எம். பிரபு, குமராட்சி.

? உங்களால் ஏற்றுக் கொள்ள முடியாதது எது?

! தண்டனை வழங்கும் தகுதியை ஆளும் கட்சிக்காரர்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கிக் கொள்வது. நக்கீரன் புகைப்படக்காரர் கதிரை துரை அத்துமீறி நடந்து கொண்டதாகவே இருக்கட்டும்; அதற்காக அவர் கையையும் காலையும் முறித்துப் போடும் அதிகாரத்தை அ.தி.மு.க. ஆட்களுக்கு யார் வழங்கியது? அவர்களைத் தட்டிக் கேட்டு கேஸ் பதிவு செய்து கைது செய்த போலீஸ் அதிகாரி ராஜேஷ்தாஸ் உடனடியாக ஹோசூருக்கு மாற்றப்பட்டது எவ்வளவு கொடுமை!

அன்புள்ள அருண் கண்மணி,

பப்லு இப்போ பம்பரம் விட சுத்துக்கிட்டிருப்பான்னு நினைக்கிறேன். அவனுடைய புது பம்பரம் என்ன கலர்? உனக்கு அதைப் பார்த்தால் இன்னும் ஆசையா இருக்கு இல்லையா? ஆனால் பப்லுவோட சண்டை போடாதே! புது பம்பரமும் கொஞ்ச நாள் விளையாடினால் பழசாத்தானே போயிடும்! பம்பர விளையாட்டு கூட ரொம்ப பழசுதான். நூற்றுக் கணக்கான வருஷங்களா அதைக் குழந்தைகளும் பெரியவங்களும் கூட விளையாடிக்கிட்டு வர்றாங்க.

அது சரி, பம்பரம் ஏன் சுத்தறதுன்னு நீ யோசிச்சுப் பார்த்திருக்கியோ? 'அதனுடைய உருண்டை வடிவமும், நடுவில் இருக்கிற கனமான ஆணியும் தான் அது சுத்தறதுக்கு உதவி பண்ணுது. 'சாட்டையால் அதைச் சுற்றி வேகமா இழுக்கறோம். அதனால் சுத்தறது' அப்படின்னு ரொம்ப சுலபமாச் சொல்லிடலாம். ஆனால் பம்பரம் வெறும் ஜடப் பொருள். அதுக்கு உயிர் கொடுத்துச் சுத்த வைக்கிறது சாட்டை. அந்த சாட்டைக்குச் சக்தி கொடுக்கறது அருண் மாதிரி குட்டிப் பையன்களின் குட்டிக் கை.



குட்டிக் கையின் சக்தி, சாட்டை வழியாகப் பம்பரத்து ஆணிக்குப் போக, அது 'கிர்'ருன்னு சுத்தறது. சரி, சுத்தற பம்பரம் ஏன் மெள்ள வேகம் குறைஞ்சு நிற்கறதுன்னு கேட்பே.... பம்பரத்தைச் சுற்றிலும் காற்று உராய்கிறது. அது மட்டுமில்லை.... பம்பரத்தோட ஆணி தரையில் உராய்கிறதில்லையா....? அந்த உராய்வும் பம்பரத்தை எதிர்க்கிறது. தரை ஒரு பக்கமும் காற்று ஒரு பக்கமும் பம்பரத்தை எதிர்த்தாலும் அதை மீறி கொஞ்ச நேரம் சுற்றி, மெள்ள மெள்ளத்தான் நிற்கிறது பம்பரம். மொசைக் மாதிரி உராய்வு குறைவான தரையில் கூடுதல் நேரம் சுத்தறது.

காற்றே இல்லாத ஒரு இடத்துல - அதுதான் vacuum - உராய்வும் இல்லாம பம்பரத்தைச் சுற்ற முடிஞ்சா அது நிற்காம சுத்திக்கிட்டே இருக்கும். இந்த மாதிரி சுத்தற பிரம்மாண்டமான பம்பரம்தான் நம்ம பூமி. உலகிலேயே மிகப் பெரிய பம்பரம் நம்ம உலகமேதான்! அண்ட வெளியிலே பூமி மாதிரி இன்னும் எத்தனையோ கோள்கள் சுத்திக்கிட்டிருக்கு....! அதையெல்லாம் பம்பரமா கற்பனை செஞ்சு பார்த்தா வேடிக்கையா இருக்கு இல்லையா....?

இன்னிக்கு ராத்திரி மொட்டை மாடிக்குப் பப்லுவையும் அழைச்சுக்கிட்டுப் போய்க் காட்டு - 'ஆகாயத்துல தெரியற சில குட்டிக் குட்டி வெளிச்சப் புள்ளிகள் பூமி மாதிரியே பிரும்மாண்டமான பம்பரங்களாக்கும்'னு சொல்லு. பப்லு என்ன சொல்றான்னு எனக்கு மறக்காம எழுது.

அன்பு அத்தை,

அலமு

தவறு செய்தவன் மனம் திருந்தி ஒரு நேர்மையான வாழ்க்கையில் ஈடுபடும் போது, சமூகம் தொடர்ந்து அவனைச் சந்தேகக் கண்களுடனேயே பார்த்து அவன் மனமாற்றத்தை ஏற்க மறுத்தால்...

தெளிவான அஸ்திவாரம். அநாவதன் இடத்தில் சங்கிலித் தொடராக உட்கார்ந்து விடும் நிகழ்ச்சிகள் - வசனங்கள்.

தேவையேற்படும் போது திருடுவது... அந்தப் பணம் தீர்ந்து விடும் வரையில் இஷ்டப்படி செலவிடுவது எனக் காலத்தை ஓட்டும் போது சரவணன் - செல்வா இருவருமே ரொம்பவும் சரளம்.

சந்திக்கும் சிலரின் சோகங்கள் நடைமுறை வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்த்தி, அவர்கள் பாதை மாறும் போது படிப்படியாகக் குடியேறுவது கனம்.

சோகத்துக்கு மறு பெயர் சித்தாரா. இடையில் கானல் நீராகச் சிறிது காலம் சரவணனுடன் நடைபெறும் மகிழ்வான மணவாழ்க்கை.



மாமியார் வீடு

பனை மரத்தடியில் பால் குடித்த கதை அவருடையது. தூய்மையானவராக இருந்தும், அவர் வாழ்ந்திருந்த விடுதியின் கெட்ட பெயர் விடாப்பிடியாக அவரைத் தொடர... முடிவில் கண்ணகியாகச் சீறியெழுந்து அரிவாள் மணையைக் கையில் எடுப்பது எதிர்பாராத திருப்பம்... முடிவு!

ஊறுகாயாக வந்து போகும் குண்டூர் கொண்டய்யாகாரு ரொம்ப ரொம்ப சுவாரஸ்யம்காரு.

ஆரம்பத்திலிருந்தே அவ்வப்போது தலைகாட்டி, முடிவுப் பகுதியில் முக்கிய திருப்பத்துக்குக் காரணமாகும் இன்ஸ்பெக்டர் பூனைக் கண்ணன் (விஜய்)... ஆக்ரோஷத்துக்கும் முரட்டுத்தனத்துக்கும் கொண்டு வந்திருப்பது ஒரு புதிய பரிமாணம்.

இடைவேளைக்கு முன் கலகல.

இடைவேளைக்குப் பின் கனம்... சற்று மிகையான கனம்.

- சி. ஆர். கே.

பாப்கார்ன் கனவுகள்

16

எதிரே பஸ் ஸ்டாண்டில் கல்லூரிப் பெண் பார்க்கக் கூசி கண்மூடிக் கொள்கிறாள். பாதி டீயைக் கடையில் வைத்துப் பக்கத்திலிருப்பவர் செய்தித்தாளில் புகுந்து, வழியில் சைக்கிள் தள்ளி, ஒருவர் உதவிக்கு ஓடி வருகிறார். திருப்பத்தில் செருப்புக் கடை வைத்தவன் தெய்வாதீனமாய்த் தப்புகிறான். சடன் பிரேக்கில் லாரி ஸ்கூட்டர் மேல் ஏறி நிற்கிறது. ஒரு கிலோ முந்திரி அல்வா அருகில் கிடக்கிறது. சப்தத்தில் ஸ்தம்பித்த சூழல் பரபரப்படைகிறது. பலத்த இரத்தச் சேதம். நிச்சயம் எலும்பு முறிவு. மூக்குக் கண்ணாடி உடைந்து முகத்தில் இறங்கி விட்டது. இத்தனை பெரிய விபத்தில் பிழைத்தது பெரிய காரியம். பின்பக்கம் பிரான்ஸிஸ்ராஜ் என்ன ஆனான்? வாயில் யாரோ தண்ணீர் ஊற்றுகிறார்கள். மேலே வட்டமாய் ஆகாயம் மறைக்கும் தலைகள்.

''மூஞ்சியிலே ரொம்ப டேமேஜா சார்?''

கும்பலில் ஒருவரை லக்ஷ்மிநாராயணன் கேட்கிறான். கேள்வி புரிந்து பதில் வருவதற்குள் அவன் நினைவு தப்பி விடுகிறது.

மருத்துவமனையில் இடது பக்கம் அவசர சிகிச்சைப் பிரிவு. கட்டிய புடைவையில் வந்து விஜயலக்ஷ்மி கலங்கி நிற்கிறாள். இடுப்பில் குழந்தை அப்பா எங்கேயென்று அவள் கன்னத்தை இழுக்கிறது. எதுவும் பிடிக்காமல் தலையை மாமனார் திருப்பிக் கொள்கிறார். உள்ளே போய்ப் பார்க்க அனுமதி கிடைக்கிறது.

''நீ முதல்லே போம்மா.''

விஜயலக்ஷ்மி கட்டிலருகில் விசும்பி நிற்கிறாள். அவனை அருகில் அழைத்து, மெலிந்த குரலில் லக்ஷ்மிநாராயணன் கேட்கிறான்.

''மூஞ்சியிலே ரொம்ப டேமேஜா?''

ம.வே.சிவகுமார்

பீச் ஸ்டேஷன் அலுவலகம். வாசலில் பட்டாசு வெடிக்கிறது. ஒன்றரை மாதம் சிகிச்சை முடிந்து விபத்துக்குப் பின் வேலைக்குச் சேரும் அருமை அண்ணன் லக்ஷ்மிநாராயணன். தர்மம் தலை காக்கும். முப்பிறவி எம்.ஜி.ஆர். கன்னத்தில் சின்ன தாய் ஒரு தழும்பு. புருவத்தின் குறுக்கே ஒரு வெட்டு. வலது கைக்குத் தூளி கட்டியிருக்கிறது. விபத்து பற்றி ஆங்காங்கே கவி சேஷப் பிரசங்கம். கரண்ட் அக்கவுண்ட் வனஜா தனியே அனுதாபம் தெரிவிக்கிறாள்.

''அதை விடு. தமிழனுக்கு முகவெட்டு இல்லேன்னு இனிமே எவனாவது சொல்ல முடியுமா?''

சிரித்துக் கொண்டே லக்ஷ்மிநாராயணன் கண்ணடித்துத் திரும்புகிறான். கவுண்டருக்கு வெளியே அவனைப் பார்க்க பிரான்ஸிஸ் ராஜ் வந்து நிற்கிறான்.

வில்லிவாக்கம் வீடு. வாசலில் விளக்கு அணைந்திருக்கிறது. இருட்டில் விஜயலக்ஷ்மி காத்திருக்கிறாள். கையில் டார்ச் லைட்டுடன் வீட்டுச் சொந்தக்கார நவகோடி அம்மாள் துணைக்கு இருக்கிறாள். எதிர் வீட்டில் விளக்கு எரிகிறது. சினிமா ஷூட்டிங் என்று ஒரு மாதம் விடுமுறை. எதிரே லாரி வந்ததில் ஒன்றரை மாதம் விடுமுறை. சம்பளம் வருமா என்று தெரியவில்லை. ஆஸ்பத்திரி, மருந்து என்று முன் பணம் மாமனார் நிறையவே செலவழித்திருக்கிறார். அதைப் பற்றியெல்லாம் கூட கவலையில்லை. ஆனால் லக்ஷ்மிநாராயணன் இன்னும் எத்தனை நாட்கள் இப்படியே இருக்கப் போகிறான்? பேச்சுவாக்கில் மகளிடம் கேட்கச் சொல்லி நவகோடி அம்மாளிடம் மறியமே மாமனார் சொல்லியிருக்கிறார். புதியதாய் அங்க லாய்க்க என்ன இருக்கிறது? விஜயலக்ஷ்மி அசடு. சிரித்த முகத்தில் அவன் சொல்லுவதற்கெல்லாம் தலையை ஆட்டிக் கொண்டேயிருப்பதற்கு என்றேனும் அவள் வருத்தப்படப் போகிறாள். வாசல் கோலத்தில் டார்ச் அடித்து, யோசித்து, வார்த்தைகள்

போட்டு நவகோடி அம்மாள், மாமனார் எச்சரிக்கை பற்றி விஜயலக்ஷ்மியிடம் சொல்லுகிறாள். வெளியே நிலா ஒளியில் மூக்குத்தி பளீரிட எல்லாவற்றையும் கேட்டு விட்டு விஜயலக்ஷ்மி சிரித்துக் கொண்டே தலையாட்டுகிறாள்.


தெருக்கதவு சைக்கிள் மோதித் திறக்கிறது. ஒற்றைக் கையில் தள்ளிக் கொண்டு சிரித்தபடி லக்ஷ்மிநாராயணன் உள்ளே வருகிறான். புடைவையை இழுத்துப் போர்த்தி நவகோடி அம்மாள் எழுந்திருக்கிறாள்.

''ஒரு நிமிஷம்.''

லக்ஷ்மிநாராயணன் இடது கையில் பர்ஸ் எடுத்துப் பணம் எண்ணுகிறான்.

''இதுல ரெண்டாயிரத்தி நூறு ரூபாய் இருக்கு. உங்கப்பா ஆஸ்பத்திரிக்கு செலவழிச்சது. இது ஆயிரத்தைந்நூறு ரூபாய். இந்த மாசம் செலவுக்கு. ரெண்டும் கொடுத்தாச்சு. மாமி சாட்சி. மாமி, நீங்க போகலாம்.''

சமையலறை. இரவு உணவு சூடு செய்ய விஜயலக்ஷ்மி ஸ்டவ் பற்ற வைக்கிறாள். பின்னாலேயே வந்து கண்ட இடங்களில் தொட்டுச் சீண்டுகிற லக்ஷ்மிநாராயணன் கையை ஒவ்வொரு முறையும் விளையாட்டாகவே தட்டி விடுகிறாள்.



''என்ன அநியாயம்டா இது? ஏதுடா, பாவம் உடல் ஊனமுற்றவனாச்சே. சலுகை காட்டுவோம்னு நெனைக்கிறாங்களா இந்தப் பொம்பளைங்க.''

தூளியில் தொங்குகிற வலது கையை லக்ஷ்மிநாராயணன் தூக்கிக் காட்டுகிறான். சிரித்துக் கொண்டே விஜயலக்ஷ்மி ஸ்பூனில் ஊட்டி விடுகிறாள்.

''உன் பிள்ளைக்குக் கவலையில்லே. நல்லா வளர்வான்.''

விஜயலக்ஷ்மி புரியாமல் அவனைப் பார்க்கிறாள்.

''நீதான் ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்க்கறியே.''

சிரித்துக் கொண்டே லக்ஷ்மிநாராயணன் மேலே தொடர்கிறான். ஸ்கூட்டரை விற்றாகி விட்டது. அதில் வந்த பணம்தான் வைத்தியச் செலவு, இந்த மாதச் செலவு மற்றும் லிங்கிச்செட்டித் தெருவில் விநாயகம் செட்டியாரின் கடன் அடைத்தது எல்லாமும். வண்டி அவன் பெயரில்தான் இருக்கும். சுரேஷ் பாபு அதை வாங்கிக் கொண்டு விட்டான். வங்கியில் பிரச்னை எதுவும் இருக்காது. வேலைக்குச் சேர்ந்த முதல் நாளிலேயே இரண்டு டைரக்டர்களை அவர்கள் வீடுகளில் பார்த்து வாய்ப்புக் கேட்டிருக்கிறான். இருவரும் கை சரியான பிறகு அடுத்த மாதம் வந்து பார்க்கச் சொல்லியிருக்கிறார்கள்.

சமையலறை வேலைகள் முடிந்து குழந்தைக்குப் பால் கரைத்து தம்ளருடன் விஜயலக்ஷ்மி படுக்கையறையில் நுழைகிறாள். பேசிக் கொண்டே லக்ஷ்மிநாராயணன் பின்தொடர்கிறான்.

''விஜயலக்ஷ்மி...''

''உஷ்!''

''என்ன?''

''குழந்தை. மெதுவாப் பேசுங்கோ!''

''உத்தரவு தாயே. உங்கிட்டே ஒண்ணு கேக்கட்டுமா?''

''என்ன?''

''இரு இரு. அதுக்கு முன்னால ஒண்ணு கேக்கறேன். ஆமா நீ ஒண்ணும் சாப்பிடலே போலிருக்கு? பட்டினி போட்டா உடம்பு என்னத்துக்காகும்? போ போ, போய்ச் சாப்பிடு.''

''ம்ஹூம்.''

''ஏன்?''

''விரதம்.''

''விரதமா? ஏன்? அதான் நமக்குப் புள்ள பொறந்தாச்சே.''

''அதுக்கில்லே. இது வேற.''

''சொல்லிடு, சொல்லிடு.''

''மாட்டேன்.''

''இப்ப சொல்லப் போறியா இல்லியா?''

''ம்ஹூம்.''

''தமிழனுக்கு அநாவசியமா கோவம் வரச் செய்யாதே. விஷயத்தைச் சொல்லு.''

''எல்லாம் அந்தத் தமிழன் ஆசைப் படற மாதிரி ஜெயிக்கணும்னுதான். செவ்வாய்க் கிழமை. முருகருக்கு வேண்டிட்டிருக்கேன்.''

''அட, முருகர். தமிழ்க் கடவுள். நம் மாளு. அப்ப சரி.''

''வேற என்னவோ சொல்லணும் னீங்களே?''

இரவு விளக்கில் விஜயலக்ஷ்மி ஞாபகமாய்க் கேட்கிறாள்.

''அடாடா. மனைவி ஒரு மந்திரின்னு பெரியவங்க சும்மாவா சொன்னாங்க. நல்ல வேளை. ஞாபகப்படுத்தினே.''

''சொல்லுங்க.''

''அது.. வேற ஒண்ணுமில்லே. ஒரு ரெண்டாயிரம் ரூபாய் செலவு பண்ணி ஃபோட்டோ ஆல்பம் ஒண்ணு பண்ணலாம்னு...''

''ரெண்டாயிரம் ரூபாயா?''


''ஆமாம். மொத்தம் அவ்வளவு பணம் ஆகும். மேக்கப் மேன், காஸ்ட்யூமர், போட்டோகிராபர் மூணு பேருமே இண்டஸ்ட்ரில பெரிய ஆளுங்க. ஆல்பம் நல்லா வரும். காயம் பட்டது தெரியாது. பாக்கற டைரக்டரெல்லாம் யோசிக்க ஆரம்பிச்சுருவான். வளமான எதிர்காலம் காத்திருக்கு. என்ன சொல்றே?''

''காசு.''

''அதை விடு. லிங்கிச் செட்டித் தெருவிலே புது அப்ளிகேஷன் போட்டுறலாம். ஆல்பம் பண்ணணும். அதுக்கு என்ன சொல்றே?''

விஜயலக்ஷ்மி சிரிக்கிறாள்.

''நல்லா யோசிக்கச் சொல்லு. அவசரமில்லே. நான் முயற்சி பண்ணி எனக்கு ஒரு சான்ஸ் கிடைச்சது. கடவுளுக்கே அது பொறுக்கலே. குறுக்கே ஒரு லாரியை



''பக்கவாத்தியக்காரருக்கு உங்க மேலே வருத்தம்!''

''ஏன்?''

''அவர் தனி ஆவர்த்தனம் வாசிக்க ஆரம்பிச்சதும் நைஸா நீங்க ஒரியாரிங் எப்டைக் கழற்றியதை அவர் கவனிச்சுட்டார்!''

- ஞா. ஞானமுத்து.

அனுப்பிச்சுட்டாரு. அந்த தெய்வத்துனால முடியாட்டாக் கூட என் முயற்சியினால நான் கண்டிப்பா ஜெயிக்கக் காட்டுவேன். ஆல்பம் பண்ணிக்கட்டுமா? நல்லா யோசிச்சுப் பதில் சொல்லு.''

''யோசிக்க என்ன இருக்கு. ஜில் பாஸ்தான்.''

''அப்புறம் நைனா சொன்னார், நவ கோடி அம்மா சொன்னான்னு கட்சி மாறிட மாட்டியே?''

''சீ!''

''அதானே கேட்டேன்...''

மகிழ்ச்சியில் தலையணையில் உருண்டு லக்ஷ்மிநாராயணன் நெருங்க முயல, விஜயலக்ஷ்மி ''செவ்வாய்க் கிழமை, செவ்வாய்க் கிழமை'' என்று அலறித் தடுக்கிறாள்.

வலது கை தூளியிலிருந்து பதினைந்து நாட்களில் விடுபடுகிறது. ஒரு விடுமுறை நாளில், மாடியில், மரத்து நிழலில் லக்ஷ்மி நாராயணனுக்குக் கண்ணாடி காட்டி, மேக்கப் நடக்கிறது. கௌபாய் உடைகள், ஆதிசங்கரர், கர்ணன் வேஷம், கௌரவம் ஜார்ஜ் மன்னர் என்று காஸ்ட்யூமர் பல அளவுகளில் உடைகள் கொண்டு வந்திருக் கிறான். புகைப்படக்காரர் உதவியாளருடன் மோட்டார் பைக்கில் இறங்குகிறார். எதிர் வீட்டு ஜன்னலில் மாறுபட்ட உடைகளில் மொட்டை மாடியில் வாள், துப்பாக்கி, கதை என்று விசித்திரமாய்ப் பொருள்கள் ஏந்தி கம்பீரம் காட்டும் லக்ஷ்மிநாராயணன் தெரிகிறான். விஷயம் இன்னதென்று விளங் காமல் விவரமறிய மாமனார் தோளில் துண்டு போர்த்தி தெருவைக் கடந்து வரு கிறார்.

''வாங்கப்பா.''

''இருக்கட்டும். மாடியில மாப்பிள்ளை என்ன பண்றார்?''

''போட்டோ எடுத்துக்கறார்.''

''போட்டோவா? ஏன் ரயில் சீசன் டிக்கெட் தொலைஞ்சு போயிடுத்தாமா?''

கிண்டலில் மாமனார் கேட்கிறார். அது புரியாத எளிமையில் விஜயலக்ஷ்மி அவருக் குப் புகைப்பட ஆல்பம் பற்றி விளக்கு கிறாள்.

''சினிமா சான்ஸா? இந்த வயசுக்கு மேலயா? ரெண்டாயிரம் ரூபாய் செலவா? என்னம்மா பைத்தியக்காரத்தனம்? அதுவும் ஆக்ஸிடெண்ட் ஆகி மூஞ்சியைப் பார்த்தா பிளேடு பக்கிரி மாதிரி வெட்டு வேற. இதுல என்ன பெரிய சிவாஜின்னு நெனைப்பா?''

வயிற்றெரிச்சலில் மாமனார் அங்க லாய்க்க, மாடிப் படியில் அனைவருக்கும் டீ சொல்ல வந்த லக்ஷ்மிநாராயணன் காதில் அவரது கடைசி வரி மட்டும் விழுந்து விடு கிறது.

இரவு பத்தரை மணி. தம் வீட்டு வாசலில் மாமனார் ஈஸிசேரில் பக்திப் புத் தகம் படித்துக் கொண்டிருக்க, பீர் பாட்டில் ஒன்று அவரை நோக்கி உருண்டு வருகிறது.

பயத்தில் மெல்ல மாமனார் நிமிர் கிறார்.

ரௌடி போன்ற உடையில் லக்ஷ்மி நாராயணன். வாசலில் பீடி கண்டி எரி கிறான்.

சட்டைக் கையை மடக்கி விட்டு, ஸ்டைல் நடை போட்டு, பயங்கரமாய்ச் சிரித்து, குடித்துச் சிவந்த கண்களைச் சுழற்றிப் பாடலைத் துவங்குகிறான்.

''இரவினில் ஆட்டம், பகலினில்



''ஹோட்டல்ல என்ன கலாட்டா?''

''ஃபேமிலி ரோஸ்ட் சாப்பிடவந்த குடும்பத்துக்குள்ள பாகம் பிரிக்கும் போது தகராறு வந்துட்டுதாம்!''

– வி. ரஜ்னிபாலாஜி.

தூக்கம்...''

இதுவரை கண்டிராத முற்றிலும் மாறு பட்ட வேடத்தில் மாப்பிள்ளையைக் கண்ட தும் மாமனார் மிரண்டு விடுகிறார். பயத் தில் நகரத் துடிக்கிற அவரை லக்ஷ்மிநாரா யணன் தன் ஆடல், பாடல்களில் டபாய்த்து அறைக்குள்ளேயே துரத்துகிறான். பயத்தில் வியர்த்து மாமனார் கையெடுத்துக் கும்பிடு கிறார்.

''பயந்துட்டீங்களா? அப்ப சரி, நான் நல்ல நடிகன்தான். குடிச்சிருக்கேன்னு நெனைச்சீங்களா? நல்ல தமாஷ்! நான் உங்க பொண்ணுக்குப் பிடிக்கலைன்னு சிக ரெட்டையே விட்டவன். நல்லதுதான் உங்க கண்ணுலயே படாதே. என்ன கேட்டீங்க? பெரிய சிவாஜின்னு நெனைப்பான்னு தானே கேட்டீங்க? ஜாக்கிரதை. தமிழன் சாதாரண ஆள் இல்லே. சிவாஜி சிஷ்யன்.''

காலரைத் தூக்கி விட்டுத் தெருவைக் கடந்து, லக்ஷ்மிநாராயணன் தன் வீட்டிற்குப் போகிறான். அவன் போன திசையை மாம னார் வாய் திறந்து பார்த்து நிற்கிறார்.

(தொடரும்)

பம்பாய்க் கடிதம்

அடங்கிய எரிமலை!

அயோத்யா சம்பவத்திற்குப் பிறகு பம்பாயில் நிகழ்ந்த கலவரங்களுக்கும், அண்மையில் நடந்த கலவரங்களுக்கும் இடையே முக்கிய வித்யாசம் உண்டு. டிசம்பரில் மசூதிகளும், கோயில்களும் மட்டுமே கலவரக்காரர்களின் தாக்குதலுக்கு ஆளாயின. ஆனால் இப்போது தாக்கப்பட்டதோ முஸ்லீம் மதத்தினரும், அவர்களது இல்லங்களுமே. பெரும்பான்மை முஸ்லீம்கள் வசிக்கும் பைதோனி, நாக்பாடா, டோங்க்ரீ பகுதிகளில் ஆரம்பித்த கலவரம், தாராவி, ஜோகேஸ்வரி, மாஹிம் பகுதிகளில் காட்டுத்தீ போல் பரவியது. நாலே நாட்களில், 'பம்பாயின் எந்தப் பகுதியுமே பாதுகாப்பானது அல்ல', என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. கஃப் பரேட், மலபார்ஹில் போன்ற பகுதிகளில் வசிக்கும் மேட்டுக் குடியினராயினும், தாராவி போன்ற குடிசைப் பகுதியினராயினும் சரி, எல்லோரும் சம அளவில் பீதிக்கு உள்ளாயினர்.

மஹாராஷ்டிர முதல்வர் திறமைசாலியாக இருந்திருந்தால் ஆரம்பத்திலேயே இக்கலவரங்களை அடக்கியிருக்கலாம். ஆனால் பம்பாயின் துரதிருஷ்டம், நாயக், தாம் அத்துணை திறமைசாலியல்ல என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார். போதாக் குறைக்குக் காங்கிரஸின் முக்கிய மூன்று தலைவர்களான சவான், பவார், நாயக் ஆகிய மூவரிடையிலும் ஒற்றுமையில்லை! கலவரங்கள் ஆரம்பித்துப் பரவிய நான்கு நாட்களுக்கு நாயக் விட்டேற்றியாக இருந்தார். கலவரம் நடந்த இடங்களுக்குச் சென்று பார்க்கக் கூட இல்லை. இதைப் பற்றி 'டைம்ஸ் ஆப் இந்தியா' வில் ஆர். கே. லக்ஷ்மண் கார்ட்டூன் ஒன்றும் வெளியானது. பிறகு ராணுவம் வரவழைக்கப்பட்டாலும், மாநில அரசாங்கத்தின் பூரண அனுமதி அளிக்கப்படாததால் அவர்களால் சரிவரச் செயல்பட முடியவில்லை. 8 - ம் தேதி இரவு பிரதமரால் இங்கு அனுப்பப்பட்ட பாதுகாப்பு அமைச்சர் பவாரும் ஒன்றும் சாதிக்கவில்லை.

இதற்கிடையில் சி.எஸ். ராஜினாமா செய்ய, அவருக்குப் பதில் பொறுப்பேற்ற அலெக்ஸாண்டர் பதவி ஏற்ற அன்றே பத்திரிகையில் அடி பட்டார். பதவி ஏற்பு விழாவுக்கான அழைப்பிதழ்கள், ஆயுதம் தாங்கிய போலீஸாரால் முக்கிய புள்ளிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. 'பம்பாய் பற்றி எரியும் போது இந்த மாதிரி சடங்குகள் தேவைதானா?' என முன்னாள் தலைமைச் செயலரின் துணைவி திருமதி டிசௌஸா கேள்வி எழுப்பி, தமக்கு வந்த அழைப்பிதழைத் திருப்பி அனுப்பி விட்டார்!

வில்ஸ் கோப்பைப் போட்டிக்கு பம்பாய் அணிக்கு விளையாட கல்கத்தா சென்ற இக்பால் கான் திரும்பி வந்த போது, அவரது வீடு எரிக்கப்பட்டிருந்தது. அவரது குடும்பத்தினர் ஓர் உறவினர் வீட்டில் தஞ்சம் புகுந்திருந்தனர். அவரது பெற்றோரோ உத்திரப் பிரதேசத்திற்கே சென்று விட்டனர். பிரபல உருது பிலிட்ஸின் ஆசிரியர் ஹாரூன் ரஷீதின் வீடும் எரிக்கப்பட்டது. Empire of India Philatelic Society -யின் தலைவர் எழுபது வயதான பெரோஸ் மெரோராவும் அவரது துணைவியாரான மெஹ்ரு-வும் அவர்களது கட்டடத்தோடு சேர்த்து எரிக்கப்பட்டது பரிதாபமான சம்பவம். இவர்கள் முஸ்லிம்கள் இல்லை எனினும் இவர்கள் கட்டடத்தில் ஒரு முஸ்லிம் குடும்பம் வசித்ததால் எரித்து விட்டனர்.

கலவரங்களினால் ஏற்பட்ட மொத்த நஷ்டம் 700 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அறுபது சதம் பேக்கரிகள் (எல்லாம் முஸ்லிம்களுடையது) எரிக்கப்பட்டு விட்டதால் நகரத்தில் ரொட்டி கூட கிடைக்கவில்லை.

இத்தனை கலவரங்களிடையேயும் நல்ல உள்ளம் படைத்த மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். பம்பாய் நகரின் துணை



* ஆர்.கே. லக்ஷ்மண் கார்ட்டூன்

கமிஷனர் கைர்னார் தம் கீழ் வேலை செய்யும் முஸ்லிம் பணியாளரின் மகளைத் தம் வீட்டில் தங்கச் செய்து, பாதுகாப்புடன் எம்.டி. தேர்வு எழுத உதவினார். கனில் கவாஸ்கர் ஒரு கார் தாக்கப்படுவதைத் தம் வீட்டு மாடியிலிருந்து பார்த்துத் தாமே அங்கு "சென்று, அவர்களிடம், 'என்னை முதலில் அடியுங்கள்' என்று கூறியதால், தாக்க வந்த இளைஞர்கள் பறந்து விட்டனர். காரிலிருந்த ஏழு பேரும் காப்பாற்றப் பட்டனர்.

கலவரம் நடந்த சமயத்தில் மத்திய ரயில்வேயினர் திறமையாகச் செயல்பட்டு பதினைந்துக்கு மேற்பட்ட விசேஷ ரயில்களை பீஹார், உ.பி. வழியாக கல்கத்தாவிற்கு விட்டனர். அதன் மூலம் 60,000க்கும் மேற்பட்டவர்கள் மூட்டை, முடிச்சுகளுடன் பம்பாயைவிட்டு வெளியேறினார்கள். இதில் முக்கால்வாசி பேர் தினக்கூலி செய்யும் ஏழைகள். மற்றவர் ஏழைகளாக்கப்பட்டவர்கள்! வயிற்றில் பசியும், மனதில் பீதியும் கொண்ட இவர்கள் ஜாதி, மத வேறுபாடு இன்றி உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடினர்.

கலவரங்களில் சிவசேனாவின் பங்கு என்ன என்பது கேள்விக் குறியாக உள்ளது. அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மஹா ஆர்த்தி, பதற்ற நிலையை அதிகரித்ததென்னவோ உண்மைதான். கோவில்களின் முன்னால் தெருக்களில் நின்று கொண்டு தினமும் ஒரு மணி நேரம் ஆர்த்தி பாடல்களைப் பாடுவதே மஹா ஆர்த்தி. போலீஸ் இதனை நிறுத்தும்படி வேண்டுகோள் விடுத்த போது, 'வெள்ளிக்கிழமை தோறும் முஸ்லிம்கள் தெருக்களில் நமாஸ் செய்கின்றனரே, அதை முதலில் தடுங்கள்' என்று தம் வேலையைத் தொடர்ந்தனர்! இதன் விளைவாக ஜனவரி 15 - ம் தேதி தொழுகைகள் மசூதிக்குள்ளேயே நடத்தப்பட்டன. சிவசேனா - எம்.எல்.ஏ ஒருவர் ஆயுதங்களுடன் பிடிபட்டார். அதே சமயம் காங்கிரஸ் கட்சியின் நகராட்சிக் கழக உறுப்பினர் திருமதி சாந்தா பென் பாரியா போலீஸாரின் குண்டுக்கு இரையானார்..

கலவரங்கள் உச்ச கட்டத்தில் இருந்த போது மக்களிடையே எழுந்த கேள்வி, 'பிரதமர் ஏன் இன்னமும் பம்பாயைப் பார்வையிட வரவில்லை?' என்பதே. கலவரங்கள் ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வந்தபின், அவர் பம்பாய் வந்து சென்ற போது அவர்களின் கருத்து: 'இவர் ஏன் வந்தார்?'

ஆஸ்பத்திரியில் காரை விட்டிறங்கி பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்த பிரதமர், எல்லா இடங்களுக்கும் காரை விட்டிறங்காமலே ஒரு 'சர்வே' செய்து விட்டுப் போய் விட்டார். மேலும் அவர் தெற்கு பம்பாயை விட்டு அசையாத பெரும் புள்ளிகளோடு கவர்னர் மாளிகையில் மீட்டிங் போட்டது பலருக்கும் அதிருப்தியையே அளித்தது.



✱ பற்றி எரியும் பம்பாய்

கலவரம் ஏன் ஆரம்பித்தது? அதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. 1) முதல்வர் நாயக்கைக் கவிழ்க்க அவரது எதிரிகள் செய்த சதியின் விளைவு. 2) குடிசைப் பகுதிகளை எரிப்பதன் மூலம் நிலம் காலியாகி அங்கு அடுக்கு மாடி கட்டலாம் எனத்திட்டம் போட்ட காண்ட்ராக்டர்களின் வேலையாகவும் இருக்கலாம். 3) சிவசேனா ஆதரிக்கும் 25 வயதிற்குட்பட்ட வேலையில்லா இளைஞர்கள் தங்களது பலத்தைக் காண்பிக்க ஒரு வாய்ப்பாக இதனை எடுத்துக் கொண்டிருக்கலாம். 4) பம்பாயில் உள்ள குண்டர்கள், போலீஸின் கையாலாகாத்தனத்தைப் பயன்படுத்தி மக்களிடையே பீதியைக் கிளப்பி விட இந்தக் கலவரங்களை ஆரம்பித்திருக்கலாம்.

என்ன காரணங்கள், ஆட்சியாளர்கள் சரியாகச் செயல்பட்டனரா என்றெல்லாம் அமையவிருக்கும் கமிஷன் ஆற அமர விசாரித்து, அறிக்கை தயாரித்து, அது தூசி படிந்து தூங்குவது ஒருபுறமிருக்க, பல்வேறு மக்களிடையே நல்லிணக்கம் வளர பாலமிடிவ்வாக ஏதேனும் உடனடியாகச் செய்யப்பட வேண்டும். இல்லையெனில் இப்போது ஏற்பட்ட மனக் குமுறல் மறுபடி ஏதேனும் ஒரு சிறிய காரணம் தோன்றினால் கூட எரிமலையாக வெடிக்கும் வாய்ப்புண்டு.

- அம்ருதா பார்த்தசாரதி

மேலாண்மை பொன்னுச்சாமி

28

சொர்ணம் இங்கு கொண்டு வரப்பட்டு எத்தனை நாளாயிற்று? செவ்வாயோடு செவ்வாய் எட்டு, புதன் ஒன்பது, வியாழன் பத்து... அடியம்மா... பத்து நாட்களா, ஆச்சு?

இது என்ன... சுற்றிலும் எந்த வீடும் இல்லை. காடும் இல்லை. வெறும் நிலம். வீடு கட்டுவதற்காக ப்ளாட், ப்ளாட்டாக அளக்கப்பட்டு... வெள்ளை வெள்ளைக் கற்கள் போடப்பட்டுள்ளன.

இது என்ன... நம்ம வீட்டோடு ஒப்பிட்டால்... சின்ன வீடு. ஆனால், வசதிகளில் பெரிய வீடு. வழவழப்பான தளம். பெயிண்டிங் செய்யப்பட்ட சுவர். ஆளுயரக் கண்ணாடி. அதற்கு அடியில் இரண்டு டிராயர் வசதிகளுடன் பெட்டி. முன்னால், உட்கார்ந்து கொள்ள பிரம்புக் கூடை.

பக்கத்திலேயே பெட். அகலமான இரும்புக் கட்டில். மேலே மெத்தை விரிப்பு. தலையணை. மேலே மின் விசிறி.. அலமாரியைத் திறந்தால்... முழுக்க பட்டுச் சேலைகள், உயர்ரகச் சேலைகள். ஜவுளிக் கடை மாதிரி புத்தம் புதிய சேலைகள்.

அதன் இரண்டாவது அறையில், ஒரு டிராயர். அதை உருவினால்... தங்கச் சங்கிலிகள். ஆபரணங்கள்.

மாமா வந்திருந்தால் கூட... குளிக்க முடியாமல் பட்ட பாடுகள். தொழுவத்தில் அடைப்புத் திறப்பு இல்லாத இடத்தில், இருட்டையே சுவராகவும் மறைப்பாகவும் வைத்துக் கொண்டு குளிக்க வேண்டிய தன் வீடு...

இங்கே குளியலறையே பிரும்மாண்டமாய்... காற்றும் நுழைய முடியாத கதவு. உள்ளே தண்ணீர் வருகிற குழாய். அதன் பக்கத்தில் வாஷ்பேஸின். அதன் மேல் கண்ணாடி, சீப்பு, பேஸ்ட், பிரஷ்... எல்லா வசதிகளும்.

அன்றைக்கு - போன செவ்வாய்க்கு முந்திய செவ்வாயன்று -

இரவு 7.30 மணியிருக்கும். கார் இங்கு வந்து சேர்ந்தது. அதிகமாகத் திமிறி ஆர்ப்பாட்டம் செய்யாத சொர்ணம், உள்ளே கொண்டு வரப்பட்டாள். பழநியின் ஏற்பாடுதான் இது என்று நம்பினாள்.

பழநி ஏற்பாடாக இருந்தாலே... கொஞ்சம் பயந்தாள். கொஞ்சம் அருவருப்பாகக் கூட இருந்தது.

இவள் கடத்தும்படி 'உத்தரவிட்டு' எழுதிய கடிதத்திற்கு அவன் ஒரு பதில் கடிதம் போட்டிருந்தான்.

அந்தக் கடிதத்தில் பழநியின் 'நிஜம்' தெரிந்தது. அவனது உள்மனக் கிடக்கை தெரிந்தது. காதல் இருந்தது. கனிவு இருந்தது. கௌரவமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் இருந்தது. கண்ணியமான தோழமை வாழ்க்கை நம்முள் மலரும் என்று நம்பிக்கை கூறியிருந்தது.

ஜாதியின் பொய்மை பற்றிய வியாக்யானம் இருந்தது. மனித நேயத்தின் ஆழமும், விரிவும் இருந்தன.

இவளோ... பண்ணையார் தோரணையில் காப்பாற்றும்படி கட்டளையிட்டிருந்தாள்.

அவனோ..... அபயம் அளிக்கிற ஆபத்பாந்தவனைப் போல எழுதியிருக்கிறான்.

இவளுக்கு அந்தக் கடிதத்தை வாசித்தவுடன் எரிச்சலாக இருந்தது.


எங்கள் வீட்டில் சாணிக் கூடை சுமந்து, பழைய கஞ்சியை வாசலில் உட்கார்ந்து குடித்த ஓர் அடிமையின் பேரன். எளிய சாதிக்காரன்.

இவனுக்கு நான் மனைவியாகவா? இவனிடம் எனக்குத் தோழமையா? இவனுக்கு இப்படியோர் பகற்கனவா?

படித்தால்... பிறந்த ஜாதி மாறி விடுமா? உத்தியோகம் பார்த்தால் குலம் மாறி விடுமா? என்ன... பெரிய உத்தியோகம்? கூலிக்கார உத்தியோகம்!

ஒரு கூலிக்காரப் பயலுக்கு வாழ்க்கைப் பட்டால், என்ன கௌரவ வாழ்க்கை கிட்டி விடும்? இப்படியோர் நினைப்பா... அவனுக்கு?

முற்றுகை



அவனது கறுத்த மூஞ்சியும், கொத்து மீசையும், ச்சே! அட்டைக் கரி. அந்தப் பய லுக்கு என் மீது ஆசையா?

ஆசைப்பட என்ன உரிமை இருக்கிறது? என்ன நியாயம் இருக்கிறது? என் மாமா வுக்காவது என் மீது ஆசைப்பட நியாயம் இருக்கிறது. இவனுக்கு என்ன இருக்கிறது?

எத்தனை அத்துமீறி மனசை அலைய விட்டிருக்கிறான்? ஜாதியைக் கடந்து, மரபு களைக் கடந்து உயர்ந்த குடும்பத்துப் பெண் என்கிற மரியாதையைக் கடந்து, அவன் ஆசை பாய்ந்திருக்கிறது என்றால்... அவ னுக்கு எத்தனை திமிர் இருக்க வேண்டும்?

அவனது தகுதியைப் பற்றிய உணர் வைக் கூட இழந்து விட்டானா?

பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்பார் கள். உதவியும் கூட... தகுதி, தராதரம் அறிந்துதான் கேட்க வேண்டும். தரமில்லாத வனின் உதவியைப் பெற்றால்...' அதுவும் கூட ஓர் இழிவுதான்...

ச்சே! எத்தனை மட்டமாக நினைத்து விட்டான்! அவன் ஆயுசு பூராவும் உத்தி யோகம் பார்த்து வருகிற வருமானம், என் வீட்டின் விலை கூடப் பெறுமா?

அவனுக்கு நான் கடிதம் எழுதியது, முட்டாள்தனம்.

முனியசாமியைப் போலவே குணத்தில் இருப்பான் என்று அவள் நினைத்தது தப்பாகி விட்டது...

முனியசாமியல்ல பழநி. பழநியோட காலம் வேறா? பண்பு வேறா? படிப்பும் உத்தியோகமும் அவனுள் வேறு பழநியை உண்டாக்கி விட்டதா?

சரி.. இப்போது என்ன செய்வது?

இவனது பாதுகாப்பில் இருப்பது, பாதுகாப்பா? தப்பான கருத்து உருவாகி விடுமா? பழநியோடு ஓடி வந்து விட்டதாக ஊர் கருதுமா? தானே அவனைக் காதலனாக ஒப்புக் கொண்டதாக ஆகி விடுமா? அய் யய்யோ... அது ஆபத்தல்லவா? அசிங்கமல் லவா? என் கௌரவத்துக்கு இழிவல்லவா? ஒரு பெரிய குடும்பத்துப் பெண் இப்படிச் செய்யலாமா?

சொர்ணத்துக்குள் இத்தனை கேள்வி களும் அரித்துக் கொண்டிருந்தன. யோசனை களில் குழப்பம். உள் வருத்தம். சிக்கலில் சிக்கிக் கொண்ட ஓர் உணர்வு.

தானே தன்னைச் சிறுமைப்படுத்திக் கொண்ட மாதிரியான சோர்வு. அயற்சி.

அதற்குள் அவள் அறைக்குள் வைத்துப் பூட்டப்பட்டு விட்டாள். விளக்குகள் பிறகு தான் போடப்பட்டன. ஜன்னல் வழியே பார்த்தால் -

ஹாலில், அருந்ததை. தீப்பெட்டி யாபீஸ் முதலாளி.

அவளுக்குள் ஆச்சர்யம். அதிர்ச்சி. கிணறு வெட்ட பூதம் கிளம்பி விட்டதோ

என்று நினைத்தால்... இங்கு வேறு ஏதோ இளம்பியிருக்கிறது.

இது என்ன ஆச்சர்யம்! இவர் எங்கே இங்கே வந்தார்? என் பிரச்னையில் இவர் ஏன் தலையிட வேண்டும்? இவர் ஏன் என்னைக் கடத்த வேண்டும்? என்ன அவசியம்?

அவளுக்குள் திகைப்பு.

''நீங்களா?''

ஒரு மெல்லிய சிரிப்புடன் ஜன்னலை நெருங்கினான். ஆமாம் என்பது போல 'உம்' கொட்டினான்.

''எதுக்கு?''

''ஒன்னைக் காப்பாத்துறதுக்காக மட்டு மில்லே. அப்படிச் சொன்னா... பொய். உன்னைக் கைப்பத்துறதுக்காகவும்தான்.''

''அப்படீன்னா...''

''எனக்கு நீ வேணும்.''

''சம்மதிக்கலேன்னா...?''

''சம்மதிக்கணும். சம்மதிப்பே. சம்ம திக்கிறதுதான் புத்திசாலித்தனம். சொர்ணம், இங்க ஒன்னை மீறி ஒரு காரியமும் நடக் காது. என் விரல் கூட உன் மேலே படாது. என் காத்து கூட உன்னை அண்டாது. மூணு தரமும் சாப்பாடு வரும். காப்பி வரும். பூ வரும். உள்ளே உனக்கு எல்லா வசதியும் இருக்கு. சேலைக, நகைக, எல்லாமே இருக்கு. எல்லாமே ஒனக்குத்தான். இந்த வீடும் ஒனக்குத்தான்.''

''இதெல்லாம்... எதுக்கு?''

''நீ முழு உரிமைகளோட இருக்கணும். சுதந்திரமாச் சிந்திக்கணும். சிந்திச்சப்புறம்... சம்மதிக்கணும். ஏன்னா... நீ எனக்கு வேணும்! எப்பவும் வேணும். நீ, உன்னோட மனக, அன்பு, பாசம் எல்லாமே சேர்ந்து வேணும். சாஸ்வதமா வேணும்.''

புரியாத மனக் குழப்பத்துடன் திகைக் கிற சொர்ணத்தின் முகத்தைப் பார்த்தான். அவன் பார்வையிலும் ஒரு சோகம்.

''சொர்ணம், நா ஒரு கம்பெனி முதலாளி. பெரிய பிஸினஸ் மேன். ரொம் பச் சம்பாதிக்கிறேன்... இதெல்லாமே தொழில். பிழைப்பு. இந்தப் பிழைப்பைப் பிழைக்கிறதுக்காக, நா அடகு வைச்சது, என்னோட வாழ்க்கை. நா இப்ப வாழ்றது, வாழ்க்கையேயில்லை. மலட்டு வாழ்க்கை. கசப்பான வாழ்க்கை...

''அந்த வாழ்க்கையை ஒங்கிட்டே கேக் குறேன். தானமா கேட்கிறேன். எனக்கு ஓர் அழகான துணை வேணும். அன்பான துணை வேணும். நா ஒரு ஆம்பளைதான்னு நானே நம்புற மாதிரி எனக்கு ஒரு கொழந்தை வேணும்.''

''அப்ப... நா ஒரு கொழந்தை பெத்துக் குடுக்குற மெஷினா?''

''இல்லே சொர்ணம், என் வாழ்க் கையை அர்த்தப்படுத்துறவ, நீ.''

அவளுக்கு வெறுப்பாக இருந்தது.

அவனது சோகமும், காலில் விழுந்து கெஞ்சுகிற தோரணையும் எல்லாமே வெறுப்பாக இருந்தது.

அந்தப் பக்கமாய்த் திருப்பிக் கொண் டாள், முகத்தை.

...இதோ பத்து நாளாகி விட்டது. தினந் தோறும் மாலையில் வருகிறான், அருந் கனை. ஏதாவது குறை இருக்கிறதா என்று விசாரிக்கிறான். இவள் எதுவும் பேசவதே யில்லை.

அவன் பாட்டுக்குப் போய் விடுவான்.

ஒவ்வொரு நாளும் வந்த பூ. மல்லி கைப் பூ.

கூந்தலில் வைக்காமலேயே வாடிக் கிடக்கிறது. அதையும் ஒரு பார்வை பார்த்து விட்டுப் போய் விடுவான்.

முதல் இரண்டு நாட்கள் சாப்பிடாமல் இருந்தாள். அப்புறம் பிடிவாதத்தை நீட்டிப் பதில் அர்த்தம் தெரியவில்லை. குளித்தாள். சாப்பிட்டாள். விதம் விதமான டிசைன் களில் சேலைகள். கலர் கலரான டிசைன்கள். உயர்ரகச் சேலைகள்.

உடுத்தினாள். தங்க நகைகளைப் பார்த் தாள்.

எடுக்கவில்லை.

இதோ... ஒன்பது நாள் கழிந்து விட்டது. அருந்கனை வாக்குத் தவற வில்லை. தொடவில்லை. தீண்டவில்லை.

வற்புறுத்தவில்லை. மிரட்டவில்லை. அதட்டவில்லை.

காத்திருக்கத்தான் செய்கிறான். இவளுடைய சம்மதப் பிச்சைக்காக, பார்வையால் இறைஞ்சுகிறான்.

இது இவளுக்குப் பிடிக்கிறது.

மாமாவைப் போல ஆள் வைத்து, வலையை விரித்து, அமுக்க நினைக்கவில்லை. பழநியைப் போல, கௌரவமான வாழ்க்கையை தானம் அளிப்பதாக கர்வமாய் உத்தரவாதம் தரவில்லை.

இவளது கர்வத்திற்கு மதிப்புக் கிடைக்கிறது. அங்கீகாரம் இருக்கிறது. தானம் கேட்கப்படுகிறாள்.

ராமானுஜத்திடம் தானம் கேட்டார்கள். இருந்ததையெல்லாம் அள்ளி வீசினார். இவளிடமும் தானம் கேட்கப்படுகிறது.

இவளிடமும்... அதே வர்க்கக் குணம். அல்லது ரத்த வழிக்குணம். தானமளிக்கிற பரம்பரையில் பிறந்தவள் என்ற நினைப்பு. பிறர் தானத்தில் பிழைப்பது, இழிவு என்று நினைக்கிறவள். வர்க்கத் திமிர். ரத்தத்தில் வந்த கர்வம்.

அந்தக் கர்வமே... அவளது வாழ்வின் பாதையாகிறது.

நேற்றுக் கூட அருஞ்சுனை வந்தான். நிறைய பத்திரங்களைக் கொண்டு வந்து தந்தான்.

பல பெரிய கம்பெனிகளில் வாங்கிய ஷேர் சர்டிபிகேட்டுகள். பங்குதாரர் உரிமைப் பத்திரங்கள்.

எல்லாமே சொர்ணத்தின் பெயருக்கே தான். இதன் மூலம்... சொர்ணம் பெரிய பணக்காரி. சுயபலம் மிக்கவள்.

அம்மா... என்ன ஆனாள்? மாமா என்ன ஆனார்? அக்கா எப்படி இருக்கிறாள்? ரமேஷ் என்ன செய்கிறான்?

ஊரில் நிலவரம் என்ன? இவள் காணாமல் போனதன் பிரதிபலிப்பு என்ன?

மனசு கிடந்து தவிக்கிறது.

இன்றைக்கு அருஞ்சுனை வந்தால்... கேட்கணும்!

எப்படிக் கேட்க? இந்த ஒன்பது நாட்களாக ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை, இவள். இப்போது எப்படிப் பேச? பேசணுமா?

பேசாமல் எப்படி விசாரிப்பது? அறிந்து கொள்ளாமல் இருப்பது எப்படி?

சாயங்காலம் குளித்தாள். நல்ல சேலை ஒன்றை எடுத்து உடுத்தினாள். அலங்கரித்துக் கொண்டாள்.

இன்று பூவையும் எடுத்துக் கூந்தலில் செருகிக் கொண்டாள்.

அருஞ்சுனை வரட்டும்.

வந்தால்... விசாரிக்கணும்.

பேசித்தான் ஆக வேண்டும்.

பேசினால் தோஷமில்லை.

ஸ்கூட்டர் சத்தத்தை ஓர் ஆவலோடு எதிர்பார்த்தாள். மனசு படபடத்தது.

(தொடரும்)

அருள்வாக்கு

மிருகங்களுக்குப் பாபம் இல்லாவிட்டாலும் பயம் இருக்கிறது. எப்போது யார் தன்னைக் கொல்வார்களோ என்ற பிராண பயம் கொடிய மிருகத்துக்கும் கூட நிறைய உண்டு. மனிதனுக்கும் பல விதமான பயங்கள் உண்டு. ஆனால் பயமில்லாமல் செய்து கொள்ள மனிதனுக்கு மட்டுமே வழி இருக்கிறது. மிருகத்துக்கு இந்த வழி இல்லை. பயம் இல்லாமல் செய்து கொள்வது எப்படி? பிறவி இல்லாமல் செய்து கொண்டால்தான் பயம் இல்லாமல் இருக்கலாம். 'எல்லாம் நாம் தான்' என்கிற ஞானம் வந்து விட்டால் எதனிடமும் பயம் இராது. அந்த ஞானத்துக்குப் பின் சரீரம் விழுந்தால் இன்னொரு சரீரம் எடுக்க மாட்டோம். இந்த ஞானத்தை அடைகிற மார்க்கங்கள் மனிதனுக்குத்தான் இருக்கின்றன. மிருகங்களுக்கு இல்லை. மனிதன் ஞானத்தை, அபயநிலையை, ஜன்மநிவிருத்தியை அடையவே மகான்கள் வாக்கைப் பயன்படுத்தினார்கள். வேத, வேதாந்த, இதிஹாஸ, புராண, தர்ம சாஸ்திரங்கள் எல்லாம் வாக்கு இருப்பதால்தானே உண்டாயின?

பகவான் தந்திருக்கும் புத்தியால், வாக்கால் பிறருக்கோ தனக்கோ கெடுதல் உண்டாக்காமல் எவ்வளவோ நல்லது செய்யலாம். பாபமும், துக்கமும், பயமும் நீங்க வாக்கைப் பயன்படுத்தலாம். நாம் அப்படியே செய்ய வேண்டும்.

இதற்கெல்லாம் அடிப்படை பக்தி. வாக்கு தெய்வ சம்பந்தமாகப் பயனாக வேண்டும். இதனால்தான் அக்ஷராப்யாச காலத்தில், ஆரம்பிக்கும்போதே 'நமோ நாராயணாய' என்று விரலைப் பிடித்து எழுத வைக்கிறார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.





சுடுகின்ற நிஜங்கள்...

"**வா**ங்க மிஸ்டர் ஜலால். போன வாரம் உங்க சிறுகதை பிரபல பத்திரிகையில் வந்திருந்தது போலிருக்கே. நான் கூட கவனிக்கலை. ஜாஸ்மின்தான் என்னைப் படிக்கச் சொன்னா. ரொம்ப அருமையான கதை. நாட்டு நடப்பை அப்படியே எழுத்தில் கொண்டு வந்திட்டீங்க."

பள்ளி கரஸ்பான்டென்ட். இதயதுல்லாவின் புகழ் மழையில் நனைந்தான் ஜலால்.

"அப்பா இவர் சாதாரண ஆளில்லை. பெரிய பெரிய ஆங்கிலப் பத்திரிகைகளுக்குக் கட்டுரையெல்லாம் எழுத றார். ஒருநாள் தற்செயலா இவர் ரூமுக்குப் போனேன். நிறைய கதை, கட்டுரை, கவிதை எல்லாம் எழுதி வச்சி ருக்கார்." அருகில் நின்ற ஜாஸ்மின் தன் பங்குக்குப் புகழ்ந் தாள்.

"இதோ பாருங்க ஜலால், இவ்வளவு பெரிய ஆளா இருக்கீங்க. இன்னும் ஏன் எங்களிடமெல்லாம் கலகலப் பாப் பேச மாட்டேங்கறீங்க. வருகிற ஞாயிற்றுக் கிழமை நம்ம பங்களாவில் உங்களுக்கு டின்னர். காலையிலேயே ஜாஸ்மின் காரோடு வந்து விடுவாள். சாக்குப் போக்கு சொல்லாம, கண்டிப்பா வந்து சேரணும். புரியாதா?" இதய துல்லா உரிமையுடன் அதட்ட, ஜாஸ்மின் கலகலவெனச் சிரித்தாள்.

ஜலால் வெட்கச் சிரிப்புடன் தலையசைத்துவிட்டு வெளியேறினான். அவன் ஒரு சாதாரண ஏழைப் பள்ளி



ஆசிரியன். சமூக அவலங்களைக் கண்டித்துக் கதை, கட்டுரை, கவிதை எழுதுவான். அதனால் சமயங்களில் வேலையே போய் விடும். ஒவ்வோரிடமாக வேலை பார்த்துக் களைத்து, இப்போது இதய துல்லா மேல்நிலைப் பள்ளியில் வேலை பார்க்கிறான். அவன் வேலைக்குச் சேர்ந்தவுடனேயே இதயதுல்லா ஒரு கணக்குப் போட்டு விட்டார். பையன் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். கம்பீரமும், படிப்பும் சேர்ந்திருக்கின்றன. முகத்தில் போனஸாக அறிவுக் களை. பிறகென்ன? பல லட்சம் சொத்துக்கு ஒரே வாரிசான அருமை மகள் ஜாஸ்மினுக்கு மாப்பிள்ளை ரெடி. அதன் பலனாகவே மகளையும் பள்ளியில் ஒரு டீச்சராகச் சேர்த்தார். இருவரையும் நெருங்கிப் பழக விட்டார்.

ஆனால் ஜலால் பணத்தின் பளபளப்புக்கு மசியாதவனாக இருந்தான். வர்க்க பேதம் என்ற கோடு கண்ணுக்குத் தெரியாத வலுவான தளை என்பதில் அவனுக்குச் சந்தேகமே கிடையாது.

ஞாயிறு காலை வரும்போதே ஜாஸ்மின் காரோடு வந்து விட்டாள். யோசிக்க அவகாசமில்லாது காரில் ஏறினான். இவனுக்கு மட்டும்தான் அழைப்பு. இதயதுல்லாவும், ஜாஸ்மினும் உபசரிப்பில் திணற வைத்தனர். ''எவ்விங் எங்காவது பிக்னிக் போய் விட்டு வாங்களேன்!'' என்றார் இதய துல்லா.

அவரது உத்தரவு உடனே செயலாயிற்று.

''டாடி. நம்ம ஊர் பக்கத்திலே இருக்கிற வள்ளிமலைக்குப் போறோம். அங்கே அபூர்வமான கரிய மான்கள் இருக்கிறதாமே.''

''ஆமாம்மா. அருமையான பிக்னிக் ஸ்பாட். ஆனா இப்போ எவ்வளவோ மாறிப் போச்சாம். ஜலால் நீங்க இதுக்கு முன்பு அங்கே போயிருக்கீங்களா?''

''இல்லை சார், கேள்விப்பட்டிருக்கேன். எனக்கு இப்படி காடு, மலை மிருகங்களெல்லாம் ரொம்பப் பிடிக்கும். இப்போ மணி இரண்டு ஆகிறது. இப்பவே கிளம்பலாமே. ஜலாலுக்கு உற்சாகம் தொற்றிக் கொள்ள, ஜாஸ்மின் உடனே கிளம்பினாள்.

ஊரைத் தாண்டியதும் ஒரு மினி காடு. அதன் பிறகு நெருக்கமாய்ப் பல குடியிருப்புகள். சற்று தூரத்தில் ''மிகவும் அரிதான கரிய மான்களின் புகலிடம். மான்களை வேட்டையாடினால் கடுமையான தண்டனை'' என்றபடி பல்வேறு அளவுகளில் வனத் துறையின் பலகைகள். அங்கு மிங்கும் குத்துச் செடிகள். ஒருசில மரங்கள், நடுவே உயர்ந்து நின்றது வள்ளிமலை. பெரிய கற்பனையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்த ஜலாலின் உற்சாகம் சட்டென வடிந்து போனது.

''இதென்ன ஜாஸ்மின். இப்படி எக்கச்சக்கமாக வீடு கட்டி இருக்காங்க மலையைச் சுத்தி. எல்லா வீடுகளுக்கும் அடுப்பு எரிக்கக் காடுதான் விறகு போலிருக்கு.''

ஜாஸ்மின் அவனை கேலியாக பார்த்தபடி காரை ஓரத்தில் நிறுத்தினாள். புழுதியைக் கிளப்பியபடி வரிசையாகப் பல லாரிகள் அவர்களைக் கடந்து சென்றன. எல்லா லாரிகளிலும் செம்மண்ணும், கருங்கல் பாறைகளும் ஏற்றப்பட்டிருந்தன.

''மலைக்குப் பின்னாலிருந்து எல்லா லாரிகளும் வருதா என்ன?''

''மலையிலிருந்துதான் வருது. மலைதான் இப்படி கல்லும், மண்ணுமா போகுது.''

''அட, இப்படி ஓர் அநியாயமா? இவ்வளவு துணிச்சலா யார் செய்யறது?''

''அநியாயமா? நல்ல கதை. எல்லா லாரியிலும் பேரைப் பார்த்தீங்கல்ல! பொன். தமிழரசன் கம்பெனி லாரியாக்கும்!''

''அடப்பாவி. இந்தத் தொகுதி எம்.எல்.ஏ. தமிழரசனா? அவர் கைபடாத இடமே கிடையாதா?''

''என்ன ஜலால். என்னாச்சு உங்களுக்கு? ஏன் உங்க முகம் இப்படிச் சிவந்து விட்டது?''

அருள்மொழிவர்மன்


''பின்னே! கண்ணெதிரே எப்பேர்ப்பட்ட அநியாயம் நடக்குது? இதைப் பார்த்துச் சிரிக்கவா சொல்றே? அபூர்வமான மான் இருக்கிற காட்டையும், மலையையும் அந்தப் பாவி அழிக்கிறான். இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கலாமா?''

அபூர்வ மானைப் பார்க்கும் அதிசயத்துடன் அவனை விழிகள் விரியப் பார்த்தாள் ஜாஸ்மின். ''முதலில் டிபன் சாப்பிடுங்க'' என்றபடி மரத்தடியில் டிபன் வகைகளை எடுத்து வைத்தாள்.

''ஆமா. இந்த வீடுகளெல்லாம் யாருக்குச் சொந்தமாம்?''

''விட மாட்டீங்களே. எல்லாம் தமிழரசன் ரியல் எஸ்டேட் மூலம் வித்ததுதான். உங்களுக்குத் தமிழரசனைப் பார்க்கணும்னா சொல்லுங்க. அப்பாவுக்கு ரொம்ப நெருங்கின நண்பர். அடிக்கடி நம்ம பங்களாவுக்கு வருவார்.''

மன்னை ஆபா ரெடிமேட்ஸில் காணப்பட்ட போர்டு என்னை மிகவும் கவர்ந்தது.



– எஸ். அமுதா

''சரி. கேமிரா கொண்டு வந்திருந்தாக் கொடேன். கொஞ்சம் போட்டோ எடுப்போம்.''

''எல்லாம் நேத்தே எடுத்து வச்சிட்டேன்.''

காமிரா கைக்கு வர ஜாஸ்மினை சில கோணங்களில் எடுத்தான். அவள் தன்னை மறந்தாள். அதே சமயம், வரிசையாய்ச் சென்ற லாரிகளும் காமிராவில் சிறைப்பட்டன. அடுத்து வீடுகள். அரசாங்க விளம்பர எச்சரிக்கைப் பலகைகள். தீவிரமான அவனது முகம் ஜாஸ்மினை பயமுறுத்தியது.

''உங்களை இந்த மலைக்கு பிக்னிக் அழைத்து வந்ததே தப்பு. ஏதோ கொலையைப் பார்த்த மாதிரி அப்செட் ஆயிட்டீங்களே?''

'கொலைதான். பயங்கர கொலைதான்!' ஜலால் முணுமுணுத்தான்.

''**சா**ர், கரஸ்பாண்டண்ட் அவசரமா உங்களைப் பார்க்கணுமாம்'' என்று பியூன் அழைக்கவும் பாதி வகுப்பில் எழுந்து போனான் ஜலால்.

பள்ளியின் ஹெச். எம். அறையிலேயே இருந்தார் இதயதுல்லா. இவனைப் பார்த்ததும் ஆங்கிலப் பத்திரிகையொன்றை எடுத்து மேஜை மீது வீசினார். ''இதுக்கென்ன அர்த்தம்?''

'வள்ளிமலை எங்கள் மலை' என்ற தலைப்புடன் போட்டோக்கள் சகிதமாய் ஒரு ஸ்பெஷல் கட்டுரை. பொன். தமிழரசன் அட்டகாசமாய் மலையை உள்ளங்கையில் ஏந்தி நிற்கிற கார்ட்டூன்.

''என்ன சார், என் கதை வந்தால் கூட ரொம்பப் புகழ்வீங்க. டெல்லியிலிருந்து வெளிவருகிற உலகப் புகழ்பெற்ற ஆங்கிலப் பத்திரிகையில் என் கட்டுரை போட்டோவுடன் வந்திருக்கு. இதுக்கு போய் கோபப்படறீங்களே...''

''கற்பனைக் கதை என்றால் புகழலாம் ஜலால். நீங்க எழுதி இருக்கிற கட்டுரை பெரிய இடத்து விஷயம். என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் கூட உங்களைத் தடுத்திருப்பேன்.''

'என்ன நடந்து விட்டது என்று மனிதர் இப்படி பதறுகிறார்? புன்னகை தவழ குளிரக் குளிர பேசுகிறவர் நெருப்பைக் கக்குகிறார் என்றால்! ஆனால் ஒரு படைப்பாளனின் சுதந்திரத்தில் தலையிட இவருக்கு என்ன உரிமை?'

ஜலால் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தான். கைதேர்ந்த வியாபாரியான இதயதுல்லா அவன் மனதைப் படித்து விட்டார். சட்டென்று தன்னை மாற்றிக் கொண்டு குளிர்ந்தார். ''சரி. நீங்க கிளாஸை பாதியில் விட்டிருப்பீங்க. போய்க் கவனிங்க. அப்புறம் பார்க்கலாம்.''

பள்ளி முடிந்து தன் அறைக்குப் போனவன் திடுக்கிட்டுப் போனான். அறை தலைகீழாகப் புரட்டப்பட்டிருந்தது. அவன் எழுதி வைத்திருந்த பல்வேறு கட்டுரைகள் காணாமற் போயிருந்தன. சேகரித்துப் பத்திரப்படுத்தியிருந்த பத்திரிகைகள் கிழித்து எறியப்பட்டிருந்தன. அறையின் சீரழிவில் ஒரு பயமுறுத்தல். ஒரு கொடூரம்... அத்தனையும் தெரிய ஜலால் ஒரு போராட்டத்துக்குத் தயாரானான்.

மறுநாள் காலையில் இதயதுல்லாவே அவனைத் தேடி வந்து விட்டார். ''தம்பி. வீணா பெரிய இடத்து வம்பை விலைக்கு வாங்கிட்டீங்க. எம்.எல்.ஏ. உங்க மேலே ரொம்பக் கோபமா இருக்கார். எதுக்கும் நாம இரண்டு பேரும் ஒரு தடவை அவரை நேரில் போய்ப் பார்க்கிறது நல்லது.''

''நான் எந்தத் தப்பும் பண்ணவில்லை சார். நேற்று ராத்திரி என் அறை தாறுமாறாகக் கலைக்கப்பட்டுக் கிடந்தது. என்னை பயமுறுத்தப் பார்க்கிறாங்க. என் அறை கிடந்த கோலத்தை உடனே போட்டோ எடுத்து விட்டேன். இன்றைய

தபாலில் பத்திரிகைக்கு அனுப்பி விடு வேன். அப்புறம் பாருங்க. வள்ளிமலை விஷயமா மேலும் சில ஆதாரங்கள் கிடைக்கும் போலிருக்கு.''

''ஜலால். தமிழரசன் அரசியலில் ஊறி யவர். அவரை பகைத்துக் கொள்வது ஆபத்து. விஷயத்தை இதோடு விட்டு விடு வதுதான் நல்லது.''

ஜலால் எழுந்து விட இதயதுல்லா பேச்சை நிறுத்த வேண்டியதாயிற்று.

''உங்களை என் மருமகனாக்கி, பெரிய மனிதனாக உருவாக்கலாம் என்று நினைத் திருந்தேன்.''

''மன்னிக்கணும். உங்க மருமகனாக வர ணும்னா முதுகெலும்பு இருக்கக் கூடாதே அவனுக்கு.''

பொட்டில் அறைந்தாற்போலிருந்தது. 'ஒரு மாதம் நான் சம்பளம் தராவிட்டால் சோற்றுக்குத் தாளம் போட வேண்டிய பய லுக்கு எவ்வளவு திமிர்?' இதயதுல்லா விருட்டென்று வெளியேறினார்.

வழக்கம் போல் தன் வகுப்பிற்குள் நுழையப் போன ஜலால் திகைத்துப் போனான். வேறொரு ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். கோபத்துடன் தலைமை ஆசிரியரைப் பார்க்கப் போனான்.

''ஜலால். உங்களுக்குப் பதிலா வேறு ஆசிரியரை நியமனம் பண்ணியாச்சாம். இன்னும் ஒரு வாரத்தில் உங்க கணக்கை செட்டில் பண்ணி விடும்படி கரஸ்பான் டெண்ட் சொல்லிட்டார்.''

''அதெப்படி சார், இஷ்டம் என்று அவர் விருப்பம் போல செய்யலாம்? சட்டம்னு ஒண்ணு இருக்கில்லே?''

''அதெல்லாம் பணக்காரங்களுக்கு இல் லப்பா. அவங்க நினைச்சா நீங்க இங்கே வேலையே பார்க்கலைன்னு நிரூபிக்க முடியும். சரி. நீங்க போகலாம்.''

ஜலால் சோர்வுடன் திரும்பினான். ஆனால் தலைமை ஆசிரியரின் அறை வாசலில் மாணவர்கள் திரண்டிருந்தனர். மாணவர் தலைவன் ஜலாலை பற்றிக் கொண்டான்.

''சார். எல்லாம் கேள்விப்பட்டோம். அக்கிரமத்தைப் பத்தி எழுதினதுக்காக உங்களை வேலையை விட்டே டிஸ்மிஸ் பண்ணிட்டாங்க. இனிமே நீங்க மீண்டும் இங்கே வரும் வரை நாங்களும் வகுப்பிற்குப் போக மாட்டோம்.''

அவர்களை சமாதானப்படுத்த அவன் முயன்றான். ஆனால் பலனில்லை. ஜாஸ் மின் ஒரு ஜன்னலிலிருந்து தலையை நீட்டி, போராடும் படி ஜாடை காட்டி விட்டு மறைந்து விட்டாள். மாணவர்கள் வீதிக்கு வர விஷயமும் வந்தது. போக்குவரத்து நின்று போனது.

''**அ**ப்பா, நம்ம ஸ்கூலுக்கு நூறு சதம் ரிசல்ட் காட்டுகிற ஸ்கூல் என்று நல்ல பெயர் இருந்தது. இன்னிக்கு ஊர் முழுக்க நம்ம ஸ்கூலைப் பார்த்து கைகொட்டிச் சிரிக்குது. எல்லாச் சீரழிவுக்கும் காரணம் நீங்கதான்!'' ஜாஸ்மின் பொங்கினாள்.

''நல்லா யோசிக்கப் பாரும்மா. தமிழரசனைப் பகைத்துக் கொண்டு நாம ஸ்கூல் நடத்த முடியாது. பல்வேறு பெயர் களில் சொத்து வாங்க முடியாது. அவர் நினைத்தால் ஒரே நிமிடத்தில் நம்மைத் தெருவில் நிறுத்த முடியும். ஆனால் ஜலா லும் பத்திரிகைகளும் சில நாள் பேசு வார்கள். அப்புறம் ஓய்ந்து விடுவார்கள்.''

தமிழரசனின் ஆட்கள் சிலர் வரவே



அமைச்சர் : விபத்துக்குத் தார்மிகப் பொறுப்பு ஏற்றுக்கூட இந்தக் காலத்துல ராஜினாமா பண்ண முடியலை, போங்க.

நிருபர் : ஏன் அப்படிச் சொல்றீங்க?

அமைச்சர் : 'வேற ஏதாவது ஊழல் பண்ணி மாட்டிக்கிட்டிருப்பார்; அதான் இந்த ராஜி னாமா நாடகம்'னு சில பேர் பேசிக்கிறாங் களே!

- சீர்காழி வி. ரேவதி

ஜாஸ்மின் எழுந்து உள்ளே போனாள்.

ஹாலில் திட்டம் உருவானது. ''வள்ளி மலை விவகாரம் பத்தி முழு விசாரணை நடத்தக் கோரி கலெக்டர் ஆபீசுக்கு ஊர்வ லம் போறாங்களாம். ஜலால் தலைமை யாம். ஊர் ஜனங்கள் எல்லோரும் அதில் கலந்துக்கப் போறாங்களாம். ஊர்வலம் கலெக்டர் ஆபீசுக்கு போகக் கூடாதாம். அதுக்கு என்ன செய்யணுமோ அதைச் செய் யும்படி தலைவர் சொல்லியிருக்கார். அந்தப் பயலை கணக்கு முடிச்சுடணுமாம்.''

கேட்டுக் கொண்டிருந்த ஜாஸ்மின் வெளியே ஓட முயன்று தடுக்கப்பட்டாள். அறையொன்றில் பூட்டப்பட்டாள்.

ஜலால் தலைமையில் ஊர்வலம் புறப் பட்டது. பாதியில் இந்து முஸ்லீம் கலவர மாக மாற்றப்பட்டது. கல்வெறி, வன்முறை, கொலை, தீ, துப்பாக்கிச் சூடு எல்லாம் முடிந்த போது, ஜலால் உருத்தெரியாமல் சிதைந்து போயிருந்தான்.

அமைதிக் கமிட்டி அமைக்கப்பட்ட போது அதில் தமிழரசன், இதயதுல்லா உட்பட அனைவரும் உறுப்பினர்களாயிருந் தனர்!





ஏரி காத்த ராமர்!

விடாது மழை பெய்து கொண்டிருந்ததால், ஆட்கள் யாரும் வரவில்லை. நோமும் இரவு. மதுராந்தகம் ஏரி உடைப்பெடுத்துக் கொள்ளுமோ என்கிற கவலையில் ஆங்கிலேய கலெக்டர் தனியராகச் சென்று பார்த்த போது, வில், அம்புகளுடன் இருவர் காவல் காப்பதைக் கண்டார். பகலில் ஊராரிடம் விசாரித்த போது, அவர்கள் ''இவர்களா?'' என்று ராமர், லக்ஷ்மணர் படங்களைக் காட்டினர். ''இவர்களைப் போல்தான் இருந்தனர்!'' என்று கலெக்டர் சொல்ல, அன்றிலிருந்து 'ஏரிகாத்த ராமர்' என்ற திருநாமம் வழங்கலாயிற்று என்பது ஒரு கதை.

வைஷ்ணவ ஆசாரியர்களுள் முக்கியமானவர்களில் ஒருவரான ஆளவந்தாரின் சீடரான பெரிய நம்பிகள், இராமானுஜருக்கு பஞ்சசமஸ்காரமும் உபதேசமும் (அருகிலுள்ள படம்) செய்வித்த இடம் மதுராந்தகம்தான். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ராமானுஜரை ஏரியாக உருவகப்படுத்துவார்கள். அப்படிப்பட்ட ராமானுஜர் என்கிற ஏரியைக் காத்து, வைஷ்ணவத்துக்குத் தந்த ராமர் என்பதாலும் அப் பெயர் ஏற்பட்டதாகச் சொல்லுவர்.

இப்படிப்பட்ட ராமரது ஆலயத்துக்கு பிப்ரவரி 3-ம் தேதி மஹாசம்ப்ரோக்ஷணம் நடைபெறுகிறது.

வண்ணப்படங்கள் : அமரன்



கப்புகிட்டமா... வேண்டாம்!

பானுமதி ராஜகோபாலன்

"டேப்ரிகார்டர் எப்ப சரியாகப் போறது?" என் மனைவி டிபன் பாக்ஸை என் தோல் பையில் வைத்தபடி கேட்டாள்.

டேப்ரிகார்டர் ரிப்பேராகிவிட்டத்தட்ட ஆறு மாதமாகி விட்டது. அதென்னவோ அதை எடுத்துக் கொண்டு போய் ரிப்பேர் செய்து கொண்டு வர கை வரவேயில்லை. செட் பெரியது. சாதாரணமாகப் பையில் போட்டுக் கொண்டு போய் பஸ்ஸில் இடிபட முடியாது. அதிலும் ஆபீஸ் நேரத்தில் பஸ்ஸில் கூட்டம் பிதுங்கும்.

"நவராத்திரிக்கு தினம் லலிதா சஹஸ்ர நாமம் போட்டு கேட்கணும்னு நினைச்சேன். மார்கழியே வரப் போறது. விடிகாலம்பற திருப்பாவை, திருவெம்பாவை கேஸட்டாவது கேட்கற மாதிரி பண்ணுங்க" வித்யா திட்டவட்டமாகக் கூறினாள்.

"என்னை என்ன பண்ணச் சொல்றே? எடுத்திண்டு போக வசதியில்லையே."

"நானே ரிப்பேருக்குக் கொடுக்கறேன்னா நீங்க சம்மதிக்கிறதில்லை" முணுமுணுப்பாகக் கூறியபடி அடுக்களைக்குள் நுழைந்தாள்.

செருப்புக்குள் காலை நுழைத்தவன் சட்டென நின்றேன்.

"யாரு? அந்த அழுமூஞ்சி கப்புகிட்டேதானே! அறிவு இருக்கா உனக்கு? நம்மது எப்பேர்ப்பட்ட செட். அதைப் போய் அந்த அரைகுறைகிட்டேயா கொடுக்கறது? கம்மா இரு. எப்படியும் இந்த வாரத்துக்குள்ளே ரிப்பேர் ஆயிடும்."

உறுதியுடன் கூறி விட்டுக் கிளம்பினேன்.

ஆபீஸில் பலரிடம் விசாரித்தேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கம்பெனி பெயர் சொன்னார்கள்.

"நான் சொல்றதைக் கேள்!" என்றான் நாகசாமி. "உன் டேப்ரிகார்டரும் என்னுதும் ஒரே கம்பெனி மேக்தான். மௌண்ட் ரோடிலே ஒரு ரேடியோ கம்பெனி இருக்கு. அட்ரஸ் சொல்றேன். அருமையா பண்ணிக் கொடுப்பா. நேரா அங்கேயே போ. ஞாயிற்றுக் கிழமை கூட அரை நாள் கடை உண்டு. சார்ஜ் முன்னே பின்னே இருந்தாலும் யோசிக்காதே."

அன்று மாலையே ஆபீஸிலிருந்து கிளம்பி மௌண்ட் ரோடு போய்க் கடையில் விசாரித்தேன். தொட்டாலே ஐநூறு பண்ணுவார்கள் போலிருந்தது. சார்ஜ் கூட இருந்தாலும் செட்டை கெடுக்காமல் ஜாக்கிரதையாகச் செய்வார்கள் என்று தோன்றியது.

வித்யாவிடம் சொன்னேன், விழிகளை உயர்த்தினாள்.

"அடேயப்பா! சாதாரண ரிப்பேருக்கே ஐந்நூறு அறுநூறுன்னு ஆகுமா? பேசாமே கப்புகிட்டே கொடுக்கலாம். நூறு ரூபா கொடுத்தாலே போதும். சந்தோஷமா செஞ்சு கொடுப்பான்."

அழுக்கு பேண்டும் ஷர்ட்டும், அசட்டு மூஞ்சியும், அப்பாவி குணமுகமாக, ஐந்தடிக்கு ஐந்தடி வாசல் பக்க ஷெட்டில் உட்கார்ந்து ஏகப்பட்ட ஓட்டை உடைசல் ரேடியோக்களுக்கு நடுவில் கடமுடவென்று எதையோ திருகிக் கொண்டிருக்கும் கப்புவின் நினைவு வந்தது.

"திரும்பத் திரும்ப அதையே சொல்லாதே. அது ஒரு ரெண்டுங்கெட்டான் கேஸ். அது தொழில் கத்துக்க நம்ம ஃபாரின் டேப்ரிகார்டையா கொடுக்கறது? செலவானாலும் பரவாயில்லை. நான் பார்த்திருக்கிறது ரொம்பப் பெரிய கடை. ஏ.ஸி., ரத்ன கம்பளம், சோபான்னு ஏக அமர்க்களம்" என்று பெருமையடித்தேன்.

வித்யா கவனிக்காமலே அந்தண்டை போய் விட்டாள்.

சனிக்கிழமை காலை டேப்ரிகார்டரை பெரிய டவலில் சுற்றிக் கொண்டு ஆட்டோ பிடித்து மௌண்ட் ரோடு கடைக்குப் போனேன்.

டை கட்டி, உயர்ரக பேண்ட், ஷர்ட் அணிந்திருந்தவர் அழகான ஆங்கிலத்தில் என்னை வரவேற்றார்.

நான் டேப்ரிகார்டரை எடுத்து வெளியே வைத்தேன். அவர் உடம்பு நலுங்காமல், "கப்பு" என்று மெல்லக் குரல் கொடுத்தார்.

பக்கத்துக் கதவு திறந்து வெளியே வந்தவன்... கப்புவேதான். உள்ளே ஏதோ ரிப்பேர் செய்து கொண்டிருந்தவன் அப்படியே வியர்வை முகத்துடன் வந்து என்னைப் பார்த்து, தெரிந்த பாவனையில் லேசாகப் புன்னகை செய்தான். எனக்குச் சங்கடமாக இருந்தது.

''இதிலே என்ன ரிப்பேர் பாரு...'' அவர் பேசினார்.

கப்பு டேப்பின் நாலு பக்கமும் வாகாக தெம்பித் திறந்தான். கசமுச வென்ற ஒயர்களை ஒரு வினாடி பார்த்தான்.

''ஒண்ணும் பெரிசில்லே சார். சின்ன ப்ராப்ளம்தான். கொஞ்சம் இருங்க. இதோ வந்துடறேன்'' என்று உள்ளே போனவன் ஐந்து நிமிஷத்தில் வெளிவந்தான். டேப்பை போட்டு பாட வைத்தான். துல்லியமாகப் பாடியது.

''தேங்க்ஸ் சார்'' என்றேன் நான், பில் பார்த்துக் கொண்டிருந்தவரிடம்.

அழகான, பளபள தாளில், கம்ப்யூட்டர் பில்லை வெளியிட்டது.

அறுநூற்றுப் பத்து. எனக்கு மூச்சடைத்தது.



வாயைத் திறக்காமல் பணத்தை எண்ணிக் கொடுத்து விட்டு வந்தேன், டேப் ரிகார்டரை எடுத்துக் கொண்டு.

ஆட்டோவுக்காகக் காத்திருக்கும்போது கப்பு எதற்கோ கடையை விட்டு வெளியே வந்தான்.

''என்னப்பா! இங்கே வேலையிலே சேர்ந்துட்டியா?'' என்று கேட்டேன்.

''பர்மனண்டா இல்லை சார். வாரத்துக்கு ரெண்டு நாள் மட்டும் வருவேன். அங்கே சொந்தமாக வெச்சிருக்கிற கடையிலே வருமானம் போறலை'' என்றான் சிரித்தபடி. ''செட்லே கோளாறு ஒண்ணுமில்லை. நல்லாப் பாடும் சார்.''

அதற்குள் ஆட்டோ வரவே நான் விடைபெற்றேன்.

''அம்மாடி. அந்த நிமிஷ ரிப்பேருக்கு அறுநூத்து பத்து ரூபாயா? அநியாயம். பேசாமே கப்புகிட்டே கொடுத்திருக்கலாம். இத்தனை சார்ஜ் ஆகியிருக்காது. தவிர போக வர ஆட்டோ செலவு வேறே'' வித்யா புலம்பினாள்.

நான் பேசவில்லை.


''நாடு ரொம்ப கெட்டுப் போச்சுங்க!''

''எப்படிச் சொல்றீங்க?''

''மார்க்கெட் நிலவரம் மாதிரி மாறுதல் நிலவரம்னு பேப்பர்ல போட்டிருக்கே!''

- என். முகம்மது யூசுப்





''ஜாதகம், பொருத்தமே இல்லைன்னு தெரிஞ்சதும் இந்த ஜோசியர் தமாஷா சொல்லிடுவார்.''

''எப்படி....?''

''பையனோடது சதாம் உசேன் ஜாதகம் மாதிரியும், பெண்ணோடது ஜார்ஜ் புஷ் ஜாதகம் மாதிரியும் இருக்குன்னு சொல்லுவார்!''

- சீர்காழி வி. ரேவதி

பாண்டியன் பவனி

4. மேலைமங்கலத்துப் போர்

விஷ்வக்சேனன்

அரையன் மதுராந்தகன் என்ற பெயரைக் கேட்ட பின்பு வேறு எந்த விவரமும் தேவைப்படவில்லை சோழப் பேரமைச்சருக்கு. கவி நாராயண பட்டரிடம் அவரது பிரதான சீடன் அரையன் மதுராந்தகன் என்று ஒருவன் இருப்பதாகவும் இளவரசன் விக்கிரமனுக்கிணையான வாள் வீரனென்றும் அவனை வாட்போரில் வெல்ல சோழ மண்டலத்தில் எவருமில்லையென்றும், அரசியல் விவகாரங்களில் அவனுக்கிருக்கும் திறமை பற்றியும், எவரையும் அதிகம் பாராட்டாத கவி நாராயண பட்டரே அமைச்சரிடம் கூறியிருக்கிறார்.

அவன் திறமைக்குச் சான்றாகக் கண்ணெதிரில் சோழ இளவரசியை அத்தனை துரிதமாக மீட்டு வந்ததையும், தாமும் கோட்டைத் தலைவனும் சற்று முன்பு வரை குழம்பித் தவித்த பிரச்னையைத் தீர்த்து விட்டதையும் கண்ட அமைச்சர், இத்தகைய திறமைசாலிகளை உருவாக்கும் கவியிடம் இன்னும் அதிகமான மதிப்பும் அன்பும் கொண்டார்.

வாசலிலேயே நின்றிருந்த அரையன் மதுராந்தகனை உள்ளே அழைத்து வந்தவர், வேறு உடைகளையும், சிறிது கனி வகைகளையும் கொண்டு வர பணியாளர்களை ஏவினார். சற்று நேரத்தில் அரண்மனை உடையில் காட்சி தந்த அரையனது தோற்றம், ஓர் இளவரசனைப் போலிருப்பதையும், அவனது அலட்சிய நடையையும் கண்களில் தெறித்த கூர்மையையும் கண்டு வியந்தார் பல்லவராயர்.

ஆசனமொன்றும் அவனுக்களித்த அமைச்சர் முழு விவரத்தையும் கூற உத்தரவிட்டார்.

தான் மேலைமங்கலத்துக் கோட்டையைக் கண்டது முதல் கங்கை கொண்ட சோழபுரத்தை அடைந்தது வரையில் சுருக்கமாகக் கூறினான் அரையன். அவன் கூறுவதை ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்த கோட்டைத் தலைவன் தனஞ்செயனும், ஜெயந்தனும் மாளிகையில் நடந்த சண்டையைப் பற்றி அரையன் அதிகமாகக் கூறாவிட்டாலும், குறைந்தது அங்கு ஆறேழு வீரர்களையாவது இவன் தனித்தே சமாளித்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

அபாயத்தின் மிக அருகாமையிலிருந்து தான் இளவரசியை அவன் மீட்டிருக்கிறான் என்பதை அமைச்சர் புரிந்து கொண்டார்.

''தற்போது மேலைமங்கலத்தின் நிலை என்ன?'' அமைச்சர் வினவினார்.

''நள்ளிரவுக்குச் சற்று முன் மேலைமங்கலம் பாண்டியர் வசமாகியிருக்கிறது...'' ஜெயந்தன் பதிலளித்தான்.

''அமைச்சர் உத்தரவிட்டால் நாளை மாலைக்குள் மேலைமங்கலத்தை மீட்டு விடுகிறேன்.'' தனஞ்செயன் வலது கரம் வாளின் மீது அமர்ந்திருக்க எழுந்து நின்றான்.

''கோட்டைத் தலைவர் நாளை மாலை வரையில் காத்திருப்பது இயலாது.'' குறுக்கே நிதானமாக ஒலித்தது அரையனின் குரல்.

மூவரும் அவனை நோக்கித் திரும்பினர்.

''ஏன்?'' தனஞ்செயனது கேள்வி சூடாகவே ஒலித்தது.

''உச்சிப் பொழுதில் பொன்னமராவதிப் படை வந்து விடும், மாலைக்குள் கொற்கைப் படையும் வந்து சேர்ந்து விடும்.''

''உனக்கெப்படித் தெரியும்?''

''மாறவர்மனிடம் மார்த்தாண்டவர்மன் கூறியதைக் கேட்டேன்.''

அறையில் சற்று நேரம் மௌனம் நிலவியது. வெளியே மழை நன்றாக வலுத்திருந்தது. சாளரத்தின் வழியே சாரல் தெறித்தது. ஜெயந்தன் எழுந்து சென்று சாளரத்தை மூடி விட்டு வந்தான்.

அரையன் அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தான்: ''அமைச்சர் அனு



மதி கொடுத்தால் இந்த நிலைக்கு நான் தீர்வு கூறுகிறேன்'' என்றான்.

''எப்படி?'' தனஞ்செயனது குரலும் ஜெயந்தனது குரலும் சேர்ந்து ஒலித்தன.

''தஞ்சையிலும் பழையாறையிலும் சேர்த்து மூவாயிரம் வீரர்கள் இருக்கலாம்.''

''சரி.''

''இப்போதே இரண்டு இடங்களுக்கும் ஓலையனுப்பினால் வெள்ளி முளைக்கு முன் அனைத்து வீரர்களையும் தஞ்சையில் சித்தமாக இருக்கும்படி செய்து விடலாம். உடனே தஞ்சையிலிருந்து கிளம்பினால் பொன்னமராவதிப் படையை முழையூரின் அருகே மடக்கலாம்.''

''முழையூருக்கு முன்னதாகவே மடக்கினால் என்ன?''

''முழையூரின் ஏரி நல்ல உயரமான அகலமான கரையை உடையது. அதன் சரிவை அடுத்து பெரும் சமவெளி இருக்கிறது. சரிவை நன்றாகப் பயன்படுத்தினால் கிழக்கிலிருந்து வரும் பொன்னமராவதிப் படையை பக்கவாட்டில் வேகமாகத் தாக்கலாம்.''

அமைச்சரின் முகத்தில் திருப்தி நிலவியது. அதுவரை மௌனமாயிருந்தவர் கேட்டார், ''கொற்கையிலிருந்து வரும் படையை என்ன செய்ய உத்தேசம்?''

''இளவரசர் கருவூரிலிருக்கிறார்.''

''ஆம்.''

''கருவூரிலிருந்து நேர் தென்கிழக்கில் சென்றால் கொற்கைப் படையை வழியிலேயே எதிர்கொள்ளலாம். பொன்னமராவதிப் படை அதிக வலுவில்லாதது. மிஞ்சினால் இரண்டாயிரம் வீரர்கள் இருக்கலாம். அதை முழையூரில் முறியடித்தால் பிறகு நமது படை நேர் தெற்கில் சென்று இளவரசருடன் கலந்து கொள்ளலாம்.''



அரையன் மதுராந்தகன் வகுத்த திட்டம் அப்பழுக்கில்லாமல் வெற்றியைத் தரும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. சேதம் அதிகமாக விளையுமென்றாலும், ஆங்காங்கே பிரிந்து கிடக்கும் சொற்பமான காவற்படையை வைத்துக் கொண்டு இதை விடச் சிறந்த திட்டம் வகுக்க இயலாது என்பதையும் புரிந்து கொண்ட அமைச்சர், உடனடியாக வீரர்களிடம் ஓலைகளை எழுதிக் கொடுத்தார். ''நமது வேகமும் இந்த மழையினால் பாண்டியருக்கு ஏற்படும் தாமதத்தை நாம் பயன்படுத்திக் கொள்வதிலும்தான் நமது வெற்றியே இருக்கிறது'' என்று வீரர்களை அமைச்சர் எச்சரித்திருந்ததால், ஓலையைத் தாங்கிய வீரர்கள் மழையை லட்சியம் செய்யாமல் புரவி ஏறிப் பறந்தார்கள்.

''மேலை மங்கலத்தை எப்போது மீட்பது?'' தனஞ்செயனிடமிருந்து கேள்வி கிளம்பியது.

''இங்கிருக்கும் வீரர்களை இரண்டாகப் பிரித்து விடுங்கள்.''

''எதற்கு?''

''ஒரு பிரிவுடன் வெள்ளாற்றங்கரைக்கு வாருங்கள்.''

''மீதிப் பாதி?''

''நான் நடத்துகிறேன். சற்று கிழக்கே சென்று பின் தெற்கில் திரும்பி வருகிறேன்.''

''அதனால் என்ன லாபம்?''

''நீங்கள் வெள்ளாற்றங்கரையை அடைந்ததும் விலகி வலதுபுறத் தோப்பில் புகுந்து விடுங்கள்.''

''ஏன்?''

''உங்கள் சிறிய படையைக் கண்டு வெளியே வரும் பாண்டியரை நீங்கள் பக்கவாட்டில் தாக்கும் போது நான் நேர் எதிர்ப்புறத்திலிருப்பேன்.''

திட்டம் தெளிவாகப் புரிந்ததால் கோட்டைத் தலைவன் முகத்தில் பிரமிப்பு படர்ந்தது. ''பட்டரின் சீடன் வேகப்பட்டவனல்ல'' என்று எண்ணிக் கொண்டான் தனஞ்செயன்.

கருவூரிலிருந்த இளவலுக்கு ஓலையுடன் கிளம்பி விரைந்தான் ஜெயந்தன்.

அரையன் திட்டப்படியே அன்று இரவே அனைத்து ஏற்பாடுகளும் நடந்தன.

மேலைமங்கலக் கோட்டையினுள் மார்த்தாண்டவர்மன் பெரும் சிந்தனையிலிருந்தான். மாறவர்மனது தோளில் பலத்த கட்டு போடப்பட்டு வலியில் முனகிக் கொண்டிருந்தான். அருகில் நின்ற சோம சுந்தர பாண்டியன் முகத்திலும் உபதலைவன் முகத்திலும் கவலை படர்ந்திருந்தது.

மார்த்தாண்டனது சிந்தனைக்குக் காரணமிருந்தது. மேகங்கள் கலைந்து கிழக்கில் வெளிச்சம் பரவும் நேரத்தில் கோட்டையை முழுதுமாக வசப்படுத்தி விட்ட மார்த்தாண்டன், கொற்கையிலிருந்தும், பொன்னமராவதியிலிருந்தும் வந்து சேர்ந்திருக்க வேண்டிய ஒற்றர்கள் இன்னும் வராதது குறித்துக் கவலை கொண்டிருந்தான்.

மார்த்தாண்டவர்மனின் உறவினனும் மற்றொரு பாண்டிய சிற்றரசனுமான சோம சுந்தர பாண்டியன் தன் கனத்த சரீரத்தை அசைத்தபடி மார்த்தாண்டன் முன்பாக வந்து நின்றான்.

மார்த்தாண்டவர்மனின் முகத்தில் நிலவிய சிந்தனையையும் கவலையையும் கண்டவன், ''மார்த்தாண்டருக்கு இன்னும் நமது வெற்றியில் நம்பிக்கை பிறக்கவில்லை போலிருக்கிறது'' என்றான்.

''அப்படியொன்றுமில்லை சோம சுந்தரா. பெற்ற வெற்றியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டாமா? மேலைமங்கலத்தை நாம் பிடித்த பின்னர், விக்கிரமன் கையைக் கட்டிக் கொண்டு இருப்பான் என்று நினைக்கிறாயா?''

பதிலுக்குப் பெரிதாக நகைத்த சோம சுந்தரன், ''என்ன செய்ய இயலும் அவனால்? அவனிடமிருப்பது சொற்ப காவற்படைகள்தாம். அவையும் முக்கியமான கோட்டைகளில் பிரிந்து சிதறிக் கிடக்கின்றன. அவற்றை ஒன்று திரட்டவே ஒரு வார காலமாகும். கொற்கைப் படையும், பொன்னமராவதித் தலைவனும் வந்து சேர்ந்து விட்டால் நம்மை யாரும் அசைக்க முடியாது. அடுத்து, கங்கைகொண்டசோழபுரத்தைத் தாக்கத் திட்டமேதும் இருந்தால் கூறுங்கள்'' என்றான்.

சோமசுந்தரன் கூறிய விளக்கம் என்னவோ ஒப்புக் கொள்ளும்படியாகத்தானிருந்தது. இருந்தும் மார்த்தாண்டனின் மனம் சாந்தியடைவதாக இல்லை.

''விக்கிரமனையும் அந்தக் கிழ அமைச்சனையும் அவ்வளவு குறைத்து எண்ணி விடாதே'' என்றான் மார்த்தாண்டவர்மன். அந்த எச்சரிக்கை மற்றவர்களுக்கு அப்போது அர்த்தமற்றதாகத் தோன்றியது.

வலியால் முனகிய மாறவர்மனின் குரல் அவர்களை ஈர்க்கவே சோமசுந்தரபாண்டியன் கேட்டான் : ''யாரந்தச் சோழவீரன்? நமது வீரர்கள் அவனை இதற்கு முன் கண்டதேயில்லை என்று கூறுகிறார்கள்?''

மார்த்தாண்டன் முகத்தில் சிந்தனை படர்ந்தது. ''ஆறு பாண்டிய வீரர்களையும் மாறவர்மனையும் ஏககாலத்தில் சமாளித்து, இளவரசியையும் தூக்கிச் சென்றவன் சாமானிய வீரனாக இருக்க முடியாது'' என்றான்.

''அத்தனை உயரமானவனும் நீண்ட வாளை உடையவனும் விக்கிரமன் ஒருவன்தான்.''

''அவன் விக்கிரமனல்ல என்று மாறவர்மன்தான் திட்டவட்டமாக மறுக்கிறானே!''

அந்த வீரனைப் பற்றிய அவர்கள் குழப்பம் பலமுறை யோசித்தும் தீரவில்லை.

அச்சமயம் அதிர்ச்சி தரும் செய்தி ஒன்றுடன் ஓடி வந்தான் ஒரு பாண்டிய வீரன். வீரனின் முகம் வியர்த்திருந்தது. வெளுத்துமிருந்தது. ''பிரபு வெள்ளாற்றின் அக்கரையில் சோழர் படை அணிவகுத்து வந்து கொண்டிருக்கிறது!''

மார்த்தாண்டன் துள்ளி எழுந்தான். ''இத்தனை துரிதமாக வருவதானால் அது கங்கைகொண்ட சோழபுரத்தின் காவற் படையாகத்தானிருக்க வேண்டும்'' என்றான்.

பாண்டிய வீரன் மேலும் கூறினான். ''பிரபு தலைமை வகித்து வருபவன் புதியவனாகத் தெரிகிறான். அசாத்திய உயரமாயிருக்கிறான்!''

அறையிலிருந்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

சோமசுந்தரனது அடுத்த கேள்வி பாண்டிய வீரனை வியக்க வைத்தது. ''அவன் வாள் மிக நீளமாயிருக்கிறதா?''

வியப்பில் வாயைப் பிளந்த பாண்டிய வீரன், ''ஆம் பிரபு. அத்தனை நீண்ட வாளை நான் இதுவரை கண்டதேயில்லை!''

சோமசுந்தரன் முகத்தில் ஈயாடவில்லை. மாறவர்மனைக் காயப்படுத்தி விட்டு இளவரசியை மீட்டுச் சென்றவன், இத்தனை துரிதமாகப் படையுடன் திரும்பி வருவான் என்பதை அவன் அடியோடு எதிர்பார்க்கவில்லை.

மார்த்தாண்டனிடமிருந்து உத்தரவுகள் பிறந்தன. ''சோமசுந்தரா! நமது வீரர்களை வடக்கு வாசலில் திரட்டு. உபதலைவரே, மற்ற வாசல்களையெல்லாம் மூடி விடுங்கள். கங்கைகொண்ட சோழபுரத்தின் படையொன்றும் அத்தனை பெரிதான படையல்ல. அச்சம் வேண்டாம். நாம் வெல்வது உறுதி!''

ஓர் இக்கட்டான நிலையிலும் தன்னம்பிக்கையுடன் பேசிய அவன் உத்தரவுகள் உடனே நிறைவேற்றப்பட்டன.

மேலைமங்கலத்துக் கோட்டை மீண்டும் அமளிதுமளிப்பட்டது. வெள்ளாற்றங் கரைக்கு நேர் எதிரிலிருந்த வடக்கு வாசல் கதவு திறக்கப்பட்டு, பாண்டியப் படைகள் அங்கு அணிவகுத்து முன்னேறின.

முகப்பில் தனது புரவியிலமர்ந்து படையை நடத்திய மார்த்தாண்டவர்மன் ஆற்றங்கரை மணல்வெளியை அடைந்ததும் திகைத்து நின்றான். இரவு முழுதும் பெய்த மழையின் விளைவாக ஓடிய வெள்ளத்தைத் தவிர அங்கு ஈ காக்கை கூடக் காணப்படவில்லை!

ஓடி வந்து செய்தியைக் கூறிய வீரனை அழைத்து விசாரித்த மார்த்தாண்டவர்மன் குழம்பினான். அவன் கொண்ட குழப்பம் அவனது படை வீரர்களையும் பற்றியது. அணிவகுப்பு கலைந்து, அனைவரும் மீண்டும் கோட்டையை நோக்கித் திரும்பிய தரு

ணத்தில், இழக்கிலிருந்த மணல்மேட்டின் மறுபுறத்திலிருந்து பெரும் கூச்சல் எழும்பியது. திரும்பிய பாண்டிய வீரர்கள் மணல் மேட்டின் மறுபுறத்திலிருந்து பெரும் புரவியொன்றின் மீது உயரமான வாலிபன் ஒருவன் வாளை உயர்த்திச் சுழற்றியபடி சரிவில் இறங்கிக் காற்றை விடக் கடுகி வருவதையும், அவன் பின்னால் அர்த்த சந்திர வடிவத்தில் வியூகம் வகுத்திருந்த சோழ வீரர்கள் பாய்ந்து வருவதையும் கண்டு திகைத்தனர்.

வடக்கே வருவது போல் போக்குக் காட்டி விட்டுப் பிறகு திசைமாறி வந்து சோழ வீரர்கள் தாக்குவதைப் புரிந்து கொண்ட மார்த்தாண்டன், அணிவகுப்பில் ஒழுங்கு கலைந்து நின்ற பாண்டியர் படையை மீண்டும் அணிவகுக்க உத்தரவிட்டான். ஆனால் அவன் உத்தரவு முழுமையாக நிறைவேற்றப்படுமுன் பாண்டியரின் மீது பாய்ந்து விட்ட சோழர் படை, அணிவகுப்பைப் பல இடங்களில் உடைத்தது.

அந்த வாலிபன் அமர்ந்திருந்த புரவி பம்பரமாகச் சுழன்றதையும் அவன் வாள் பாய்ந்த இடங்களிலெல்லாம் பாண்டிய வீரர் பட்பட்டென்று சாய்ந்ததையும் கவனித்த மார்த்தாண்டவர்மன், அவன் வாள் சுழன்ற வேகத்தைக் கண்டு வாயைப் பிளந்தான். சண்டை துவங்கிய சிறிது நேரத்தில் தனது வீரர்கள் பலர் மாண்டு விட்டதையும், பாண்டியப் படை ஓர் அணியாகத் திரளத் திணறுவதையும் கண்ட மார்த்தாண்டன், தன் புரவியை அந்த வாலிபனை நோக்கிச் செலுத்த முயன்றான். அடுத்தகணம் மேற்கே நீண்டிருந்த தோப்பிலிருந்து மற்றொரு படைப் பிரிவு தனஞ்செயனது தலைமையில் அதிவேகமாக ஓடி வர, அது கண்டு திகைத்தான் மார்த்தாண்டவர்மன். பாண்டியப் படையை விலாப்புறத்தில் தாக்கி மோதிய அந்தப் பிரிவால் தனது படை மூன்றாகப் பிரிந்து விட்டதையும் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் சோழரின் காவற் படை சிறு தந்திரத்தால் பாண்டியர் படையை நிர்மூலமாக்கி விடப் போவதையும் உணர்ந்தான் மார்த்தாண்டவர்மன்.

போதாக்குறைக்கு தோப்பிலிருந்து வந்த புரவிப்படை சோமகந்தரனை வளைத்துக் கொண்டது. தனஞ்செயனுக்கும் சோம கந்தரனுக்கும் போர் மும்முரப்பட்டது. இதைக் கவனித்த மார்த்தாண்டன், சோம கந்தரனுக்கு உதவ அவனிருந்த திசையில் தன் புரவியைச் செலுத்தி முன்னேறினான். ஆனால் அவனை வளைத்துக் கொண்ட அர்த்த சந்திர வியூகத்தின் வால் பகுதி அவனுடைய அந்த முயற்சியையும் பலனற்றதாக்கியது.

நெடிதுயர்ந்த வாலிபனுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்த தன் உபதலைவன் சரிந்து விழுந்ததையும், துண்டு துண்டாகச் சிதறி விட்ட பாண்டியப் படை கை சளைப்பதையும் போரிட்டபடியே கண்டுணர்ந்த மார்த்தாண்டவர்மன், சோழர்கள் செயல்படும் வேகத்தையும் அவர்களுடைய யுத்த தந்திரத்தையும் வெறுத்தாலும் வியந்து போற்றவும் தவறவில்லை!

தன் படையைப் பின்வாங்குமாறு சைகை செய்த மார்த்தாண்டன் கதிரவன் உச்சியை நெருங்க முற்படுவதைக் கண்டு, 'ஏன் பொன்னமராவதித் தலைவன் இன்னும் வந்து சேரவில்லை?' என்று புரியாமல் குழம்பினான். அதிக நேரம் சிந்திக்க அவனுக்கு அவகாசமளிக்காத தனஞ்செயன், எஞ்சிய பாண்டிய வீரரைச் சரமாரியாக வெட்டியபடியே மறுபுறத்திலிருந்த அர்த்த சந்திர வியூகத்துடன் தன் படையை இணைத்தான்.


இனியும் போராடுவதில் பயனில்லையென்பதை உணர்ந்த பாண்டிய வீரர்கள், ஆற்றில் இறங்கி மறு கரையை நோக்கி ஓட ஆரம்பித்தனர்.

கதிரவன் உச்சியை அடைந்த போது மேலைமங்கலத்துப் போர் முடிவடைந்து விட்டது.

ஆற்று மணலில் ஆங்காங்கே திட்டுத் திட்டாய் ரத்தம் உறைந்து படிந்திருந்தது. காயங்களுடன் விழுந்து கிடந்த புரவிகள் துடித்து மெல்ல அடங்கிக் கொண்டிருந்தன. அவற்றின் அருகே பல வீரர்களின் உடல்களும் உக்கிரமான போருக்குச் சாட்சியம் கூறியபடி கிடந்தன.

ரத்தம் தோய்ந்த கத்தியுடனும், உடலெங்கும் காயங்களுடனும் தனஞ்செயன் கோட்டையில் நுழைந்த போது, மேலை மங்கலத்துக் கோட்டை எதிர்க்க ஆளற்று மீண்டும் சோழர் வசப்பட்டது.

(தொடரும்)



அரசு அதிகாரி : இந்தப் பிரச்னையை எப்படித் தீர்க்கலாம்னு ஆலோசனை சொல்லட்டுமாங்க?

அமைச்சர் : எப்படி திசை திருப்பலாம்னு ஐடியா கொடுங்க, போதும்!

- என். வி. ரமணி


கல்கி
21-2-93
இதழில்
கிருஷ்ணா டாவின்ஸி
எழுதும்
மாயக் குதிரை
கிலியூட்டும்
மர்மத் தொடர் ஆரம்பம்.



உறவின்

நேரத்தைப் பார்த்தாள் சௌம்யா. நாலு மணி. ஐந்தரைக்குத்தான் அலுவலகம் முடிந்து கணவன் வருவான்.

'இன்று மாலை சேமியா உப்புமா டிபன் கேட்டிருந்தாரே.... கொத்தமல்லி, பச்சை மிளகாய் போட்டால் சுவை நன்றாயிருக்குமே...!'

தெருவின் கோடியில்தான் காய்கறிக் கடை இருக்கிறது. கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். தெருக் கோடிக்கு இதுவே போதும் என்ற நினைப்பில் வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள். கையில் பச்சைக்கலர் கூடை. அதனுள் இரண்டு ரூபாய் நோட்டு.

பத்தடி தூரம் நடந்திருப்பாள். சற்று தள்ளி சாலையின் வலதுபுறம் கூட்டமாய் இருக்கவே நெருங்கிப் போய்ப் பார்த்தாள்.

யாரோ ஓர் ஆள் கீழே விழுந்து கிடந்தான். அவனைச் சுற்றி ஐந்தாறு பேர்.

''என்னப்பா இது. நடந்துக்கிட்டே இருந்தான், பட்டுனு சாய்ஞ்சுட்டான்.''

''தொடாதீங்க. வம்பு. ஆள் செத்துப் போயிருந்தா போலீஸ் கேசாகி நாமதான் கோர்ட்டுக்கு அலைஞ்சு லோல் படணும்.''

''ஆள் லேசா முனகற மாதிரி தெரியுதே. பாவம் யாரோ இவன்! யாராவது சோடா வாங்கிட்டு வாங்க'' என்று காசை நீட்டியபடி அவனருகில் அமர்ந்தார்.

கீழே கிடந்தவனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு, நெஞ்சை நீவி விட்டார்.

கீழே கிடந்தவன் முகம் இவள் பக்கம் திரும்பியதும் சௌம்யாவின் நெஞ்சுக்குள் அதிர்வலை.

''ஐயோ, சந்துருவா!'' - பதறியபடி அருகில் சென்றாள்.

''என்னம்மா, தெரிஞ்சவரா?''

''ஆமாம். தயவு செய்து என் வீட்டுக்கு இவரைத் தூக்கிட்டு வர முடியுமா? வீடு பக்கத்துலதான் இருக்கு. ப்ளீஸ்....'' என்று கெஞ்சியவளை யோசனையுடன் பார்த்துத் தலையசைத்தனர்.

இரண்டு பேர் சேர்ந்து பிடித்துத் தூக்கி வர பதைப்புடன் கதவைத் திறந்து விட்டாள் சௌம்யா.

ஹால் பெஞ்சில் இரண்டு தலையணையைச் சாய்வாக வைத்து சந்துருவைப் படுக்க வைத்தனர்.

''பக்கத்து வீட்டுல டாக்டர் வசிக்கிறார். இருந்தால் வரச் சொல்லுங்களேன்'' என்று சௌம்யா சொன்னதும் ஓர் இளைஞன் வாசலை நோக்கி விரைந்தான்.

நல்லவேளை! டாக்டர் இருந்தார். வந்து பரிசோதித்தார்.

''லோ பிரஷர். அதான் மயக்கம். ஓய்வு எடுத்தால் சரியாயிடும். தூங்கறதுக்கு ஊசி போட்டிருக்கேன் கவலைப்பட வேண்டாம்'' என்று டாக்டர் சொன்னதும் சௌம்யாவினுள் நிம்மதி படர்ந்தது.

டாக்டர் வெளியேற, கூடவே உதவிக்கு வந்தவர்களும் பின் தொடர்ந்தனர்.

இப்போது வீட்டில் அவளும், சந்துருவும்தான்.



சட்டென சேமியா உப்புமா ஞாபகமும் கூடவே கணவர் வரும் நேரமாகி விட்டதையும் உணர்ந்தாள்.

அவளுக்குள் பயம் பிடித்துக் கொண்டது.

''சௌம்யா, இந்த கோயில் எவ்வளவு அமைதியா, ஏகாந்தமாய் இருக்கு, இல்லை?''

திருமணமாகி ஒரு மாதம் கூட ஆகவில்லை. ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளத் துடிக்கும் ஈர்ப்பு. அதற்குச் சாதக மான சூழல்.

சௌம்யாவுக்கும் ரம்மியமாய் இருந்தது அந்த இடம்.

''சௌம்யா, இதுவரை உன்னிடம் பேசாத ஒரு விஷயம் சொல்லவா?''

''ம்!'' என்றாள்.

''என்னவோ தெரியலே. காதலிக்கற அனுபவமே எனக்கு இதுவரை கிடைக்காம போச்சு. ஆபீஸ்ல ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி புதுசா ஒரு பொண்ணு சேர்ந்தாள். அவளைப் பிடிக்கப் போச்சு, முதல் பார்வையிலேயே. அவளோட பழக

இழைகள்



நினைச்ச உடனேயே கையில் திருமணப் பத்திரிகையுடன் வந்தாள். நிச்சயதார்த்தம் ஆகி மூணு மாசம் ஆச்சாம். இந்த வேலைக் காகக் காத்திருந்தாளாம். எப்படி என் அதிர்ஷ்டம்!'' என்று சொல்லிச் சிரித்தான்.

பிறகு, ''அதனால இப்ப என்ன குறைஞ்சு போயிட்டேன். என் அதிர்ஷ்ட மாய் நீ கிடைச்சிருக்கியே. உன்னையே காதலிக்கட்டாப் போச்சு!'' என்று கன்னத் தைத் தட்டினான்.

''அது சரி, உனக்கு ஏதாவது காதல் அனு பவம் உண்டா?''

இளகிய சூழலோ இல்லை பொய் சொல்லத் தெரியாத மனதோ சட்டெனத் தலையாட்டி விட்டாள்.

உடனே கணவனின் முகம் இறுகிய தும்தான் தவறு புரிந்தது அவளுக்கு.

ஆனாலும், முழுக்கதையையும் சொல்லி முடித்தாள்.

இரண்டு நாட்கள் அவன் பேசாமல் மௌனித்ததும் பயந்து போய்விட்டாள் சௌம்யா.

என். பாஸ்கரன்

ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தவன் அருகில் போய் நின்றாள்.

சட்டென அவன் மடியில் புதைந்து குலுங்கினாள்.

''ஹேய், என்ன?'' என்று பதறிப் போனான்.

''சத்தியமாய்ச் சொல்றேங்க. என்னோட காதலைக் கனவாய் மறந்துட்டேன் எப்பவோ. இப்ப என் நெஞ்சு முழுக்க நிறைஞ்சிருக்கற ஒரே ஆண் நீங்கதான்'' என உருகியவளை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''ஸாரி சௌம்யா. நான் நம்பறேன் உன்னை. ஏதோ ஒரு பொறாமை உணர்ச்சி... என் மனைவி எனக்கு மட்டும் தான் என்ற பொசசிவ்னஸ். ஓகே, புரிஞ்சுக்க. ப்ளீஸ், அழாதே...'' என்று தேற்றினான்.

கல்யாணமாகி ஆறு வருடம் ஓடி விட்டது. அதற்குப் பிறகு அவர்களுக்குள் இதைப் பற்றிய பேச்சே எழவில்லை.

இப்போது திடீரென முளைத்திருக்கிறான் சந்துரு. அவளின் பழைய காதலன்.

நடந்ததைச் சொன்னால் கணவர் நம்பு வாரா...? சந்தேகம் முளைத்தால் என்ன செய்வது என்று பரிதவித்தாள்.

மனைவி என்பவள் தனக்கு மட்டுமே உரியவள் என்ற குணமுடையவராயிற்றே இவர்! இப்போது மனைவியின் பழைய காதலன் தன் வீட்டிலேயே படுத்திருப்பதைக் கண்டால் எப்படியெல்லாம் விபரீதமாய்க் கற்பனை செய்வாரோ என்று நடுங்கினாள்.

மயக்கத்தில் ஆழ்ந்து உறங்கும் சந்துருவையும் வெளியேற்ற முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாய்த் தவித்தாள்.

வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது.

அவன்தான்! வந்து விட்டான். ஹாலுக்குள்ளும் நுழைந்து விட்டான்.

''சௌம்யா, இன்னிக்கு ஆபீஸ்ல ஒரே டென்ஷன். எங்கேயாவது வெளியே போனால்தான் இப்ப....'' என்றவனின் பேச்சு தடைப்பட்டது.

பெஞ்சில் படுத்திருக்கும் புதியவனைக் கேள்விக் குறியுடன் பார்த்தான். பார்வை இவள் பக்கம் திரும்பியது.

சௌம்யா ஆசிரியரிடம் பாடத்தை ஒப்பிக்கும் மாணவியாய் நடந்ததை உணர்ச்சியற்ற குரலில் மடமடவெனக் கூறினாள்.

''நல்ல காரியம்தான் செஞ்சிருக்க. ஆனால் முன்னப் பின்னே தெரியாதவனுக்கு உதவப்போய் பின்னாடி ஏதாவது பிரச்னையாயிடப் போகுது'' என்றான் கவலையுடன்.

''இல்லைங்க. இவர்தான்....''

''சொல்லு இவரைத் தெரியுமா?''

''இவர்தான் சந்துரு'' என்றாள் மெல்லிய குரலில்.

பெயரைச் சொல்வதற்குள் நாக்கு வறண்டு போய் விட்டது.

அவளை ஒரு நொடி பார்த்தவன் மடமடவென பெட்ரூமினுள் நுழைந்து விட்டான்.

நினைத்ததுபோலவே ஆகிவிட்டதே! உதவப் போய் தன் வாழ்க்கையே பாழாகி விடும் போல் தெரிகிறதே! மனசுக்குள் பூகம்பம்.

கணவனுக்குக் காப்பி கலக்கும் வழக்கத்தில் அடுப்படிக்குள் நுழைந்தாள்.

கை அனிச்சையாய் வேலை செய்ய, உள்ளமோ பயமுறுத்தியது பலவித நினைவலைகளால்.

விஷயம் வெளியே தெரிந்தால் எல்லோரும் இவளைத்தானே தூற்றுவார்கள்.

அதுவும் இந்த மாதிரி விஷயங்களில் பெண்தான் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும் என்று சமூகம் எதிர் பார்க்கிறது.

நல்லதொரு வாழ்க்கை, யார் கண்பட்டதோ இப்படி ஒடிந்து விடும் போலிருக்கிறதே!

நெஞ்சு நிறைய கவலை ரேகை வளைய வர, எதிர்காலம் இருளாய்த் திகைக்க வைக்க, வெலவெலத்துப் போய் நின்றாள்.

பின்புறமாய்க் கை ஒன்று முதுகைத் தொட திரும்பினாள் திடுக்கிட்டபடி.

அவன்தான்! மளுக்கென கண்ணில் நீர் திரண்டது.

''ஏன் அழுற?''

''யதேச்சையாய் நடந்ததுங்க இது. சேமியா உப்புமாக்குப் பச்சை மிளகாய் வாங்க....''

சட்டென அவள் பேச்சை வெட்டினான்.

''எதுக்கு அதெல்லாம் இப்ப?''

''என் மேலே தப்பு இல்லீங்க.''

''யாரு சொன்னா இருக்குன்னு?''

''நீங்க...''

''ப்ச், இதோ பாரு, நானும், நீயும் ஆறு வருஷமா தாம்பத்யம் நடத்தறோம். உன்னை நான் சந்தேகப்பட்டால், நாம நடத்திட்டு வரும் இத்தனை நாள் குடும்ப வாழ்க்கைக்கே அர்த்தமில்லாமப் போயிடும். புரிஞ்சுதா? முகத்துல ஏன் இப்படி எண்ணெய் வடியுது. காப்பியை அப்படியே வைச்சுட்டு முகத்தைக் கழுவிக்கிட்டு பளிச்சுனு வா. சந்துரு கண் விழிச்சப்புறம் அவரைச் சேர்க்க வேண்டிய இடத்துல சேர்ப்போம்'' என்றவனின் மார்பில் அப்படியே சாய்ந்து குலுங்கினாள், மனசு லேசான சந்தோஷத்தில்.

ஆயுதம் கடத்திய நரசிம்மராவ்!

'பிரதமர் பி.வி. நரசிம்மராவின் அரசியல் வரலாறு' பற்றி வி.ஆர். ஆதிராஜு* என்ற ஆந்திரப் பத்திரிகையாளர் எழுதிய நூல் சமீபத்தில் வெளியிடப்பட்டது. பன்மொழிப் புலவரான பிரதமர், ஆயுதங்கள் கடத்திய தீவிரவாதி என்பது தெரியவருகிறது. 1948-ல் ஹைதராபாத் சிற்றரசர் நிஜாமின் வன்மை அதிகரித்து, காங்கிரஸ்

சார்மினார் சாலல் :

போராளிகளை ஒடுக்க முற்பட்ட போது, அட்வகேட் நரசிம்மராவ் போராட்ட வேள்வியில் குதித்தார். வார்தா அருகே சந்தாவில் இலங்கானா காங்கிரஸ் புரட்சிக்காரர்கள் முகாம் அமைத்த போது, 'மறைமுகமாகத்' தொண்டு செய்த இளைஞர்களில் ராவும் ஒருவர். துப்பாக்கிகளும் குண்டுகளும் கடத்தியதுடன் உபயோகிக்கவும் கற்றுக் கொண்டார். பூனா, பம்பாய் முதலிய நகரங்களுக்கு ஆயுதங்கள் கடத்திச் சென்றார்.

பி. வி. என்ற பெயரில் சமூகப் பிரக்ஞையுடன், வகுப்புவாத வெறி, வங்கப் பஞ்சம் போன்ற நிலைக்களனில் பல கதைகள் எழுதியுள்ளார் நரசிம்மராவ்.

பட்டங்களோ பட்டங்கள்!


சங்கராந்திக்குக் கோலங்கள் இன்றியமையாதது போல் இங்கு பட்டம் விடுவதும் சங்கராந்தி யன்று உச்சகட்டத்தை அடைகிறது. சிறுவர் முதல், 'ஜார்தா' குதப்பும் பெரியவர்கள் வரை வண்ணக் காற்றாடிகளில் 'டீல்' விட்டு 'ஆலா' செய்வதில் போட்டா போட்டி. மைதானங்களில் மைக் வைத்து காமென்ட்டரி. காசு வைத்துப் பெட்டிங். வீதிகளில் அஜாக்கிரதையாகப் பட்டம் விடுவதில் பல விபத்துகள் ஏற்படுகின்றன. விழா நாள் துயர நாளாகி விடுவதுமுண்டு.

ஸாடிலைட் மணி ஆர்டர்!

ஹைதராபாத் தபால் இலாகா சமீபத்தில் படுவேகமாக இயங்கும் தபால் தலைகளில் முத்திரை குத்தும் இயந்திரம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. மணியார்டர்களை நாடெங்கும் 75 ஸாட்டிலைட் ஸ்டேஷன் மூலம் அனுப்பும் ரூ 250 கோடி திட்டம் விரைவில் அமலாக்கப்படுமாம். (வாழ்க உலக வங்கி!) செலவைப் பார்க்கும் போது வியப்பாக மட்டுமின்றி, பயமாகவும் இருக் கிறது, முன்பே உயர்ந்து இருக்கும் மணியார்டர் கமிஷன் விண்ணளாவி விடுமோ என்றுதான்! தபால் பட்டுவாடா தாமதங்கள் எரிச்சலூட்டும் நிலையில் இருக்கும் போது, இந்த விண்வெளி விஷயங்கள் நமக்கு சுவாரஸ்யப்படுவதில்லை.

- சுபஸ்ரீ

மறந்து போச்சே!



கே. விஸ்வநாதன்

கல்லூரிப் பேராசிரியர்களுக்கு மட்டும்தான் மறதி (Absent-minded Professors) என முத்திரை விட்டு விட வேண்டாம். மறதி விஷயத்தில் படித்தவர்கள் - படிக்காதவர்கள், ஆண் - பெண், ஏழை - பணக்காரன் போன்ற வித்தியாசங்கள் எல்லாம் கிடையாது. எல்லோருக்கும், எல்லா நாடுகளிலும் மறதி சகஜமே. சில தானாகவே மறந்து விடுகின்றன; மற்றும் சில வலுக்கட்டாயமாக மறக்கப்படுகின்றன. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை மறதி என்பது ஒரு பொதுவான விஷயம். ஆனால், பெரியவர்களுக்கு ஞாபக மறதி கொஞ்சம் அதிகம். ஏனெனில், மற்ற உறுப்புகளைப் போலன்றி, மூளையின் செல்கள் இறந்த உடனே அவை புதுப் பிக்கப்படுவதில்லை. மூளையின் செல்கள் தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக இறந்து கொண்டேயிருக்க, ஞாபகசக்தி உட்பட எல்லாமே நாளுக்கு நாள் தளர் வடைகின்றன.

மறதிக்குக் காரணமே நாம் சிலவற்றை மறக்க விரும்புவதுதான் என்கிறார்கள், சில உளவியல் அறிஞர்கள். சில ஞாபகங்கள் மற்ற ஞாபகங்களுடன் குறுக்கிட்டு அவற்றை அழிப்பதுதான் மறதி என மற்றும் சிலர் கருதுகிறார்கள். பயம், கூச்சம், ஆர்வமின்மை ஆகியன ஞாபகமறதிக்குக் காரணங்கள். மூளையில் ஞாபகம் வைத்துக்கொள்வது எவ்வளவு அவசியமோ, அதே போல மறப்பதும் மிக அவசியம்; அதில் அனுகூலம் உண்டு. உபயோகமற்றவைகளை மறந்து விடுவதும், உபயோகமானவைகளை மட்டும் ஞாபகத்தில் வைப்பதும் நல்லதே!

மூளையிலுள்ள கார்ட்டெக்ஸ், நியோகார்ட்டெக்ஸ் மற்றும் பாலியோ கார்ட்டெக்ஸ் ஆகிய பகுதிகள் ஞாபகத்தில் பங்கேற்கின்றன. மூளை வியாதிகளினால் மறதி ஏற்படலாம். தவிர, விபத்துக்களினால் மூளையில் காயம் ஏற்படும் போது நினைவுகள் பாதிக்கப்படுகின்றன. இதனையே அம்னீசியா (Amnesia) என்கிறோம். விபத்துக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளை மறந்து விடுவதற்கு ரெட்ரோகிரேட் அம்னீசியா (Retrograde Amnesia) என்கிறோம். விபத்துக்குப் பின்பு நடந்த நிகழ்ச்சிகளை மறந்து விடுவதற்கு போஸ்ட்-டிராமெடிக் அம்னீசியா (Post-traumatic Amnesia) என்றும் அழைக்கிறோம். விபத்தின் காரணமாக மூளையில் ஏற்பட்ட காயம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு போஸ்ட்- டிராமெடிக்

அம்னீசியாவும் அதிகமாகின்றது.

உங்களுடைய ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்ள ஆவலாக இருக்கின்றதா? இதோ சில எளிய பயிற்சிகள்! ஒரு விஷயத்தை ஞாபகம் வைக்க, அவ் விஷயத்தில் போதிய ஆர்வம் காட்டுங்கள்; புதியதாக மனதில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றவைகளை, ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளுடன் தொடர்பு படுத்திக் கொள்ளுங்கள். 'ரிதம்' (Rhythm) எனும் இயற்கையான இணைப்பை உண்டாக்கிக் கொள்ளுங்கள்; மாணவ, மாணவிகளே! உருப்போடும் பழக்கத்தைத் தவிர்த்து விடுங்களேன். (புரிந்து கொள்ள முடியாமல் போனாலோ, அல்லது போதிய கால அவகாசம் இல்லாமல் போனாலோ உருப்போடுவதைத் தவிர வேறு வழியில்லை) ஒரு நிகழ்ச்சியை அதனுடன் சம்பந்தப்பட்ட மற்றொன்றுடன் தொடர்பு படுத்தி வைத்துக் கொள்ளப் பழகுங்கள்!

ஞாபக சக்திக்கு மருந்துகள் சாப்பிடலாமா? ஞாபக சக்தியை அதிகரிக்க அலோபதியிலும், ஹோமியோபதியிலும் சில மருந்துகள் கடைகளில் விற்கப்படுகின்றன. டாக்டரின் ஆலோசனைகளின் பேரில்தான் இவைகளைப் பயன்படுத்த வேண்டும்.

தினந்தோறும் போதிய ஓய்வும், நல்ல தூக்கமும் தேவை. யோகாசனம், ஆழ் நிலைத் தியானம் ஆகியவற்றை ஒழுங்காகப் பயிற்சி செய்யுங்கள். இதனால், மூளையைச் சுறுசுறுப்பாக்கி, ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யலாம்.

மனதில் பதிவு செய்தல் (Registration), தங்க வைத்தல் (Retention), மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்ளுதல் (Recall) ஆகிய மூன்றையும் உள்ளடக்கியதுதான் ஞாபகம் அல்லது ஞாபக சக்தி. ஆனால், நாம் இன்னும் அதை முழுவதுமாக அறியவில்லை. மூளையினுடைய ஞாபகசக்தியின் அளவையும் யாராலும் முடிவாகச் சொல்ல முடியவில்லை. இத்தகைய ஆராய்ச்சிகள் இன்னும் தொடர்கின்றன!

அது சரி! இதுவரை இக் கட்டுரையில் படித்த விஷயங்கள் உங்கள் நினைவில் உள்ளதா...?!

பிரம்மாண்டப் படம்

அனில்கபூர் - ஸ்ரீதேவி நடித்து, விரைவில் வெளிவர இருக்கும் இந்திப்படம், 'ரூப் கி ராணி சோரோ(ங்) கா ராஜா'.

இந்தியாவில் இதுவரை எடுக்கப்பட்ட படங்களிலேயே இந்தப் படத்தின் தயாரிப்புச் செலவுதான் மிக அதிகம் (7 கோடி ரூபாய்.)



சராசரியாக ஒரு இந்தியப் படம் 120 ஷிப்டுகளில் எடுக்கப்பட்டு விடும். இந்தப் படம் 450 ஷிப்ட்டுகளில் எடுத்து முடிக்கப்பட்டது.

ஸ்ரீதேவி இந்தப்படத்தில் அணியும் 'காஸ்ட்யூம்' உடைகளின் எண்ணிக்கை 80. அதாவது சராசரியில் இரண்டு நிமிடத்திற்கு ஒரு உடை.

ஒரு காட்சியில் நடிகர் அனுபம் கேர் அணிந்து தோன்றும் ஒரு உடைக்கான செலவு மட்டும் ரூபாய் 35000!

இது வரை எந்த இந்தியப் படத்திற்கும் செய்யப்படாத அளவு ரூ. 2 கோடிக்கு விளம்பரம் செய்யப்படுகிறது.

ஸ்ரீதேவி, அனில் கபூர் இரண்டு பேருக்குமே இந்தப்படம் வயிற்றில் புளியைக் கரைத்துக் கொண்டிருக்கும் விஷயம். ஸ்ரீதேவியின் 'நம்பர் ஒன்' ஹீரோயின் பட்டம் நிலைக்குமா இல்லையா என்பதை இந்தப்படம் முடிவு செய்துவிடக் கூடும். அனில் கபூர், போனிகபூர் சகோதரர்கள் தங்கள் சம்பாத்தியம் பூராவையும் இதில் போட்டிருக்கிறார்கள். அவர்கள் எதிர் காலம், புகழ் இரண்டுமே இந்தப் படத்தில் பணயம் வைக்கப்பட்டுள்ளன.

– எஸ். ஆலன்

ஆதாரம் : வட இந்திய பத்திரிகைகள்

◆ 'அனல் பறக்கும் வாதங்கள்; பற்றி எரியும் நகரங்கள்' தலையங்கம், சித்தம் கலங்கிய பித்தர்களின் சிந்தையை, தெளிவாக்க வந்துள்ள சித்தர் பாடலாய் அமைந்துள்ளது.
திருச்சி - 8, உ. ர. சங்கர்.

◆ அத்வானி போன்றவர்களுக்கு இவ்வளவு இதமாகவும் நயமாகவும அறிவுரை கூற யாரும் இங்கில்லை; கல்கியைத் தவிர.
மொரட்டுப்பாளையம், இராஜேஸ்வரன்.

◆ கால்பந்து பற்றிய வியக்க வைக்கும் செய்திகளைப் படித்தேன். கால்பந்தாட்டம் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து கொள்ள முடிந்தது. பாராட்டுக்கள்!
தூத்துக்குடி - 2, சிவ. ராமசுப்பிரமணியன்.

◆ கிரிக்கெட் விளையாட்டையும், அதன் வீரர்களையுமே பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன கண்களுக்கு, கால்பந்து விளையாட்டைப் பற்றியும், அதன் வீரர்களையும், அழகு வண்ணத்தில் வெளிவிட்டு, எங்கள் கண்களுக்குக் குளிர்ச்சியையும் ஒரு புத்துணர்ச்சியையும் தந்து, வாசகர்கள் இதயத்தில் உயர்ந்து விட்டீர்கள்.
திருச்சி - 20, கல்லுக்குழி எம். இரவீந்திரன்.

◆ '1/4 பந்து - முழு ஜோக்' - தலைப்பிலேயே முதல் கோலைப் போட்டு விட்டீர்கள்!
சென்னை - 14, ஐயாறு எஸ். வாசுதேவன்.

◆ இந்த இதழில் வெளியான மூன்று கார்ட்டூன்களுமே அற்புதம்.
தக்கோலம், பி. அ. முஸ்தபாகமால்.

◆ கர்நாடகாவில் 'சிங்கிள் டிஜிட்' லாட்டரியை ஒழித்தது சரிதான். மற்ற லாட்டரிகள் மூலம் நிறையப் பேர் மறைமுக வேலை வாய்ப்புப் பெற்றிருந்தபோதிலும் எப்போது ஒழிக்கப் போகிறார்கள்?. ஒருவர் லட்சம் பெறுவதில் பல லட்சம் மக்கள் தங்கள் பணத்தை இழக்க நேரிடுகிறது. உதாரணமாக என் குடும்பத்திலேயே மாதா மாதம் நூற்றுக்கணக்கில் லாட்டரியில் பணம் பறிபோகிறது. இவற்றையும் அரசு தடை செய்ய வேண்டும்.
சென்னை - 101, பா. நாகலெட்சுமி.

◆ தளதள தக்காளி கிலோ ரூபாய் இரண்டுக்கு விற்றாலே, ஒரு ஏக்கர் விளைச்சலில் 13 ஆயிரம் ரூபாய் லாபமா? சபாஷ், பாலசுப்ரமண்யம்!
கும்பகோணம், கே. என். பாலகிருஷ்ணன்.

◆ சத்யப்ரியன் எழுதிய 'ஆடு' கதையைப் படித்தேன். தான் பிரியமாக வளர்த்த செடி கொடிகளை மேய்ந்த ஆட்டைப் பிடித்துக் கட்டிப் போட்டு விடலாம் என்றிருந்தவளுக்கு, ஆட்டுக்காரன் ஆட்டை கசாப்புக் கடைக்கு விற்று விட்டான் என்று கேட்டபொழுது, அவள் ஆட்டின் மேல் பரிதாபப்பட்டது மனதை நெகிழ்த்தி விட்டது.
சேலம் - 15, எஸ். உமாமகேசுவரி.

சித்தர் பாடலாய்த் தலையங்கம்!

◆ என். சி. மோகன்தாஸின் அம்'மா' ரொம்பவும் நெஞ்சைத் தொட்டு விட்டது.
பாண்டிச்சேரி - 3, தா. செல்வராசன்.

◆ தன் கணவனின் அதட்டலுக்கும், மிரட்டலுக்கும் பயந்து போய் ஒரு மூலையில் முடங்கிக் கிடந்து அழுது கொண்டிராமல், தைரியமாக வெளிவந்து, தன் பெண்ணுக்கு ஆதாரமாக வந்து நின்ற மீராவின் அம்மாவுக்கு ஒரு அழுத்தமான சப்பாஷ்! 'புதிய கீதங்கள்' சிறுகதையைத்தான் சொல்கிறேன்!
அருகந்தம்பூண்டி, மலை.அரசன்.

சிறந்த கடிதத்திற்குப் பரிசு!

வாசகர் கடிதங்களை நகைச்சுவை உணர்வோடு எழுத முயற்சி செய்யுங்களேன்! உங்கள் 5-6 வரி 'கமெண்ட்' கல்கி இதழ் பற்றி மட்டுமின்றி, நாட்டு நடப்பு குறித்தும் இருக்கலாம்! சிறந்த, சிரிப்புப் பொதிந்த கடிதத்துக்குப் பரிசு ரூ 25.

- ஆர்.

சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

21. மனைவியா பிசாசா?

"இது தூக்கத்தில் காணும் துர்ச் சொப்பனமா? நான் விழித்திருக்கிறேனா, இல்லை, தூங்குகிறேனா? ஏதாவது சித்தப்பிரமை வியாதி என்னைப் பிடிக்கிறதா? முன் ஜன்ம பாபங்களின் நினைவு வந்து அதை இப்போது நிகழும் உண்மை போல் காண்கிறேனா? ஏதாவது கிரக பீடையா? பைத்தியம் பிடித்து ஏதோ நடவாததை நடக்கிறதாகக் காண்கிறேனா, ஒன்றும் விளங்கவில்லையே!" என்று தசரதன் சித்தம் கலங்கி மனதில் உண்டான பயத்தைத் தாங்க முடியாமல் தவித்துத் தவித்துப் பிரக்ஞை இழந்தான். கொஞ்ச நேரம் கழித்துக் கண்ணைத் திறந்து புலியைக் கண்ட மானைப் போல் கைகேயியைப் பார்த்து நடுங்கினான். "ஐயோ!" என்று தரையில் உட்கார்ந்து கதறினான். மந்திரவாதியால் பிடிக்கப்படும் பாம்பைப் போல் ஆடினான். மறுபடி மூர்ச்சையடைந்து விட்டான். பிறகு வெகு நேரம் கழித்து நினைவு அடைந்து கண்களினின்று நெருப்புப் பொறிகள் பறக்க,

"ஏ கொடிய அரக்கியே! குலத்தைக் கெடுக்க வந்த பாவியே! உனக்கு என்ன தீங்கு செய்தான் ராமன்! பெற்ற தாயைப் போல உன்னைப் பாவித்து வந்தானே! உன்னை நான் ஒரு பெண் என்று எண்ணினேனே! கொல்லும் விஷப் பாம்பு என்பதைத் தெரியாமல் உன்னை எங்கிருந்தோ கொண்டு வந்து மடியில் வைத்துக் கொண்டேனே!" என்றான்.

கைகேயி ஒன்றும் பேசவில்லை.

"நாடெல்லாம் புகழும் ராமனை என்ன குற்றம் சொல்லி நான் தள்ளுவேன்? கௌசலையைத் தள்ளி விட்டுப் பிழைக்கலாம். தரும சொரூபி சுமித்திரையையும் இழந்து பிழைப்பேன். ராமனை இழந்தால் பிறகு என் உயிர் நிற்காது. ஜலமில்லாமல் பிழைப்பேன், சூரிய ஒளியில்லாமல் சமாளிப்பேன். ராமனை விட்டு விட்டு உயிரை வைத்திருக்க என்னால் முடியாது. இந்த மகா பாப எண்ணத்தை மனத்தினின்று விலக்கித் தள்ளு. உன் பாதத்தில் என் தலையை வைத்து வருந்தி வேண்டிக் கொள்ளுகிறேன். எவ்வளவு தடவை நீயே சொல்லியிருக்கிறாய்; 'எனக்கு இரண்டு அருமைக் குழந்தைகள்; அதில் மூத்தவன் ராமன்தான் எனக்கு அதிகப் பிரியமானவன்'. இவ்வாறு பல தடவை நீ சொல்லியிருக்கிறாயே? நீ எப்போதும் நினைத்து வந்ததை இப்போது நான் காரியத்தில் நிறைவேற்றினேனேயன்றி வேறில்லை. அப்படியிருக்க, ஏன் இம்மாதிரி கொடிய வரத்தைக் கேட்கிறாய்? இல்லை, இல்லை, என்னைப் பரீட்சை செய்கிறாய்! பரதன் மேல் எனக்குப் பிரியம் உண்டா என்பதைக் காண இப்படிச் செய்கிறாயா? பெரும் புகழ்பெற்ற குலத்தைப் பாபச் செயலில் அழித்து விடாதே" என்றான்.

அப்போதும் கைகேயி ஒன்றும் பேசவில்லை. கோபப் பார்வை பார்த்தாள்.

''இதுவரையில் எனக்கு வருத்தம் தரக்கூடிய காரியம் ஏதும் நீ செய்ததில்லை. பொருத்தமில்லாத பேச்சும் பேசியதில்லை. இப்போது யார் உன் புத்தியைக் கெடுத்தது? இது உன் செயல் அல்ல, நான் நம்ப மாட்டேன். என் காதலியே, எத்தனை தடவை நீ என்னிடம் சந்தோஷமாகச் சொல்லியிருக்கிறாய்? பரதன் மிகப் பெருந்தன்மையான பிள்ளை; சந்தேகமில்லை. ஆனால் ராமனுக்குச் சமானமாக மாட்டான் பரதன்' என்று மகிழ்ந்து மகிழ்ந்து சொல்லுவாயே! அந்த ராமனையா நீ இப்போது கூசாமல் காட்டுக்கு அனுப்பு என்கிறாய்? அவனால் காட்டில் இருக்க முடியுமா? இதையா நீ விரும்புகிறாய்? மிருகங்கள் நிறைந்த பயங்கரமான காட்டுக்கு நம்முடைய ராமனை அனுப்பச் சொல்லுகிறாயா? அவன் எவ்வளவு அன்பு செலுத்தி உனக்குச் சேவை செய்திருக்கிறான்? அதை மறந்து விட்டு எப்படி உனக்கு மனம் வந்தது, அவனைக் காட்டுக்கு அனுப்பு என்று வாயால் சொல்ல? அவன் என்ன தவறு செய்தான்? இந்த அரண்மனையில் நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் இருக்கிறார்கள். யாராவது ராமனைப் பற்றி ஒரு வார்த்தை, ஒரு அபவாதம், ஒரு குற்றம் சொல்லியதுண்டா? உலகமெல்லாம் அவனை விரும்புகிறதே? எல்லாருடைய அன்பையும் தன்னுடைய குணத்தாலும் சீலத்தாலும் சம்பாதித்திருக்கிறானே? உனக்கு ஏன் வந்தது அவன் மேல் இப்போது வெறுப்பு? இந்திராதி தேவர்களுக்குச் சமானமாக இருக்கிறானே என் மூத்த மகன்? தவம் செய்யும் ரிஷிகளுடைய முக தேஜஸை அடைந்திருக்கிறானே? ராமனுடைய சத்தியம், சீலம், சினேகம், அறிவு, படிப்பு, வீரம், பெரியோர்களிடம் அடக்கம் இவற்றை எல்லாரும் பாராட்டுகிறார்களே! அவன் வாயில் ஒரு கடினமான வார்த்தை வந்ததை நான் பார்த்ததில்லையே. அவனை எப்படி 'நீ காட்டுக்குப் போ' என்று தந்தையான நான் சொல்லுவேன்? இது சாத்தியமா? நான் கிழவன். எனது அந்திய காலத்தில் என்னிடத்தில் இரக்கம் காட்டு, கைகேயி! இந்த ராஜ்யத்தில் உள்ள செல்வத்தில் எதை வேணுமானாலும் கேள், எல்லாவற்றையும் கேள், உனக்குத் தருவேன். என்னை யமனிடம் அனுப்பாதே! கை கூப்பித் தொழுகிறேன். உன் இரு பாதங்களையும் பிடித்து வேண்டிக் கொள்ளுகிறேன். சரணம், சரணம்! ராமனைக் காப்பாற்றுவாயாக. என்னை அதர்மத்தைச் செய்யச் சொல்லாதே!'' என்றான்.

இப்படிச் சோகக் கடலில் விழுந்து மூழ்கித் தவித்துக் கொண்டு கரையேற வகை தெரியாமல் அடிக்கடி நினைவு இழந்தும், கண்ணீர் விட்டு அலறியும், வேதனைப்பட்டுக் கொண்டுமிருந்த மகாராஜனைப் பார்த்து, கைகேயி சிறிதும் இரக்கமின்றிக் கொடிய மொழிகளைப் பேசினாள்.

''அரசனே! வரங்கள் இரண்டு கொடுத்து விட்டுப் பிறகு கொடுத்தேனே என்று வருத்தப்பட்டுப் புறக்கணித்தீரானால் அரசனாகிய உமக்கு எப்படி வாய் எழும், சத்தியம் என்றாவது, தருமம் என்றாவது பேச? மற்ற அரசர்களிடம் என்ன சொல்லுவீர்? 'ஆம்! என்னைக் காப்பாற்றி எனக்கு உயிர் தந்த கைகேயிக்கு வாக்குத் தந்தேன். பிறகு எனக்கு அது பிடிக்கவில்லை. கொடுத்த வாக்கைப் பொய்யாக்கினேன் என்று வெட்கமில்லாமல் சொல்வீரா? வேறென்ன சொல்லுவீர்? ராஜ குலத்துக்கே அபவாதம் சம்பாதித்துக் கொடுக்கிறீர். 'அரசர்கள் மனைவிகளுக்குக் கொடுத்த வாக்கைப் பொய்யாக்குவார்கள், சொன்னதைச் செய்ய மாட்டார்கள்' என்கிற அபவாதத்தை உம்மால் அரச குலம் அடையும். சைப்யன் ஒரு பட்சிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற, தன் உடலிலிருந்து மாமிசத்தை அறுத்தெடுத்துத் தந்தான் என்பது உமக்குத் தெரியாதா? அலர்க்கன் தன் கண்ணைப் பறித்துத் தந்து சத்தியம் காத்து உத்தம கதியடைந்தான் என்று நீர் கேட்டதில்லையா? சமுத்திரமானது ஒப்பந்தம் செய்து கொண்டபின் அந்த ஒப்பந்தத்தை மதித்து, கரையை மீறாது நிற்கிறது. செய்த பிரதிக்ஞையைப் பொய்யாக்காதீர். நல்ல குலத்தைச் சேர்ந்தவர் நீர். முன்னோர் வழியில் நடப்பீராக. இல்லை, இல்லை! நீர் தருமத்தை விட்டு விட்டு ராமனுக்குப் பட்டமளித்து கௌசல்யையுடன் போகித்து சுகமாக வாழ்வீர். உமக்குச் சத்தியம் எங்கே போனால் என்ன? தருமம் எங்கே போனால் என்ன? எனக்குச் சபதம் செய்து தந்த வரங்களைப் புறக்கணித்தீராகில் உம்மெதிரில்

இன்றே விஷம் குடித்து இறப்பேன். ராமனுக்கு நீர் பட்டாபிஷேகம் செய்வீர். அன்றே நான் சத்தியம் தவறிய உம் எதிரில் உயிர் விடுவேன். நிச்சயம். நான் பரதன் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். வாக்குத் தந்தபடி ராமனைக் காட்டுக்கு அனுப்பினீரானால் சரி. இல்லையேல் உயிரை விடுவேன்'' என்று கைகேயி உறுதியாகச் சொல்லி விட்டுப் பேச்சை நிறுத்தினாள்.

இரக்கமற்ற மனைவியின் முகத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு தசரதன் பேச்சில்லாமல் நின்றான். இவள் கைகேயியா அல்லது பிசாசா என்று சந்தேகப்பட்டுப் பார்த்தான். பிறகு கோடாலியால் வெட்டப்பட்ட பெரிய மரத்தைப் போல் கீழே விழுந்தான்.

கொஞ்ச நேரம் கழித்து நினைவு வந்து, தீன சுரத்தில் மெதுவாகப் பேசினான் : ''யார் உனக்கு இந்த உபதேசம் செய்து உன் புத்தியைக் கெடுத்தது, கைகேயி? நான் செத்தேன். குலமும் அழிந்தது. எந்தப் பிசாசு உன்னைப் பிடித்துக் கொண்டு இப்படி வெட்கமிழந்து உன்னை ஆடச் செய்கிறது? நீ என்ன நினைக்கிறாய்? என் மகன் பரதன் அண்ணன் ராமனைக் காட்டுக்கு அனுப்பி விட்டுத் தான் அரசனாக இருக்க ஒப்புவானா? ஒரு நாளும் ஒப்ப மாட்டான். இதை நீ அறியாயா? ராமனை வனவாசம் போ என்று நான் சொல்லவாவது! இது நடக்கக்கூடிய பேச்சா? உலகத்திலுள்ள அரசர்கள் என்னை இகழ மாட்டார்களா? 'மனைவியினுடைய நிர்ப்பந்தத்தால் இந்தக் கிழவனாகிய மூடன், தன் மூத்த குமாரனும் உத்தம புருஷனுமான ராமனை அவனுக்குரிய ராஜ்யத்திலிருந்து துரத்தி விட்டான்' என்று சொல்லிச் சிரிப்பார்கள் என்பது உனக்கு விளங்கவில்லையா? ராமனைக் காட்டுக்கு அனுப்பு என்று கபடமாகச் சொல்லுகிறாய். கௌசல்யை உயிர் விட மாட்டாளா? நான்தான் உயிர் வைத்திருப்பேனா? ஜனகருடைய மகளைப் பற்றி யோசித்தாயா? ராமன் தண்டகாரண்யம் போக வேண்டும் என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் அவள் உயிர் நீப்பாளே? உன்னை ஒரு ஸ்திரீ என்று நம்பி மனைவியாகக் கொண்டேன். உன் ரூபத்தைக் கண்டு மோசம் போனேன். மதியிழந்தவன் விஷம் கலந்த தேனைக் குடிப்பது போல் உன் அழகைக் கண்டு மயங்கி உன்னைக் கட்டிக் கொண்டேன். வேடனுடைய பாட்டைக் கேட்டு மான் வலையில் சிக்குவது போல் உன் வலையில் சிக்கிப் போய் மாள்கிறேன். உலகம் என்னைச் சீ என்று வெறுத்து என்னை விட்டுத் தூர விலகும். கள் குடித்த பிராமணனைத் தெருவில் எல்லாரும் வெறுப்பது போல என்னை எல்லாரும் வெறுப்பார்கள். ஆஹா! என்ன வரத்தைக் கேட்டாய்? குலம் அழிந்து போகப் போகிறது. ஒரு பெண்ணின் வசம் சிக்கித் தன் அன்புக்குரிய குமாரனைக் காட்டுக்கு அனுப்பிய மூடன் என்கிற இகழ் என்றென்றைக்கும் என்னைப் பற்றிக் கொண்டு நிற்கும். நீ வனம் செல்ல வேண்டும் என்று நான் ராமனுக்குச் சொன்னேனானால் மறு பேச்சுப் பேச மாட்டான். போகிறேன் என்று உடனே சந்தோஷமாகப் போய் விடுவான். ஆமாம், ராமன் காட்டுக்குப் போய் விடுவான். நானும் எனக்குப் பின் கௌசல்யையும் சுமித்திரையும் உயிர் நீப்போம். இப்படிச் சம்பாதித்த ராஜ்யத்தை நீ சுகமாக அனுபவிப்பாய். பாவி, மூடப் பெண்ணே!

''பரதன் இதற்கெல்லாம் சம்மதிப்



பானா? அவனும் இதற்குச் சம்மதித்தவனானால் அவன் எனக்கு உத்தரகிரியையும் செய்ய வேண்டியதில்லை. வெட்கமற்ற ஸ்திரீயே, என் சத்துருவே, புருஷனையிழந்து விதவையாகி உன் மகனுடன் ராஜ்யத்தைச் சந்தோஷமாக அனுபவிப்பாயாக.

''ஹா! ராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டுமா! ஆஹா! ஸ்திரீகளுடைய சுபாவம் எவ்வளவு பாப சுபாவம்! எவ்வளவு கொடியவர்கள்! இல்லையில்லை. இவள்தான் கொடியவள். மற்றவர்களை ஏன் நான் நிந்திக்க வேண்டும்? பரதன் தனக்குத் தாயாக இவளைப் பெற்றானே! ஒருநாளும் என்னால் இது செய்ய முடியாது. கைகேயி! உன் காலைப் பிடித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன். கொஞ்சம் இரக்கம் காட்டு'' என்று கதறிக் கொண்டு தசரதன் கீழே தரையில் புரண்டான்.

மகாராஜாவாகப் பல்லாண்டுகள் ராஜ்யபரிபாலனம் செய்து பெரும் கீர்த்தியைப் பெற்ற தசரத சக்கரவர்த்தியானவன் பூமியில் புரண்டு அழுது கொண்டு மனைவியின் பாதங்களைப் பிடித்து இறைஞ்சும் நிலையை என்னென்று சொல்வது! சம்பாதித்த புண்ணியம் தீர்ந்ததும் யயாதி சுவர்க்கத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுப் பூமியில் வீழ்ந்த காட்சியாக இருந்தது.

மகாராஜன் எவ்வளவு வணங்கி எவ்வளவு தீனமாகக் கேட்டுக் கொண்டும் கைகேயி பிடிவாதமாக, ''நீர் சத்ய சந்தர், சொன்ன சொல் தவறாதவர் என்று இவ் வளவு நாள் எல்லாரிடமும் பறை சாற்றி வந்தீர். தெய்வங்கள் சாட்சியாக எனக்கு வரம் தந்துவிட்டு அதைப் புறக்கணிக்கப் பார்க்கிறீர். நீர் வார்த்தை தவறினால் என் உயிரை மாய்த்துக் கொள்வேன், அது நிச்சயம்'' என்று முடிவாகச் சொல்லி விட்டாள்.




''அப்படியானால் பாவி, ராமன் வனம் போவான். நான் சாவேன். நீ எனக்கும் என் குலத்துக்கும் பகையாகி உன் விருப்பத்தையடைந்து என்ன சுகமடைய வேண்டுமோ அதை அடைவாயாக!'' என்றான் தசரதன்.

மறுபடியும், ''ராமனைக் காட்டுக்கு அனுப்பி நீ என்ன பிரயோஜனத்தைப் பெறுவாய் என்பதை நான் அறியவில்லை. உலகம் முழுதும் உன்னை இகழ்வதைத் தவிர, வேறொரு பிரயோஜனமும் நீ அடையப் போவதில்லை. புத்திரப் பேறு இல்லாது பல்லாண்டு வருந்தி, பிறகு ஆண்டவன் அருளால் ராமனை அடைந்தேன். அவனை இப்போது காட்டுக்கு அனுப்புகிறேன். ஆஹா! என்ன பாக்கியத்தைப் பெற்றேன்!'' என்று கிழ அரசன் அழுதான்.

பிறகு அவன் ஆகாயத்தை நோக்கி, ''ஹா, நிசியே, நீ தீர்ந்து பொழுது விடிந்து விட்டால் நான் என்ன செய்வேன்? பட்டாபிஷேகத்தை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு என்ன சொல்லுவேன்? ஆகாயமே! நட்சத்திரங்களுடன் எனக்காக அப்படியே நிற்பாய்! ஐயோ! வேண்டாம், அப்படியானால் இந்தப் பாவியின் முகத்தில் விழித்துக் கொண்டே இருக்க வேண்டியதாகும்! சீக்கிரம் தீர்ந்து போவாய் நிசியே, விடிந்தால் இவள் முகத்தைப் பார்க்காமலிருக்கலாம்'' என்று இவ்வாறு பேசிக் கொண்டு உன்மத்த நிலையும் மூர்ச்சையுமாக மாறி மாறி வேதனைப்பட்டான் அப்பாவி தசரதன். அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்டு முதுமையடைந்த பேரரசன்.

''என் மேல் இரக்கம் கொள்வாய், கைகேயி! நான் கோபம் கொண்டு சொன்னதையெல்லாம் மறந்து விடு. உனக்கு என் பேரிலிருந்த அன்பை வைத்துக் கேட்டுக் கொள்ளுகிறேன். ராஜ்யம் உனக்குத் தந்தேன் என்றே வைத்துக் கொண்டு ராமனுக்கு அதை நீ உன்னுடையதாக உன்னுடைய கையால் கொடுத்து நாளை நடக்க வேண்டிய பட்டாபிஷேகம் நடைபெறச் செய். நாளை ராமனுக்குப் பட்டாபிஷேக



"கள்ள நோட்டு அச்சடிச்சதிலே... ஒரு தப்பு நடந்து போச்சு!"

"என்ன தப்பு?"

"மறந்து போய்... ஒவ்வொரு ரூபாயின் சீரியலும்... 'ஸ்ரீ ஞானவிலாஸ் அச்சகம்'னு அடிச்சுத் தொலைச்சாச்சு!"

– வி. ராஜப்பா.



"பஸ் டிரைவர் ரொம்பப் புதுசா?"

"கண்டக்டர் எப்படி கண்டு பிடிச்சீங்க?"

"கரெக்டா ஸ்டாப்பில் பஸ்ஸை நிறுத்தறாரே!"

– எஸ். ப்ரியா.

"என்னய்யா இது.... ஆபீசுக்கு மாறு வேசத்துல வர்றே?"

"லஞ்சம் குடுத்தவங்க பூராவும் வழில நின்னுக்கிட்டு எங்க காரியம் என்ன ஆச்சு... பைல் மூவ் ஆயிடுச்சான்னு கேட்டு உயிரை வாங்கறாங்க!"

– அம்பை தேவா.



மென்று ராஜ சபையில் தீர்மானித்துப் பெரியோர்களுக்கும் ராமனுக்கும் நான் சொன்னதைப் பொய்யாக்க வேண்டாம். என் மேல் இரக்கம் கொள். ராமனுக்கு நீயாகக் கொடு ராஜ்யத்தை. உலகமுள்ள வரையில் நிற்கும் பெருங் கீர்த்தியை அடைவாய். என் விருப்பம், ஜனங்களின் விருப்பம், பெரியோர்களின் விருப்பம், பரதன் விருப்பம் எல்லாமும் இதுவேயாகும். இதைச் செய்வாய் என் உயிரே. என் காதலியே!" என்று மறுபடியும் அரசன் கொடிய கைகேயியைக் காலைப் பிடித்து வேண்டிக் கொண்டான்.

"முடியாது! கொடுத்த வரத்தைப் பொய்யாக்காதீர். சத்தியம் சத்தியம் என்று பேசிக் கொண்டிருந்து, ஏன் இப்போது அசத்தியத்தில் புகப் பார்க்கிறீர்? அப்படிச் செய்தீரானால் என் உயிரை மாய்த்துக் கொள்வேன், அறிவீர். வீண் கால தாமதம் வேண்டாம்" என்றாள் கைகேயி.

"மந்திரத்துடன் கையைப் பிடித்து, தீயின் முன் உன்னைக் கொண்டேன். இப்பொழுது உன்னை நீக்கினேன். எனக்கும் உனக்கும் பிறந்த மகனையும் நீக்கி விட்டேன். இரவு தீர்ந்து, பொழுது விடியப் போகிறது. பட்டாபிஷேகம் இல்லை. ராமன் எனக்கு உத்தரக் கிரியை செய்வான்" என்றான் அரசன்.

"வீணாகப் பிதற்றிக் கொண்டிருக்கிறீர். ராமனுக்குச் சொல்லியனுப்பி, அவனை இங்கே உடனே வரவழைக்கவும். பரதனுக்கே ராஜ்யம் என்று சொல்லி அவனை வனத்துக்கு அனுப்பிச் சத்தியத்தைக் காப்பாற்றவும். தாமதம் செய்ய வேண்டாம்" என்றாள் கைகேயி.

"அப்படியா?" என்றான் அரசன்.

"சரி, என் மகன் முகத்தையாவது பார்ப்பேன். நான் இறப்பது நிச்சயம். உடனே அவனை வரச் சொல். இறப்பதற்கு முன் அவன் முகத்தையாவது பார்ப்பேன். சத்தியம் என்கிற கயிற்றினால் கட்டப்பட்டு, இந்த மூடக் கிழவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்று தீன சுவரத்தில் சொல்லி விட்டு மறுபடியும் நினைவு இழந்தான்.

(தொடரும்)

பாலம்

●● நேச்சுரோபதி, யோகா பயிற்சிகள் மூலம் பல வித நோய்களிலிருந்து நிவாரணம் பெற சுயவிலாசமிட்ட கடிதத்துடன் தொடர்பு கொள்ளவும்.

– Mrs. Mani,
Naturopath & Yoga Teacher,
9, T.S. Flats, B.H. Area, KADMA P.O.
Jamshedpur - 831 005.

●● மெழுகுவர்த்தி செய்து சுய தொழிலில் ஈடுபட விரும்புகிறேன். பழைய அலுமினிய மெழுகுவர்த்தி அச்சுகள் இருப்பின் எழுதவும். செய்முறை ஆலோசனைகள் அனுப்பினாலும் மகிழ்வேன்.

– ஆர். திருமலை,
4, சாந்தி நகர், கௌரிவாக்கம்,
சென்னை – 600 073.

●● புகழ் பெற்ற பொறியியல் நிபுணரும் தமிழ் அறிஞருமான பா.வே. மாணிக்க நாயக்கரின் படைப்புகள் பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறேன். எனது எம்ஃபில் பட்டப்படிப்புக்காக நடக்கும் இந்த ஆய்வில் உதவ விரும்புவோர் அவர் எழுதிய நூல்கள், அவரைப் பற்றி பிறர் எழுதிய நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், படங்கள் முதலியன இருந்தால் கொடுத்து உதவ வேண்டுகிறேன். உரிய விலை தந்தும் பெற்றுக் கொள்கிறேன்.

– சேலம் அன்பரசு,
30, சென்ன கிருஷ்ணன் தெரு,
சேலம் – 636 002.

●● இளங்கலை முதலாமாண்டு பொருளாதாரம் படித்து வருகிறேன். (அண்ணாமலை பல்கலைக்கழகம் - தபால் மூலம்) தமிழ், ஆங்கிலம், பொருளாதாரம் (ஆங்கிலத்தில்) ஆகியவற்றுக்கு நோட்ஸ் (கைட்) இருந்தால் தரவும். படித்துவிட்டுத் திருப்பித் தந்து விடுகிறேன்.

– ஏ. ஜெய்னி,
த/பெ. ஆர். அருணாசலம்,
செட்டிகட்டளை,
கோதவாசல் (அஞ்சல்),
நெடுஞ்சேரி (வழி),
தென் ஆற்காடு – 608 305.

●● ஒரு வயலின் எனக்குத் தேவைப் படுகிறது. ஸெகண்டில் விற்க விரும்புகிறவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.

– டி. குணசேகரன்,
அய்வேலி வெள்ளூர் (அஞ்சல்),
முசிறி வட்டம்,
திருச்சி (மா.வ) – 621 202.

●● தமிழிலிருந்து ஹிந்தியிலும், ஹிந்தியிலிருந்து தமிழிலும் மொழி பெயர்க்கப் பெரும் ஆவல். சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் மொழி பெயர்ப்புக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் மகிழ்ச்சி அடைவேன்.

– லதா சேகர்,
1-6-141, Road No. 8,
Habshiguda, Hyderabad - 500 007.

●● Suspensory Bandage - Extra large size சென்னையில் எந்தக் கடையிலும் கிடைக்கவில்லை. எங்கு கிடைக்கும் என்று அறிந்தவர்கள் தெரிவித்தால் நன்றியுடையவனாக இருப்பேன்.

– எஸ். கருணாநிதி,
27, தையப்ப முதலி தெரு,
சென்னை – 600 001.


●● ஸ்ரீ ராமகிருஷ்ணரின் கொள்கைகளில் ஆர்வம் உள்ள இளைஞர்கள், ஆச்ரமம் - ஆன்மீகச் சூழலில், முதியோர் இல்லம் நடத்த விரும்புகிறோம். ஒரு ஏக்கர் பரப்பளவில் தண்ணீர் வசதியுடன் நிலம் தேவை.

– ஸ்ரீ ராமகிருஷ்ணசுவாமி
விவேகானந்த நற்பணி மன்றம்,
45, மங்கலம் பாதை,
திருப்பூர் – 638 604.

●● பி.எம். கண்ணன் எழுதிய "முள் வேலி", "சோறும் சொர்க்கமும்", ஆர்வி எழுதிய "முகராசி" ஆகிய நாவல்கள் இருந்தால் விலை விவரம் எழுதவும்.

- Mrs. Janardhan,
16A, Metro Tower,
240, S.N. Roy Road,
Calcutta - 700 038.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி - தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது. – ஆர்.)



அட, அப்பாடியா!

வெறுக்கணக்காக விக்கல்!

!! பல நூற்றாண்டுகளாக மனித குலத்தின் ஆர்வத்தையும் ஆசையையும் தூண்டி வரும் 'கனவு நகரம்' - El dorado. பொன்னும் பொக்கிஷங்களும் நிறைந்ததாகக் கருதப்படும் இந் நகரம் தென் அமெரிக்காவில் ஆண்டீஸ் மலைத் தொடரில் இருப்பதாகப் பலர் நம்புகிறார்கள். இந்த நகரத்துச் செல்வங்களுக்கு ஆசைப்பட்டுக் காடு, மலை கடந்து சென்ற நூற்றுக்கணக்கான மனிதர்கள் அந்த முயற்சியின் போது உயிரிழந்துள்ளார்கள்.


!! Carl Jung என்ற ஸ்விட்சர்லாந்து நாட்டு மனோதத்துவ நிபுணர் 'பறக்கும் தட்டுகள்' (Flying saucers) பற்றிச் சுவையான விளக்கம் அளித்திருக்கிறார்: "இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மனித குலத்துக்கு அணு ஆயுதங்கள் குறித்த அச்சம் அதிகமாகி விட்டது. அவற்றின் ஆபத்திலிருந்து தங்களைக் காப்பாற்ற ஏதேனும் அமானுஷ்ய சக்தி தோன்றாதா என்று மனிதர்கள் ஏங்க ஆரம்பித்தார்கள். இந்த ஏக்கத்தின் விளைவாக அடையாளம் தெரியாத பறக்கும் உபகரணங்கள், பறக்கும் தட்டுகள் போன்ற மனப் பிராந்திகள், மனிதர்களுக்குத் தோன்ற ஆரம்பித்தன என்கிறார்.

!! வால்டர் பவல் என்ற இங்கிலாந்து நாட்டு எம்.பி., டிசம்பர் 10, 1881 அன்று தமது இரு நண்பர்களுடன் ஒரு பலூனில் பறந்தார். மீண்டும் பூமிக்கு வந்ததும் இரு நண்பர்களும் பலூனை விட்டு இறங்கினார்கள். பவல் இறங்குவதற்கு முன்னால் திடீரென்று பலூன் மீண்டும் பறந்து விட்டது. பவல் திரும்பவேயில்லை!



!! ஜப்பானின் பல பகுதிகளில் கறுப்புப் பூனை குறுக்கே கடந்து சென்றால் நல்ல சகுனம் என நம்புகிறார்கள்.

!! லாஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த Jack O' Leary என்பவர் 1948 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் தேதியன்று விக்க ஆரம்பித்தார். 1956 ஜூன் 1 வரை இந்த விக்கல் நிற்காமல் பிடித்தது! அந்தக் கால கட்டத்தில் அவர் 64 பவுண்ட் எடை இழந்தார். விக்கலை எப்படி நிறுத்தலாம் என்று அறிவுரை கூறும் 60,000 கடிதங்கள் அவருக்குத் தபாலில் வந்தன!




!! பதினாலாம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டைப் பிளேக் நோய் பீடித்த போது, மாதா கோயில் மணியை அடிப்பதால் அந் நோய் சிதறி ஓடிப் போய் விடும் என்ற நம்பிக்கை நிலவியது!


!! அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் கதீட்ரல் சர்ச்சில் வண்ணக் கண்ணாடிகளுடைய ஒரு ஜன்னல் உண்டு. விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுனர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த வண்ண ஜன்னலில், சந்திரனிலிருந்து விண்வெளி வீரர்கள் எடுத்து வந்த பாறையின் ஒரு துணுக்கும் பொருத்தப்பட்டுள்ளது.

!! பண்டைக் கால ஜப்பானில் பல் டாக்டர்கள் வெறுங் கைகளை உபயோகித்து விரல்களால்தான் பற்களைப் பிடுங்கினார்கள்!

!! நியூயார்க் மியூசியத்தில் வைக்கப்பட்டிருந்த 'Le Batean' என்ற ஓவியத்தை ஆறு வாரங்களில் 1,16,000 பார்வையாளர்கள் வந்து பார்த்து, வியந்து மகிழ்ந்தனர். அதற்குப் பின்னரே, அதை வரைந்த ஓவியர் Henry Mattisse இன் மகன் அந்த நவீன ஓவியம் தலைகீழாக மாட்டப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினார்!

தொகுப்பு : உதய்லால்


"BAANMOS" ATTACKS ONLY THE TARGET
YES ... ONLY THE MOSQUITOES!
''பான்மாஸ்'' இலக்கை மட்டுமே தாக்கும்
ஆம் ... கொசுக்களை மட்டுமே விரட்டும்
BAANMOS®
MOSQUITO MAT DROPS
'டி அல்லெத்ரின்' அறவே நீக்கப்பட்டது
எனவேதான் இது குழந்தைகளின்
சுவாச உறுப்புக்களைக்கூட தாக்குவதில்லை
12-ml பாட்டில் 55 இரவுகளுக்கு உதவக்கூடியது
உடலுக்கு தீங்கற்றது
புகையாதது - நறுமணமிக்கது.
Marketed By :
SREE ASVINI ELCONS PVT. LTD.,
PH 429839, 425601
Markxworld
ENQUIRIES INVITED FOR DISTRIBUTOR/STOCKISTS
COLOR SCREENS


இது ஒரு
நக்கீரன்
வெளியீடு.
விலை ரூ.4.00
படித்து விட்டீர்களா?
சிறுகதை
கதிர்
புதிய மாத இதழ்

கசியம்



மிகுந்த மனவேதனையோடு கேட்டார் ராஜசேகர்.

''இதைத் தவிர வேறு வழியே இல்லையா?''

சிரித்தான் ரமேசன். சொன்னான்.

''உங்களை மிரட்டி அப்பப்போ பணம் கேட்டு அலுத்துப் போச்சு. பேசாம உங்க பொண்ணை நான் கல்யாணம் செய்துக்கிட்டா, வீட்டோட மாப்பிள்ளை ஆயிடுவேன். அப்புறம் எனக்கும் வசதியான வாழ்க்கை அமைஞ்சிடும். உங்களுக்கும் பிரச்னையில்லாமப் போயிடும். குடும்பத்துல ஒருத்தனா ஆயிடறதாலே உங்க ரகசியத்தை நான் வெளியே சொல்ல மாட்டேன். ஸோ, ரெண்டு பேருக்கும் பாதுகாப்பான ஒரு ஏற்பாடு இதைத் தவிர வேறே எதுவும் இல்லை. இன்னும் ரெண்டே நாள் டயம் தரேன். அதுக்குள்ளே யோசிச்சு ஒரு நல்ல முடிவுக்கு வாங்க.''

சொல்லி விட்டு அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

அவன் சென்றபின் வெகு நேரம் யோசித்தார் ராஜசேகர்.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் அவர் செய்த தவறு தவறா? நம்பிக்கை துரோகம் - இப்போது விஸ்வரூபம் எடுத்து அவர் எதிரே நிற்கிறது... இதிலிருந்து தப்பிக்க என்ன வழி?

''அவருக்கு வேறு வழியே இல்லை'' என்று உற்சாகமாகக் கூறினான் ரமேசன்.

டிரைவ்-இன்னில் அவன் எதிரே அமர்ந்து வடையை விண்ட குமார், மிகுந்த சுவாரஸ்யத்தோடு அவனைப் பார்த்தான். சொன்னான்.

''டேய் ரமேசா! எதையும் திட்டமிட்டுச் செய்யறதுல உன்னை யாராலும் மிஞ்சவே முடியாது.''

உற்சாகமாகச் சிரித்தான் ரமேசன். சொன்னான்.

''பின்னே என்னடா? வாழ்க்கையில சோற்றுக்கும் துணிக்கும் எவ்வளவோ அல்லாடியாச்சு. கஷ்டம்னா கஷ்டம்... சொல்லி முடியாத கஷ்டம் அனுபவிச்சாச்சு. எதிர்பாராத விதமா அவரோட ரகசியம் என்கிட்டே மாட்டியிருக்கு. அதை வச்சுக்கிட்டு எவ்வளவு முடியுமோ அவ்வளவு செளகரியங்களை அனுபவிக்க வேண்டியதுதானே!''

''ஒரு விஷயத்துல உன்னைப் பாராட்டணும்டா'' என்றான் குமார். ''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்கற மாதிரி உன் வரைக்கும் வசதியைத் தேடிக்காம, எனக்கும் அவர்



கம்பெனியில ஒரு வேலை வாங்கிக்கொடுத்திருக்கே.''

''பேசாம இரு. அவர் பொண்ணைக் கல்யாணம் செய்துகிட்ட பின்னால கம்பெனியையே என் கைவசம் கொண்டு வந்துடுவேன். அப்புறம் நீதான் ஜெனரல் மானேஜர்.''

''ஓகோ! அப்படியொரு யோகம் வேறே எனக்கு இருக்கா?''

கலகலவெனச் சிரித்தான் குமார்.

அன்றிரவு அவர்கள் மூவருமே தூங்கவில்லை.

''கேட்ட வரை பணம் கொடுத்தேன். இன்னும் கேட்டாலும் தரத் தயார். ஒரேயடியாகப் பெண்ணையே கேட்கிறானே! அருமையாக வளர்த்த பெண்ணை ஒரு அயோக்கியனிடமா ஒப்படைப்பது? ஊகூம்... இந்தப் பிரச்னையை இதற்கு மேலும் வளர விடக் கூடாது. இதற்கு நாளை ஒரு முடிவு கட்டியாக வேண்டும்...''

யோசனை வளர வளர, தூக்கமும் ஒதுங்கி ஒதுங்கிப் போயிற்று ராஜசேகருக்கு...

''என் வாழ்க்கையோட அவலம் ஒரு முடிவுக்கு வரப் போகுது. துருப்புச்சீட்டைக் கச்சிதமாப் பயன்படுத்திட்டேன். தொழிலதிபர் ராஜசேகரோட ஒரே மகள் எனக்கு மனைவியாகப் போறா. டேய் ரமேசா... உன்னோட வாழ்க்கையில இனிமே உல்லாசம்... உல்லாசம்... உல்லாசம் தவிர வேறே எதுக்குமே இடமில்லேடா...''

கண்களை மூடிக் கற்பனையில் திளைத்தான் ரமேசன்.

பெங்களூர் லால்பாகில் அவனும் அவளும் கைகோத்து உலவினார்கள்.

ஊட்டி ஏரியில் உற்சாகமாகப் படகு செலுத்தினார்கள்.

மெரினா கடற்கரையில், படகு மறைவில் அவன் மார்பில் சாய்ந்து, ''இஞ்சி இடுப்பழகா'' என்று பாடினார்கள்...

''ஆகா! ரமேசனோட நட்பு கிடைச்சது எவ்வளவு நன்மையாப் போச்சு!''

நினைத்த போது மனம் குதூகலித்தது குமாருக்கு.

''என் லட்சியத்தை நோக்கி ஒவ்வொரு அடியா எடுத்து வச்சு முன்னேறிக்கிட்டிருக்கேன். அவசரமே இல்லை. கொஞ்சம் கொஞ்சமா அந்த லட்சியத்தை நெருங்கி,

அபர்ணா நாயுடு

சரியான சந்தர்ப்பத்துல அதை நிறைவேற்றிக்கிட்டாப் போதும். இவ்வளவு நாள் பொறுத்தவனுக்கு இன்னும் கொஞ்ச நாள் காத்திருக்கிறதுல பெரிசா நஷ்டம் எதுவும் ஏற்பட்டுடப் போறதில்லை.''

இளமைக் காலத் துயரங்கள் நினைவில் அலை புரள, தூங்க மறந்து அதிலேயே ஆழ்ந்து போனான் குமார்.

'என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்?'

அலுவலகத்திலும் அதே யோசனை தொடர்ந்தது. மாலை நெருங்க நெருங்க அதற்கான விடை மெள்ள உதயமாயிற்று. இன்டர்காமை எடுத்து குமாரை அழைத்தார் ராஜசேகர். அவன் வந்ததும் -

''ஆபீஸ் முடிஞ்சதும் வீட்டுக்குப் போயிடாதே. உன்கிட்டே ஒரு விஷயம் பேசணும். உன் சினேகிதன் ரமேசனைப் பத்திக் கொஞ்சம் அந்தரங்கமாப் பேசணும். என்ன?''

''சரி சார்.''

நகர்ந்த போது அவன் நெஞ்சில் யோசனை.

ரமேசன் காற்றில் மிதந்து கொண்டிருந்தான். அவனைப் பொறுத்தவரை எல்லாமே முடிவாகி விட்டது. ராஜசேகரால் அதிகம் முரண்டு பிடிக்க முடியாது. அந்தக் கல்யாணத்துக்கு அவர் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். வேறு வழியில்லை. அவர் செய்த மோசடி வெளியே தெரிந்தால் அப்புறம் அவர் தலைநிமிர்ந்து நடக்க முடியாது.

இரண்டு நாள் அவகாசம் கூட அதிகம் தான். எதற்கும் ஒருமுறை போன் செய்து பார்க்கலாமா? லேசாக மிரட்டி விளையாடிப் பார்க்கலாமா?

யோசனை பிறந்த நொடியிலேயே சுறுசுறுப்பும் கூடவே பிறந்தது. ஒரு பொதுத் தொலைபேசியைத் தேடிப் போனான்.

அறைக்குள் நுழைந்த குமாரை ஏறிட்டுப் பார்த்த ராஜசேகரின் முகத்தில் ஒரு உறுதி தெரிந்தது.

''வா குமார். ரமேசன் விஷயமா நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன். அதைப் பத்திப் பேசத்தான் உன்னைக் காத்திருக்கச் சொன்னேன்.''

''சரி சார்.''

அவர் பேசத் தொடங்குவதற்குள் டெலிபோன் ஒலித்தது.

எடுத்தார். சொன்னார்.

''ராஜசேகர் ஹியர்.''

''சார் நான் ரமேசன். கல்யாணத்தைப் பத்தி என்ன முடிவு செஞ்சீங்க?''

''நல்ல முடிவுதான். இப்போ இங்கே வரியா?''

''கண்டிப்பா. அரை மணிக்குள்ளே அங்கே இருப்பேன்.''

போனை வைத்த ராஜசேகர் அவரையே பார்த்திருந்த குமாரிடம் சொன்னார்.

''அவன் கொஞ்ச நேரத்துல இங்கே வரான்.''

ரமேசனுக்கு உற்சாகம் பொங்கியது. அவனுடைய திட்டம் நிறைவேறும் நேரம் வந்து விட்டது. இனி அவனுக்கு வசந்த காலம்தான். கவலையில்லை. பிரச்னையில்லை. எந்தத் தொல்லையுமே இருக்கப் போவதில்லை.

எதிரே வந்த ஆட்டோவை நிறுத்தினான். ஏறி உட்கார்ந்து போக வேண்டிய முகவரியைச் சொன்னான்.

அந்த அலுவலக வாசலில் வண்டி நின்றதும் பணத்தைக் கொடுத்து விட்டு விரைந்து படியேறினான்.

உள்ளே அலுவலகம் வெறிச்சோடியிருந்தது. அவருடைய அறையில் மட்டும் வெளிச்சம் தெரிந்தது. வேகமாக நடந்து கதவைத் திறந்த போது, எதிரே நாற்காலியில் ராஜசேகர் சரிந்து கிடந்தார். அவர் மார்பில் கத்தி செருகப்பட்டிருந்தது.

''ஐயோ!''

அதிர்ந்து போன ரமேசன் அந்த அறையை விட்டு வெளியேற முற்பட்ட போது -

குமாரும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் உள்ளே நுழைந்தார்கள்!

நிலைமையைக் கண்ட குமார் கூச்சலிட்டான்.

''அடப் பாவி! முந்திட்டியேடா! இந்த மாதிரி எதுவும் நடந்துடும்னு பயந்துதானே சாரைக் கூட்டிட்டு வரச் சொல்லி என்னை லெட்டர் கொடுத்து அனுப்பிச்சாரு. நான் வரதுக்குள்ளேயே இப்படி முந்திக்கிட்டியேடா!''

ரமேசனின் உடல் பதறியது.

''நான் இப்போதான் உள்ளே நுழைஞ்சேன். நான் வந்தபோதே இவர் கொலையுண்டுதான் கிடந்தாரு. நான் இதைச் செய்யலை.''

''மிஸ்டர்! கொஞ்ச நேரம் பேசாம இருக்கியா?''

இன்ஸ்பெக்டர் அதட்டினார். பின் அந்த நாற்காலியை நெருங்கி ராஜசேகரின் உடலை உற்றுப் பார்த்தார். திரும்பி வந்து ரமேசனையே சற்று நேரம் வெறித்துப் பார்த்தார். கேட்டார்.

''சொல்லு மிஸ்டர். இவரை ஏன் கொலை செஞ்சே?''

''சத்தியமா நான் இதைச் செய்யலை.''

''அதை நம்பச் சொல்றியா?''


''அதுதான் சார் உண்மை.''

''இவன் மறைக்கிறான் சார். இவனால தனக்கு ஆபத்து வரும்னு அவர் பயந்தாரு. அதுக்காகத்தான் என்கிட்டே லெட்டர் கொடுத்து உங்ககிட்டே அனுப்பினாரு. இவன் மிரட்டலுக்கு ஒப்புக் கொள்றதாச் சொல்லி இவனை இங்கே வரவழைக்க, இவன் வர நேரத்துல நீங்களும் வந்தா விஷயத்தைச் சொல்லி இவனைப் பிடிச்சுக் கொடுத்துடலாம்கறது அவர் திட்டம்''

அடுத்த இதழில்...

●● சென்னை டெஸ்டும் அஷாரின் எதிர்காலமும்!

– சிறப்புக் கட்டுரை



என்றான் குமார்.

''அடப்பாவி! நண்பனா இருந்து இப்படிப் பொய் சொல்லி மாட்டி வைக்கி றியே!''

''நண்பன்கறது வேறே. கொலைங் கறது வேறே. பொய் சொல்லச் சொல் றியா?''

இருவரையும் மாறி மாறிப் பார்த்த இன்ஸ்பெக்டர் ரமேசனிடம் கேட்டார்.

''ராஜசேகருக்கும் உனக்கும் என்ன தொடர்பு?''

ரமேசன் பேசாமல் இருந்தான்.

''சொல்லு மேன்.''

''நான் சொல்றேன் சார்.'' குறுக்கிட் டான் குமார். ''இவன் அவரை பிளாக் மெயில் செய்துட்டிருந்தான் சார்.''

இன்ஸ்பெக்டரின் முகத்தில் கடுமை கூடியது.

''சொல்லு மேன். நிஜமாவா?''

''ஆமாம் சார்'' என்றான் ரமேசன். ''இவரைப் பத்தின ரகசியம் ஒண்ணு தற் செயலா எனக்குக் கிடைச்சது. அதை வச்சுப் பயமுறுத்தி அப்பப்போ இவர்கிட்டே பணம் வாங்கினேன்.''

''ம்... அப்புறம்?''

''இவரை மிரட்டி இவரோட ஒரே மக ளைக் கல்யாணம் செய்துக்கலாம்னு முடிவு செஞ்சேன். அதுக்கு ஒப்புதல் சொல்லி, அதைப் பத்திப் பேசத்தான் வரச் சொன் னாரு. வந்தேன். பார்த்தா இவர் செத்துக் கிடக்காரு.''

இன்ஸ்பெக்டர் யோசித்தார். கேட்டார்.

''அது என்ன மேன் இவரைப் பத்தின ரகசியம்?''

''இருபது வருஷத்துக்கு முந்தின சமா சாரம். அப்போ ரகுராமன்கறவரு இவரோட கூட்டாளியா இருந்தாரு. பண விஷயத்துல அவரை மோசம் செஞ்சு கடனாளியாக்கிட் டாரு. அதனால் அவரு ரொம்பவும் துன்பப் பட்டுத் தற்கொலை செஞ்சுக்கிட்டாரு. அதன் பின்னால அந்தக் குடும்பம் ரொம்ப வும் சீரழிஞ்சு போச்சு.''

இன்ஸ்பெக்டர் திரும்பவும் யோசித் தார். அவர் பார்வை ஒருமுறை ராஜசேகரின் உடல் மீது சென்று திரும்பியது. அவர் மார்பில் செலுத்தப்பட்டிருந்த கத்தி அவரை உறுத்தியது.

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவராக ரமேசனிடம் கேட்டார்.

''நீ சொல்றது எல்லாமே நிஜம் தானே?''

''ஆமாம் சார்.''

''அப்போ நீ என்கிட்டே சொன்னது எல்லாத்தையும் ஒரு பேப்பர்ல எழுதிக் கொடு.''

மேஜை மேலிருந்த காகிதத்தில் அவசர மாக எழுதத் தொடங்கினான் ரமேசன். அவன் எழுதி முடிக்கும் வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு, குமார் பக்கம் திரும்பி -

''மிஸ்டர்! நீயும் நடந்ததையெல்லாம் எழுதிக் கொடு.''

குமார் திடுக்கிட்டான்.

''எதுக்கு சார்?''

''உன்னைத்தானே மேன் ராஜசேகர் அனுப்பினாரு! உனக்கும் இந்த விவரமெல் லாம் தெரிஞ்சிருக்கில்ல! அதனாலதான்.''

குமாரும் ஒரு தாளில் எழுதத் தொடங்கி னான்.

இன்ஸ்பெக்டரின் முகம் மலர்ந்தது.

''ஐயாவுக்கு இடது கைப் பழக்கம் போலிருக்கு!''

சட்டென்று நிமிர்ந்தான் குமார்.

''என்ன பார்க்கறே? ரெண்டு விஷயம் ஆரம்பத்திலேருந்தே எனக்கு நெருடலா இருந்தது. ஒண்ணு, ராஜசேகர் போன் செய் யாம லெட்டர் கொடுத்து அனுப்பினது ஏன்? ரெண்டாவது, அவர் மார்பில கத்தி செருகப்பட்டிருந்த கோணம். உங்ககிட்டே பேசும்போதெல்லாம் அதான் யோசனை. நீ எழுத ஆரம்பிச்ச போதுதான் சட்டுனு புரிஞ் சுது. இடது கைப் பழக்கமுள்ளவன் குத்தி னாத்தான் அந்தக் கோணம் கிடைக்கும்னு. இப்போ சொல்லு, ஏன் அவரைக் கொலை செய்தே?''

''ரகுராமனோட மகன்தான் நான். எங்க குடும்பம் சீரழியக் காரணமானவனை ரொம்ப நாளாத் தேடிட்டிருந்தேன். போன மாசம் இங்கே வேலைக்குச் சேர்ந்தப்புறம் தான் அது ராஜசேகர்னு கண்டுபிடிச்சேன். பழிவாங்கச் சரியான சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தேன். சரியான சூழ்நிலை இன் னிக்குத்தான் கிடைச்சது. ரமேசன் மாட் டிக்குவான், நான் தப்பிச்சுடலாம்னு நினைச் சேன்.''

''அடப்பாவி'' என்றான் ரமேசன்.

''ஸ்டேஷனுக்குப் போகலாமா?'' என் றார் இன்ஸ்பெக்டர்.

நவரஸ
நினைவுகள் - 3

வாஹினியிலிருந்து வந்த வாய்ப்பு!

ஜெமினி கணேசன்! அவர்தான் ஜெமினி நிறுவனம் சார்பாக என்னை பேட்டி கண்டு, 'வாய்ப்பு வரும் போது சொல்லியனுப்புகிறேன்' என்று கூறி அனுப்பி வைத்தார். ஒரு dashing hero வாக, காதல் மன்னனாக - சினிமா ரசிகர்களிடையே அறியப்பட்ட ஜெமினி கணேசனிடம் எனக்கு ஒரு சகோதர உணர்வே ஏற்பட்டது. எங்கள் உறவில் எப்போதுமே அந்த நேசம் நீடித்திருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் எனக்கு ஒரு சகோதரரைப் போல் உதவியிருக்கிறார் ஜெமினி. முதல் சந்திப்பின்போதே அவரிடம் ஒரு நம்பிக்கை கொள்ளும்படி உள்ளுணர்வு உந்தியது.

வீட்டுக்குத் திரும்பிய நான், மிகுந்த நம்பிக்கையுடன் ஜெமினி அலுவலகத்திலிருந்து வாய்ப்பு வரும் என்று காத்திருந்தேன். அப்படியொரு வாய்ப்புக் கிடைத்து விட்டதாகவும் அதனால் என் கஷ்டங்கள் தீர்ந்து விட்டதாகவும் கற்பனை கூட செய்து பார்த்தேன்.

வாய்ப்பும் வந்தது. ஆனால் ஜெமினி நிறுவனத்திடமிருந்து அல்ல... வாஹினியிலிருந்து! அந்த வாய்ப்புக் கிட்டிய விதமே ஒரு சுவையான கதை.

கொம்மூரி பத்மாவதி அந்தக் காலத்தில் பிரபல எழுத்தாளர். அவர் மகன் சாம்ப சிவராவும் எழுத்தாளர்தான். இவருடைய சகோதரிகள் தாரா, உஷா இருவரும் எனக்குச் சிறு வயது முதல் சிநேகிதிகள். இவர்களுக்கு என் குடும்ப நிலைமையை எடுத்துச் சொல்லி, நான் சம்பாதிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் ஏதேனும் சினிமா வாய்ப்புக்குச் சிபாரிசு செய்யும்படி கூறினேன்.

அவர்களும் எனக்காக பி. என். ரெட்டியிடம் சிபாரிசு செய்தார்கள். 'ரேடியோ நாடகங்களில் நடித்துள்ள ஜானகி என்ற பெண்' என அவர்கள் என்னை வர்ணிக்கக் கேட்ட ரெட்டி, "ஓ! அந்தப் பெண்ணா? அவளுக்கு ஏற்கெனவே நான் ஒரு வாய்ப்பு அளித்த போது நடிக்க மறுத்து விட்டாளே!" என்று நினைவுகூர்ந்திருக்கிறார்.


● ஹரிபாபு


● நாகிரெட்டி

ஆச்சரியப்பட்டாலும் என் நண்பர்கள் சமாளித்துக் கொண்டு என்னுடைய அன்றைய நிலைமையை விளக்கி, மீண்டும் வாய்ப்புக் கேட்டிருக்கிறார்கள். பி. என். ரெட்டியும் எனக்கு உதவ முயற்சி செய்வதாகக் கூறி அவர்களுக்கு விடைகொடுத்திருக்கிறார்.

விதி எப்படி விளையாடுகிறது பாருங்கள்! முன்பு நான் ரேடியோ நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த போது என் குரல் பிடித்துப் போய், என்னைப் பற்றி விசாரித்தார் பி. என் . ரெட்டி. 'சினிமாவுக்கு ஏற்ற முகம் ஜானகிக்கு இருக்கிறதா?' என்று ரேடியோ வட்டாரங்களில் கேட்டதோடு, ரேடியோ ஸ்டேஷனில் என்னை நேரிலும் சந்தித்து, 'நடிக்கிறாயா?' என்று கேட்டார். அப்போது அந்த வாய்ப்பை நான் ஏற்கவில்லை.

ஆனால் மூன்று வருடங்களுக்குப் பிறகு அதே ஜானகிக்கு நடிக்க வாய்ப்புத் தரும்படி பி. என். ரெட்டிக்குச் சிபாரிசு செய்யப்பட்டது! அவர் எனக்கு வாய்ப்புத் தர மறுத்திருக்கலாம், ஆனால் அப்படிச் செய்யவில்லை. தாம் அப்போது படம் ஏதும் எடுக்காததால் உடனே தமது சகோதரர் நாகிரெட்டிக்கு போன் செய்தார். வாஹினியில்

சௌகார் ஜானகி


எனக்கு ஸ்க்ரீன் டெஸ்ட் எடுக்க ஏற்பாடாயிற்று.

நான் நுழைந்த முதல் ஸ்டுடியோ வாஹினிதான். (அது பிற்பாடுதான் விஜயா - வாஹினி ஆயிற்று). அன்று ஸ்க்ரீன் டெஸ்டுக்காக எனக்கு மேக்-அப் போட்டவர் பிரபல மேக்-அப்மேன் ஹரிபாபு. அன்றைய முன்னணி ஹீரோயின்கள் அவரிடம் ஒப்பனை செய்து கொள்ள கியூவில் காத்திருப்பார்கள். அவ்வளவு பெரிய கலைஞர் எனக்கு ஒப்பனை செய்த போது நான் மிகவும் விநோதமாக உணர்ந்தேன்.

முகத்தில் தேங்காய் எண்ணெய், கடலை மாவு தவிர, வேறு எதுவும் தடவி அறியாத நான் இப்படி அரிதாரம் பூசிக் கொள்வதற்கு ஒரு ஸ்பெஷலிஸ்ட் முன் நிற்பேன் என்று கற்பனை கூட செய்ததில்லை.

பவுடரை ஒத்தி முடித்த பின் ஹரிபாபு என் முகவாயை இலேசாக நிமிர்த்தி ''ஸ்மைல்! ஸ்மைல்!'' என்றார். என் உதடுகளில் பூசத் தயாராக அவர் கையில் லிப்ஸ்டிக்! (சிரிக்கும் போது விரியும் உதடுகளில் பூசினால்தான் லிப்ஸ்டிக் கச்சிதமாகப் படியும்.)

என் வாழ்க்கையில் நேர்ந்த சோகங்கள், ஏமாற்றங்கள், வேதனைகள் யாவும் அந்தக் கணத்தில்தானா நினைவு வரவேண்டும்! நெஞ்சு நிறைய முட்டி மோதிய வேதனையைப் பின்னுக்குத் தள்ளி விட்டு ஒரு வெற்றுப் புன்னகை செய்தேன்.



✱ எல். வி. பிரசாத்

மேக் அப் முடிந்ததும் எழுந்து கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துக் கொண்ட போது ஆச்சரியம் தாங்கவில்லை; அது என் முகம்தான் என்று நம்ப முடியவில்லை. புருவங்களை உயர்த்தி, கண்களை மையினால் மலரச் செய்து, சற்றே கூர்மைக் குறைவான என் மூக்கை ஏதோ மாயா ஜாலத்தினால் எடுப்பாகத் தோன்றச் செய்து... ஹரிபாபுவின் கலைத் திறனைக் கண்டு பிரமித்ததோடு மேக் அப்பின் முக்கியத்துவத்தையும் தெரிந்து கொண்டேன்.



✱ சக்ரபாணி

ஏழு வித பாவங்களை வெளிப்படுத்தும் வெவ்வேறு வசனங்களைப் பேசச் சொன்னார்கள். வசனங்களை மனப்பாடம் செய்து சரியான ஏற்ற இறக்கங்கள் கொடுத்து, உணர்ச்சி ததும்பப் பேசினேன். ரேடியோ நாடகங்களில் பேசிப் பழக்கமிருந்தாலும் திரை நடிப்பு வேறல்லவா...? முகத்தில் போதுமான அளவு பாவம் வெளிப்பட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை. ஸ்க்ரீன் டெஸ்ட் முடிந்ததும் 'நாங்களே பிற்பாடு தகவல் சொல்லியனுப்பும் போது வந்தால் போதும்' என்று கூறி என்னை வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

மூன்று நாட்கள் கழித்து நாகிரெட்டி, சக்ரபாணி, எல்.வி. பிரசாத் ஆகிய மூவரும், தி. நகர் மூசா சேயிட் தெருவிலிருந்த என் வீட்டைத் தேடி வந்தார்கள். அவர்கள் வந்த காரிலேயே என்னை ரஷஸ் பார்க்க அழைத்துப் போனார்கள்.

நாங்கள் அரங்குக்குப் போய்ச் சேர்வதற்குள் விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. தட்டுத் தடுமாறிப் போய் ஒரு சீட்டில் அமர்ந்து கொண்டேன். திரையில் படம் ஓடியது. ஞளாப் போர்ட் தட்டப்பட்டதைத் தொடர்ந்து எனது முகம் பிரம்மாண்டமாகத் தெரிந்தது.

அந்தக் காட்சியில் அணிந்து கொள்ள எனக்குத் தரப்பட்ட சிறு பூக்களுடன் கூடிய சிவப்புப் பாவாடையும் நீல தாவணியும் இன்னமும் நினைவிருக்கின்றன. நான் அணிந்திருந்த உடையைக் களைந்து அவற்றை மாற்றிக் கொள்ள நான் கூச்சப்பட்டதையும், அஞ்சம்மா என்ற உதவியாளர் என்னைச் சமாதானப்படுத்தி அவற்றை அணியச் செய்ததையும் நான் இன்னமும் மறக்கவில்லை.

அந்த காஸ்ட்யூமுடன் வங்கி, ஒட்டியாணம் போன்ற நகைகளையும் அணிந்து நான் நடித்த முதல் காட்சிகள் தொடர்பாக இன்னொரு மறக்க முடியாத சம்பவமும் உண்டு.

ரஷ் காட்சிகள் ஓடிக் கொண்டிருந்த போதே இருளில் ஒரு பெண் குரல் பலமாக ஒலித்தது.

அது யாருடைய குரல்? அவர் திரையில் படம் ஓடிக் கொண்டிருக்கும்போதே அவசரமாக என்ன பேசினார்?

(தொடரும்)



ஒட்டகப் பாலின் மகிமைகள்!

வறட்சியும் பஞ்சமும் வதைக்கும் கடும் வெயில் காலத்தில் மனிதர்களும் பயிர்களும் வாடுவது போல் ஆடு மாடுகளும் வாடி, வருந்துகின்றன. அவை தரும் பாலின் அளவு மிகவும் குறைந்து போகிறது. இதனால் அவற்றை வளர்ப்பவர்களுக்கு ஏராளமான நஷ்டம் உண்டாகிறது. நஷ்டத்துக்கும் கஷ்டத்துக்கும் இடையே கால்நடைகளுக்கு உணவும் தண்ணீரும் அளித்து நன்கு பராமரிப்பது இயலாத காரியமாகிப் போவதால், அவை நோயினாலோ வறட்சியினாலோ இறந்து போக - மேலும் நஷ்டம்!

ஆடு மாடுகளுக்குப் பதிலாக ஒட்டகங்கள் வளர்ப்பது இந்தப் பிரச்னைக்கு ஓர் எளிய தீர்வு என்கிறார் இஸ்ரேல் நாட்டு ஒட்டக நிபுணர் பேராசிரியர் யாகில். (Reuven Yagil.) ஐ. நா. சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) ஆலோசகர், யாகில்.

வறண்ட இடங்களில் வளரும் ஆடு மாடுகள் உடல் சூடு அதிகரிக்காமலிருக்க ஏராளமான நீரை வெளியேற்ற வேண்டியிருக்கிறது. இதனால் வெயில் காலத்தில் இந்த விலங்குகள் அளிக்கும் பாலின் அளவு மிகவும் குறைந்து போகிறது. ஆனால் ஒட்டகத்தின் உடல் அமைப்பு, கடுமையான வறட்சியையும் தாங்கும் விதமாக இயற்கையாகவே படைக்கப்பட்டிருக்கிறது. கடுங் கோடையில் அதன் உடல் சூடு அதிகரித்தாலும் ஒட்டகம் பாதிக்கப்படுவதில்லை என்பதோடு, முள் செடிகளையும், உப்புச் சத்துள்ள தழைகளையும் தீனியாக உட்கொண்டு வைட்டமின் சத்து நிறைந்த பாலை அது அளிக்கிறது. கோடை காலத்தில் பாலின் அளவு குறைவதில்லை.

ஒட்டகத்தின் இன விருத்திக்கென ஆராய்ச்சிகள் நடந்து வருவதையும் யாகில் குறிப்பிடுகிறார். ''பால் வளமுள்ள ஒட்டகத்துக்கு ஹார்மோன் சிகிச்சை அளிப்பதன் மூலம் நிறைய கருக்களை உற்பத்தி செய்து, அந்தக் கருக்களை பிற (பால் வளம் குறைந்த) ஒட்டகங்களின் கருப்பையில் வளரச் செய்யலாம். இந்த முறையில் விரைவாக உயர் ஜாதி ஒட்டகங்களின் எண்ணிக்கையைப் பெருக்க முடியும்.''

மாட்டுப் பாலில் உள்ளதை விட மும்மடங்கு வைட்டமின் சி சத்து ஒட்டகப் பாலில் உள்ளது என்பதை ஆராய்ச்சி மூலம் நிரூபிக்க உழைத்து வருகிறார் யாகில். மேலும் அதில் வைரஸ் மற்றும் பாக்டீரியா நுண்கிருமிகளை எதிர்க்கும் சக்தியும் இயல்பாகவே அமைந்துள்ளதாம். அதனால் ஒட்டகப் பாலின் மருத்துவக் குணங்கள் குறித்தும் ஆராய்ச்சி நடக்கிறது.

''கென்யா போன்ற வறண்ட நாடுகளில் ஒட்டக மையங்கள் அமைத்து அந்த நாட்டு மக்கள் ஒட்டக வளர்ப்பு, பராமரிப்பு குறித்து அறிந்து கொள்ள உதவலாம். உணவுப் பஞ்ச காலத்தில் இந்த மையங்களிலிருந்து ஒட்டகப் பால் பெற்றுச் சமாளிக்கலாம்'' என்கிறார் யாகில்.

அடிக்கடி பஞ்சம் உண்டாகும் வறட்சிப் பிரதேசங்கள் இந்தியாவிலும் இருப்பதால், யாகிலின் ஆலோசனைகளை நாமும் ஆராய்வது உபயோகமாகவே இருக்கும்.

ஆதாரம் : நியூஸ் ஃப்ரம் இஸ்ரேல்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.



என் தந்தையின் நண்பரது அலுவலகத்தில் ரிஸப்ஷனிஸ்ட் வேலை காலியாக இருப்பதை அறிந்து, அவ்வேலைக்கு விண்ணப்பித்தேன். நேர்முகத் தேர்வுக்கான அழைப்பும் வந்தது.

“இது மிகவும் பொறுப்பான வேலை. மேலும் உனக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டுமே.:. வேறு ஏதாவது வேலை இருந்தால் சொல்லியனுப்புகிறேன்” என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஓர் அரிய வாய்ப்பு கை நழுவிப் போகிறதே என்று எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

ஒருநாள் வாரப் பத்திரிகை ஒன்றைப் புரட்டும் போது அதில் “யெஸ் ரூபா ஜெகன் ஸ்பீக்கிங்” என்ற தலைப்பில் திருமதி. ரூபா ஜெகன் அவர்கள் விவேகானந்தா கல்வி நிலையத்தில் தபால் மூலம் ஆங்கிலம் சரளமாகப் பேசப் பயிற்சி பெற்ற செய்தி வெளியாகியிருந்தது.

இப்பயிற்சியில் சேர்ந்தால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் துளிர் விட்டது.

என் தந்தையின் அனுமதி பெற்று நானும் இப்பயிற்சியில் சேர்ந்தேன்.

ஓர் ஆசிரியர் எதிரில் இருந்து பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதைப் போல, பயிற்சி மிகவும் எளிய முறையில் அமைந்திருந்ததால் மிகுந்த ஆர்வத்துடன் இப்பயிற்சியினை மேற்கொண்டேன்.

இப்பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது ஆங்கிலத்தில் பயமின்றி சரளமாகப் பேச முடிகிறது.

ஆங்கிலத்தில் பேசத் தெரியாத காரணத்தினால் எந்த வேலை எனக்குத் தர மறுக்கப்பட்டதோ, அதே ரிஸப்ஷனிஸ்ட் வேலை எனக்கு வேறு ஒரு பிரபல நிறுவனத்தில் கிடைத்துள்ளது.

“THE INSTITUTE'S COACHING IS SIMPLY SUPERB.”

நீங்களும் தபால் மூலம் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு. நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்
9, நடேசன் தெரு, தி. நகர்,
சென்னை-600 017.

NAGA

வெளிநாட்டு மாணவர்களுக்கென விசேஷ வெளிநாட்டு சேவைப் பிரிவும் இயங்கி வருகிறது.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka